கம்பன் அடிப்பொடி
KAMBAN ADIPPODI
(SAW. GANESAN)

புது வாழ்வு

இன்பவாணன்



புதுவாழ்வு

இன்பவாணன்

கதிரவன் பதிப்பகம்,
12 ஆ, கிருட்டினன் கோவில் வடக்குத்தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627002

13 தை 2008

கதிரவன் பதிப்பகம்

ஞா. தாவீது செபஞானம்
(19—3—1944)

விலை உருபா மூன்று

C. M. S. அச்சகம், பாளையங்கோட்டை

பதிப்புரை

திருநெல்வேலித் தனித்தமிழ் இலக்கியக் கழகத்தின் முன்னுள் பொருளாளர் பாவலர் இன்பவாணன் (ஞா. தாவீது செபஞானம்) பழகு தமிழில் ''புதுவாழ்வு'' என்னும் பெயரால் பாநூல் ஆக்கியுள்ளார்.

''இளமையிற் சிறந்த வளமையில்லை'' என்பது நற்றமிழ் நல்கும் நலமார்ந்த சொற்றொடர். நெல்லைத் தொலைபேசி நிலையத்தில் பணியாற்றிய காலத்திலிருந்து 'தமிழரசன்' என்னும் புனை பெயரில் பாப்புனையும் ஆற்றலும் ஏற்றமும் வாய்ந்தவராக விளங்கி வருகிருர் இன்பவாணன்.

நானூற்று எட்டுப்பாக்களுடன் இளைஞன் முகிலன் வாழ்வியலை எடுத்துரைக்கிறது இந்நூல். தமிழ்த்தாயை வாழ்த்திடும்போது,

''தாமாக அயல்நாட்டார் விரும்பிவத்து கற்கின்ற
தேமாவே! தித்திக்கும் நறுந்தேனே! படிப்பார்க்குச்
சுவைகூட்டும் புவியமுதே! தனித்தமிழே! பலாச்சுளையே,
நவைதீர்க்கும் நற்றமிழே! நலமோங்கி வாழியவே!''

என்று எடுத்துரைக்கிருர். உலகோர் அனைவரும் உயர் தனிச் செம் மொழியாய் விளங்கும் தமிழைக் கற்க விழைவதை நயமாய்க் குறிப்பிட்டுள்ளார்.

செல்வியின் சீரழகை வியந்து பாராட்டும் வேளையில்,
'‘தேங்காயின் வெண்ணிறமோ பற்கள்?'' எனவும்
''நீண்டபனை மரம்போலக் கூந்தல்'' எனவும்
எழில்மிகு புதிய உவமைகளுடன் எடுத்தியம்பியுள்ளார். முகிலனை அறிமுகப்படுத்தும்போது,

''மதியார் தமையும் மதிக்கின்ற
மதிகொள் இளைஞன் ஒருவனுமே
எதுகை மோனை நிறைந்துள்ள
எழில்சால் கவிதை போலிருந்தான்''

என்று இயல்பாகத் தெரிவிக்கிருர்.

நண்பர் மன்ற விழாவில் ''எதிர்காலம்'' என்னும் பொருள் குறித்துப் போட்டி போட்டுக் கொண்டு சொற்பொழிவாற்றும் முகிலனும் செல்வியும் கல்லூரிக் கல்வியை முடித்து இல்லற வாழ்வில் ஈடுபடுவதே கதை. செல்வியும் இன்பமும் முகிலன் வாழ்வில் குறுக்கிடுவதும் இன்பம் தன்னைத்தானே ஈகப்படுத்தி நீங்குவதும் செல்வியின் அன்பு ஓங்குவதும் நயமாக நவிலப் பட்டுள்ளன.

மருத்துவ மேற்படிப்புக்காக இலண்டன் சென்று ஈராண்டுகாலம் பயிலுவதும் ஏந்திழை இன்பம் முகிலனை விரும்பி மருவுவதும் எளிய நடையில் தெளிவுறச் சொல்லப்பட்டுள்ளன. உலக நலம் நாடும் பெரியோர் பலர் உழைத்திடும் இலண்டன் மாநகர் பற்றி அஞ்சல் வாயிலாகத் தெரிவித்திடும் திறம் பாராட்டத்தக்கது. நிலத்தியல்பால் நீர் திரிவது போன்று எழிலார் முகிலன் தனை மறந்து செயல் புரிந்து அல்லலுறுகின்றான்.

முகிலன் தன்னை மறந்தானோ என்று கலங்கும் செல்வி துடிதுடித்து வடித்திடும் கடிதம் இயல்பு நவிற்சிக்கு எடுத்துக்காட்டு!

''ஏனஞ்சல் எனக்கெழுத வில்லை, நீங்கள்?
ஏதேனும் பிழையாக எழுதிட்டேனோ?
தேனமுதே! தெரிந்தபத நீரே! என்னைத்
தேம்பவிட என்றெண்ணிநீர்; உங்கள் அஞ்சல்
தானெனக்கு ஆறுதலாய் உள்ள(து) இங்குத்
தமிழ் கூடக் கசக்கிறது; இன்னும் சொன்னால்
நானங்கு வரலாமா என்றென் உள்ளம்''
நச்சரித்துக் கொண்டுள்ளது; இதைஎன் செய்ய?

''தேர்ந்த புலவர் தம் உணர்ச்சியைச் சில சொற்க ளால் நாமும் பெறுமாறு செய்வர்'' என்பர் ஆங்கில

அறிஞர் வின்செசுடர். * தாய்மாமன் திருச்செல்வம் மறைவு குறித்துக் கலங்கிப் புலம்பும்போது கசிந்துருகச் செய்கிறார்.

"மனமெனக்குத் துணியவில்லை உடலை நல்ல
மல்வீரர் போல் வைத்துப் பேணிவந்த
இனங்காத்த பெருவீரர்! இவரை ஏன்தான்
எமன் கவர்ந்தான்? இழந்த உயிர் மீட்பதற்கு
எனக்கெவரும் உரைத்திருந்தால் அதனைச் செய்து
எப்பாடு பட்டேனும் மீட்டு என்றன்
மனத்துயரும் விட்டிருப்பேன்; ஐயோ என்தாய்
மாமனுயிர் போனதுவே நானில்லாமல்!"

கலைபயிலும் மாணவர்க்கு இந்நூல் பெரிதும் சுவை பயக்கும். "கல்லூரி என்பது கலைமகளின் கோவில்" என்று எழுத்தாளர் வி.ச காண்டேகர் கூறுவர். இளை யோரும் வளையோரும் போட்டிகளில் ஆர்வங் காட்டிடு வதும், அத்தகைய நிகழ்ச்சிகள் வாழ்வில் திருப்பு முனையாக அமைவதும் உலகியல்பு. இத்தகு அடிப்படைக் கருத்தைக் கொண்டு நலமுறத் தொடுக்கப்பட்ட நானூற்று எட்டுப் பாக்களின் தொகுப்பாகத் திகழ்கி றது "புது வாழ்வு".

பாவலர் இன்பவாணன் பல்வேறு நூல்களை எழுதி டும் திறன் வாய்ந்தவர். முதல் முயற்சியாக மலர்ந் துள்ளது "புதுவாழ்வு"; அடுத்து அவர் தரவிருக்கும் 'காதற் கிளிகள்' போன்றவை அவர்தம் ஆற்றலுக்கு ஏற்ற சான்றுகளாகும்

---

* In a single line, sometimes in a single epithet the poet can flash upon our imagination a picture that shall seem filled with passionate emotion."—
C. T. WINCHESTER
"Some Principles of Literary Criticism" Page 135

ஊரறியும் தமிழில் எளிமையும் தெளிவும் மிக்கதாக அமைந்துள்ள "புதுவாழ்வு" இளையோருக்கு வாழ்க்கை வழிகாட்டி! இனிய தமிழ் சுவைக்க விரும்பும் மாணவர்க்கு மாமருந்து! இலக்கிய நலம் காண விழைவோர்க்கு எழிற் கூடம்!

திவ்யப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் சாலை. இளந்திரையன் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளவர். அவர்கள் கூறுவது போன்று சிலப்பதிகாரச் சாயலில் நூல் அமைந்துள்ளது. கதைச் சுருக்கமும் முதலில் தரப்பட்டுள்ளது.

எழுச்சிமிகு இளைஞர் ஒருவரின் பெரு முயற்சியைத் தமிழகம் வரவேற்கும் என்னும் நம்பிக்கையுடன் இந் நூலைப் பதிப்பித்து வழங்குகின்றோம்.

பா. வளன் அரசு
தலைவர்
தனித்தமிழ் இலக்கியக் கழகம்
பாளையங்கோட்டை.

திருநெல்வேலி-2
26 - 1 - 1977

படையல்

என்னை ஈன்று வளர்த்திந்த
எழில்சேர் உலகில் ஆளாக்கி
இன்னும் என்றன் நலம்கருதி
எண்ணில் பயன்கொள் உரைநல்கும்
அன்னை செபக்கனி அடிமலரில்
அடியேன் வரைந்த நூலிதனை
அன்பு நெஞ்சின் மகிழ்வுடனே
ஆசைப் படையல் செய்கின்றேன்.

—இன்பவாணன்



என்னுரை

புதுவாழ்வு உங்களைத் தேடி வருகிறது எளிமை, இனிமை, புதுமை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு நடைபயின்று வருகின்ற புதுவாழ்வை விரும்பி வரவேற்று, ஆக்கிய என்னை ஊக்கிடுவீர் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஏழெட்டு ஆண்டு கட்கு முன்னரே வெளிவர வேண்டிய புதுவாழ்வுக்கு இப்போதுதான் காலம் கனிந்திருக்கிறது; வாழ்வு பிறந்திருக்கிறது.

நூலுக்குச் சிறந்த முறையில் அணிந்துரை நல்கிய அறிஞர் சாலை இளந்திரையன் M. A; Ph.D. அவர்கட்கும், இம்முயற்சியில் எனக்கு உறுதுணை யாய் நின்று சீரிய அறிவுரைகள் நல்கிய அண்ணன் பா. வளன்அரசு M. A. அவர்கட்கும் என்றன் அன்பின் நன்றி என்றும் உரியது. நூல் பொலிவாக வெளி வரப் பணியாற்றிய கதிரவன் பதிப்பகத்தார்க்கும், அருமையான முகப்பு ஓவியம் வரைந்த ஓவியர் செகநாதனுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, காலத்தைக் கனி வித்து உங்கள் கைகளில் 'புதுவாழ்வு' தவழத் துணை செய்த இறைவனின் திருவருளை நினைந்து வியந்து போற்றுகிறேன்.

அன்பன்

இன்பவாணன்

தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்

முனைவர் சாலை இளந்திரையன் அவர்களின்

அணிந்துரை

வளர்க, வாழ்க!

நான் ஒரு கவிஞன் என்பதால், எனக்குப் பிறகு கவிதை பாட முயலும் இளைஞர்களை நான் ஊக்க வேண்டும்; அவர்கள் மகிழ்ச்சி அடைந்து எழுச்சி அடையும் வண்ணம், அவர்களை நான் வாழ்த்த வேண்டும், அது, என்னுடைய மொழிக்கும் அதன் யாட்டிலக்கியத்துக்கும் நான் ஆற்ற வேண்டிய கைம் மாறு அல்லவா? இந்த விழைவையும் அதன் விளைவை யும் முன்வைத்துத்தான்,- முன்பு எனக்கு அறிமுகம் இல்லாவிட்டாலும்,— தம்முடைய கவிதைக் கதையோடு என்னிடம் வந்தார் தோழர் இன்பவாணன்.

எத்தனையோ பணிகளை மேற்கொண்டிருந்தும், தம்மை ஓர் 'ஆசிரியன்' என்று கருதிக் கொள்வதிலேயே பேருவகையும் பெருமிதமும் அடைவாராம் புரட்சி உலக மேதை மா சே துங்கு. என்னுடைய பணிகள் எந்தெந்தத் திசைகளில் கிளை வீசினாலும்,— அடிப் படையில் நான் ஒரு கவிஞன் என்னும் நினைப்பே எனக்கு என்றைக்கும் மகிழ்ச்சி தருகிறது. அது மட்டு மன்று, 'கவிஞர்கள் என்போர் கவிஞர்களாகவே பிறக் கிறார்கள்' என்னும் பழைய நம்பிக்கையை நான் ஏற்பதில்லே. கிடைக்கின்ற சுற்றுச் சார்புகளாலும் உற்சாகங்களாலுமே ஒருவன் கவிஞனாகிச் சிறக்கிறான் என்பது என் கருத்து. இந்தக் கருத்து உடையவனாக இருப்பதாலும்,— ''கவிதை பாட விழைகிறேன்'' என்று ஆர்வத்தோடு வருகின்ற என் இளவல்களை உற்சாகப்படுத்த வேண்டியது என் கடமையாகிறது.

எனக்கு உள்ள பன்முகப் பணிகளின் இடையி லேயும் ''புதுவாழ்வு'' என்னும் இந்தக் கவிதைக்

கதையை ஒருமுறை படித்து முடித்தேன். அந்த ஒரே வாசிப்பில், 'இந்தத் தம்பி' கவிதையை விடக் கதை அம்சத்துக்கே இதிலே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்' என்னும் எண்ணம் என்னுள் எழுந்தது; 'நமது சிலப்பதிகாரத்தின் உள்ளோட்டமே, காலப்புதுமைக்கு ஏற்றதோர் வடிவத்தில், இந்தக் கதையாக மலர்ந்திருக்கிறது' என்ற ஓர் நினைவும் வந்தது.

இளைய கொடிகள் முதிய மரக்கிளைகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு எழுவதிலே தவறு ஒன்றும்இல்லை. அந்த வகையில், இன்பவாணனின் இந்தக்கதை, முந்தையோர் சிந்தனையை அடியொற்றி எழுந்து நிற்க முயல்வதிலும் குறை ஒன்றும் இல்லை. நடை கற்கும் குழந்தை தன்னுடைய அம்மாவையும் அப்பாவையும் பார்த்துத் தானே அதைத் தொடங்குகிறது?

இவைகளுக்கு அப்பால், இவருடைய கவிதை சிற்சில இடங்களில், பாத்திர இயல்புக்கும் நிகழ்ச்சிச் சூழலுக்கும் ஏற்றவாறு அமைந்திருப்பதைக் குறிப்பிட வேண்டும்: இன்பத்தைக் காதலித்து, மணம்புரிந்து கொண்டான் முகிலன்; ஒரு மகவுக்குத் தந்தையும் ஆனான்; பின்னர் பிரிந்து போய்விட்டான். அவனுக்குக் கடிதம் வரைகிறாள் இன்பம். அக்கடிதம் இப்படித் தொடங்குகிறது:

அண்ணலே! அடிக்கரும்பே !
அடக்கமே உருவெடுத்த
கண்ணதால், கண்ணியத்தால்
காவியம் பல படைத்தோய்!

அவனை உணர்ந்து தெளிந்து அனுபவித்த பட்டறிவு அவளுடைய பண்பிலே பிசைந்து இவ்வாறு தரப் படுகிறது.

அடுத்து ஒரு காட்சி: முகிலன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவனாகத் தனியே உட்கார்ந்திருக்கிறான்.

அவன் மனைவி செல்வி சொல்லிய சொல் ஒன்றும் அவன் செவியில் சரியாக விழுந்ததாகத் தெரியவில்லை. உடனே, சற்றே அன்புக்கோபம் மூண்டவளாக,

எவரிடத்தில் கேட்கிறேன், —
உம்மைத் தானே?
ஏன், பேசாதிருக்கின்றீர்?

என்று, சொல்லாலேயே, அவனை அவள் உலுப்பி எழுப்புவது இயல்பாகவும் அழகாகவும் இருக்கிறதல்லவா?

குழந்தையின் பெயர் சூட்டு விழா நிகழ்ச்சி ஏற்பாடாகியுள்ளது. அந்த நிகழ்ச்சியின் ஒரு கூறு பின் வருமாறு சொற்சித்திரமாகிறது:

மந்தையைப்போல் ஒரு கூட்டம், —
திருவிழா தான்!
மகிழ்ச்சிமிகக் கொண்டிருந்த
வேளை அங்கு
சந்தையைப்போல் பேச்சரவம்!
விருந்து, வேட்டு!

ஆர்ப்பாட்டம், மகிழ்ச்சி என்று வந்துவிட்டால், நமது மக்கள் ஆடுமாடுகள் போல் மந்தைகளாகித்தான் நிற்பார்கள் என்னும் உண்மையை அப்பட்டமாகத் தீட்டிக் காட்டிவிட்டார் இன்பவாணன். இன்றைக்கும், பொது நிகழ்ச்சிகளிலே, மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகமில்லாத பழங்குடிகள் போல்தானே நமது மக்கள் நடந்து கொள்ளுகிறார்கள்!.

இன்பவாணனிடம் முளைவிட்டுள்ள இந்தத்திறமை வளர்ந்து சிறக்க வாழ்த்துகிறேன். அவர் மூலம் தமிழுக்கு நல்ல பல இலக்கியங்கள் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

— சாலை இளந்திரையன்

புது வாழ்வு

(கதைச் சுருக்கம்)

சென்னை நகரில் செல்வ வளம் பொருந்திய தங்கப்பன்—முல்லை என்பாரின் ஒரே மகள் செல்வி. அவள் ஓர் அழகுச்சிலை; அன்பின் ஊற்று; பண்பும் படிப்பும் நிரம்பியவள்.

தாய்மாமன் திருச்செல்வத்தின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்து வரும் இளைஞன் முகிலன். ஊக்கமும் உயரிய நோக்கமும் ஒருங்கே வாய்ந்தவன். முனைப்போடு படித்து முதன்மை பெறுபவன். பொருளால் வறியவனாயினும் அறிவால் நிரம்பியவன். தாய் தந்தையை இளமையிலேயே நோய்க்குப் பலிகொடுத்தவன். படிப்புப் போட்டியால் ஒருவரை ஒருவர் வெறுத்து வந்தவர்கள் காலப்போக்கில் புரிந்து கொள்ளத் தலைப்படுகின்றனர். அன்புணர்வு காதலாகிறது; காதல் தொடர்கிறது; கல்லூரிக் கல்வியும் தொடர்கிறது.

மாநிலத்தின் முதல் மாணவனாக முகிலன் தேர்வு பெறுகிறான். அவனுடைய ஆர்வத்தையறிந்து மருத்துவர் கல்வி தொடர்வதற்கு அரசு வாய்ப்பும் வசதியும் நல்குகிறது. காலச் சுழற்சியில் மருத்துவக் கல்வியிலும் முதல்வனாக முகிலன் வெற்றி பெறுகிறான். அரசினர் மருத்துவ மனையில் மருத்துவராக வேலை செய்கிறான்.

செல்வி தமிழன்பின் காரணமாகத் தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொண்டே கல்லூரியில் தமிழ்த் துறையில் வேலை பார்க்கிறாள்.

முகிலன் – செல்வியின் காதல் எந்தவித மோதலும் இல்லாமல் இருதரப்புப் பெரியவர்களாலும் விரும்பி

வரவேற்கப்படுகிறது. தங்கப்பன் முகிலனிடம் விரைவில் திருமணத்தை நடத்தி வைப்பதாகச் சொல்கிருர். திருச்செல்வமும் உயரிய குடும்பத்தின் பெண் முகிலனுக்குக் கிடைப்பதறிந்து நெஞ்சம் பூரிக்கிருர்.

தன்னுடைய பணியை உண்மையுடனும் மகிழ்வுடனும் முகிலன் செய்துவர, தலைமை மருத்துவர்தம் அன்பும் நன்மதிப்பும் கிட்டுகின்றன. எவர்க்கும் எளிதில் கிடைக்காத அரியவாய்ப்பும் அதனுல் கிடைக்கிறது. மருத்துவத்தில் மேற்படிப்பு படிப்பதற்காக அரசின் செலவில் இலண்டன் செல்ல முகிலனைத் தெரிவு செய்கின்றனர்.

இலண்டன் செல்வதற்கு முன்பு திருமணத்தைச் செய்துவிடலாம் என்று பெரியவர்கள் விரும்புகின்றனர். ஆயினும் செல்வியும் முகிலனும் மேற்படிப்பு முடிந்தபின் மணஞ்செய்ய ஒப்புகின்றனர். இலண்டனுக்குச் சென்று மேற்கல்வியைத் தொடர்கிருன். அன்புக்காதலர் தமக்கு இடையே கடிதங்களை அடிக்கடி பரிமாறிக் கொள்கின்றனர்.

இலண்டனில் அவனேடு பயில்கின்ற 'இன்பம்' என்பவள் தமிழறிந்தவள். ஆதலால் இருவரும் தமிழில் பேசி மகிழ்கின்றனர். செல்வி என்னும் காதலி தமிழ் நாட்டில் முகிலனுக்ெனக் காத்திருக்கிருள் என்பதறியாத 'இன்பம்' முகிலனிடம் தாராளமாகப் பழகி நட்புக் கொள்கிருள். நட்பு காதலாகிறது. முகிலனும் தன்னுடைய முன்னுள் வாழ்வை மறந்து திரிகிருன். காதலின் முதிர்ச்சியில் இன்பம் கருவுறுகிருள். வேறு வழியின்றித் திருமணம் உடனடியாக நடக்கிறது; எளிமையாகவும் வீண் சடங்குகள் இல்லாமலும் நெருங்கிய நண்பர்கள் முன்னிலையில் திருமணம் நடந்து முடிகிறது.

செல்வியின் மடலொன்று வருகிறது. அவ்வமயம் முகிலன் வீட்டில் இல்லை, ஆதலால் இன்பம் அதனைப் படித்துப் பார்க்கிறாள்; உண்மை அறிகிறாள். மனம் வெதும்புகிறாள். வெளியிலிருந்து வந்த முகிலன் இன்பத்தின் வாட்டம் அறிந்து விவரம் வினவுகிறான். ''ஒன்றுமில்லை! தலைவலிதான்'' என்று மழுப்பி விடுகிறாள்

அழகொளிரும் ஆண்மகவு பிறக்கிறது. இருவரும் மகிழ்கின்றனர். இதற்கிடையில் குழந்தையைப் பார்த்து வாழ்த்தி விட்டுப் போக 'விக்டர்' என்பவன் வருகிறான், இவன் இன்பத்தைத் திருமணம் செய்ய முன்னர் விரும்பியவன். ஆனால் இன்பம் அவனை விரும்பவில்லை. ஒரு தலைக் காதலால் தோல்வியில் துவண்டவன் அவன்.

இன்பம் அவனிடம் அன்பைப் பொழிகிறாள். புதுக் காதல் என்று விக்டர் மகிழ்கிறான். இன்பம் - விக்டர் இருவரின் பேச்சும் சிரிப்பும் முகிலனை வெறி கொள்ளச் செய்கின்றன. மனமுறிவு ஏற்பட்டதால் மணமுறிவு ஏற்படுகிறது.

பையனை அழைத்துக் கொண்டு சென்னைக்குத் திரும்புகிறான் முகிலன். குழந்தை–அதுவும் முகிலனின் சாயலில் முகிலனோடு வந்திருப்பதை அறிந்து கேள்விக்குறியோடு நிற்கிறாள் செல்வி. அவள் முகக் குறிப்பறிந்து தன் வாழ்வுச் சூழலை வருத்தத்தோடு எடுத்துரைக்கிறான். என்றாலும் தங்கப்பனும் செல்வியும் அவனை மன்னித்து மீண்டும் முகிலனுக்கும் செல்விக்கும் திருமணம் நடக்கிறது.

இன்பம் கடிதம் போடுகிறாள். விக்டரோடு பழகியது வெறும் நடிப்பென்றும், அந்த நடிப்பிற்குக் காரணம் முகிலன் – செல்வி வாழ்வு மலர வேண்டும் என்பதால்

தான் என்றும் விரிவாக எழுதுகிறுள். மகன் எழிலனேப் போற்றி வளர்க்குமாறு செல்விக்கும் மடலில் குறிப்பிடுகிறுள். செல்வியும் எழிலனும் சேர்ந்திருக்கும் நிழற்படம் அனுப்பும்படி கோருகிறுள்.

அவள் அன்பின் கோரிக்கையை நிறைவேற்றுகிறுள் செல்வி. முகிலனும் செல்வியும் எழிலனுடன் இணைந்திருக்கும் இனிய காட்சியினேக் கண்டு மகிழ்ந்தபடி இருக்கும் இன்பத்தை, அவள் தன்னே ஏமாற்றிவிட்டாள் என்ற வெறியில் விக்டர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தானும் சுட்டுக் கொள்கிறுன். இன்பத்தின் துயர் வாழ்வை இளம்வழுதி என்னும் முகிலனின் நண்பன் 'தந்தி' மூலம் தெரிவிக்கிறுன். அஞ்சலிலும் விளக்கமாக எழுதுகிறுன்.

உண்மை உணர்ந்த முகிலன் பதறுகிறுன். செல்வி கண்ணீர் வடிக்கிறுள், எழிலனும் இன்னதென்றே தெரியாமல் அழுகிறுன். நீண்டநாள் துன்ப உருவாயிருக்கின்றனர். ஆள் செய்யாததை நாள் செய்யும் அல்லவா? நாள் ஆக ஆகத் துயரம் குறைகிறது ... ... மறைகிறது.

கருவுற்ற செல்விக்குப் பெண்குழந்தை பிறக்கிறது. 'இன்பத்தின்' நினைவாகக் குழந்தைக்கு இன்பம் என்று பெயர் சூட்டி ஆடல், பாடல், விருந்து என்று நடத்தி மகிழ்கின்றனர்.

கதை மாந்தர்

1.	செல்வி	: கல்லூரிப் பேராசிரியை
2.	முகிலன்	: மருத்துவர்
3.	தங்கப்பன்	: செல்வியின் தந்தை, வணிகர்.
4.	முல்லை	: செல்வியின் தாய்
5.	வெற்றிச்செல்வி, உமையாள்	: செல்வியின் தோழியர்
6.	திருச்செல்வம்	: முகிலனின் தாய்மாமன்
7.	செழியன்	: முகிலன் நண்பன்
8.	இன்பம்	: முகிலன் காதலி
9.	எழிலன்	: முகிலன் மகன்
10.	விக்டர்	: காமுகன்
11.	இளம்வழுதி	: ஈழத்தான்.

நுழைவாயில்

(இறை வணக்கம்)

1 திறனென்றே எனக்கெதுவும் இல்லையதால் பேரருளால்
திறம்தருக நீஎன்றே தேவாநின் திருவடிகள்
பற்றுகிறேன் பேரன்பால் பைந்தமிழில் கவிபாடக்
கற்றுவரும் எளியேனுக் குதவிபுரிந் திடுவாயே!

2 தமிழ்ப்புலவர் காயாமல் தமிழுலகம் தூற்றாமல்
தமிழ்த்தாயென் கவியேற்க இறைவாநீ அருள்புரிக
அமிழ்துநிகர் தமிழ்மொழியில் ஆக்கமதைச்
சேர்ப்பதற்கே
ஆர்வமுறும் அடியேனைக் கருணைக்கண் பார்த்திடுவாய்

(மொழி வாழ்த்து)

3 பூந்தென்றல் வீசுகின்ற புகழ்பூத்த தென்திசையில்
மாந்துதற்கு யாருமின்றித் தேன்சிதறி வழுக்குகின்ற
பொதிகைமலை தனிற்பிறந்து புலவரது நாவினிலே
போய்த்தங்கும் பேறமைந்த பொற்றமிழ்த்தாய்
வாழியரோ!

4 தாமாக அயல்நாட்டார் விரும்பிவந்து கற்கின்ற
தேமாவே! தித்திக்கும் நறுந்தேனே! படிப்பார்க்குச்
சுவைகூட்டும் புவியமுதே! தனித்தமிழே!
பலாச்சுளையே!
நவைதீர்க்கும் நற்றமிழே! நலமோங்கி வாழியவே!

(நாட்டு வாழ்த்து)

5 தொன்மைமிகு நிலப்பரப்பாய் நாகரிகப் பேரரங்காய்
நன்மைதரு நூல்பலவும் தன்னகத்தே கொண்டதுவாய்
இலங்குகின்ற தாய்நாடே! என்னருமைத் தமிழ்நாடே!
நலங்குவிக்கும் நன்னாடே! வாழ்த்திடுவேன் வாழியநீ!

I. யார்? இவள் யார்?

6 மாங்கனியின் நிறந்தானோ? மஞ்சள் தானோ?
மனங்கவரும் எழில்விழிகள் காந்தம் தானோ?
தேங்காயின் வெண்ணிறமோ பற்கள்? சிற்பி
தேர்ந்தெடுத்து வடித்திட்ட சிலையோ, யாக்கை?
தீங்கரும்புச் சுவைதானோ பேசும் வார்த்தை?
தெளிந்தமதி நலமுடையாள் சிறிதும் வீணாய்த்
தூங்கமனம் விரும்பாமல் முயற்சி யோடு
தமிழ்படிப்பாள்; கலையறிவாள்; அறிவு தேடும்

7 வேலையிலே தனைமறப்பாள் கற்ற தெல்லாம்
வாழ்க்கையிலே நடைமுறையில் கொணர்வாள் வண்ணச்
சேலைகட்டி நடக்கின்ற அழகுக் கிந்தச்
செகமுழுதும் அடிமையடா! ஆட வர்கள்
சாலையிலே நடப்பதனை ஓரக் கண்ணால்
சாய்ந்துசிலர் பார்ப்பதுபோல் பாராள்: பெண்மைச்
சோலையிலே மலர்ந்துமணம் கூட்டு கின்ற
சுடர்க்கொடியாள்; இளமாது; கற்பின் செல்வி!

8 நீண்டபனை மரம்போலக் கூந்தல் நல்ல
நிறைமதியாள் எழில்முகத்தாள் உதடி ரண்டும்
வேண்டுகின்ற வேளையிலே விரிந்து கொண்டு
விளையாட்டாய்ப் பேசுதற்குச் செய்யும் தொண்டு
சீண்டுகின்ற பேரிடமும் சிரித்துப் பேசும்
சிறந்தகுணம் சிலேடைநயம் இவைக ளுண்டு
உண்டுஎனச் சொல்லுதற்கு எல்லா முண்டு
உவகையிலே களிக்குமவள் இன்பச் செண்டு!

9 மயக்கிடுநல் மாலையினில் வீழு கின்ற
மனங்கவரும் கதிரவனைப் போல நல்லார்
வியக்கின்ற முறையினிலே விளங்கு கின்ற
வித்தாரக் குலக்கொடிதான் இந்தப் பெண்ணாள்
இயக்குகிறான் உலகமிதை இறைவன் பாரில்
இனிமைதரு நல்லழகைப் படைத்து விட்ட
இறையோனின் அருளாட்சி தனைப்பு கழ்ந்து
இருந்தனரே பலகாலும் அவளைக் கண்டோர்!

2. ஊரும் பேரும்

(வேறு)

10 யாவையும் என்றன் ஊர்தாம்
யாவரும் சொந்த மேதாம்
பாவைநற் பண்பாட் டாலே
பைந்தமிழ்க் குன்றன் யாத்த
பாவினைப் பயின்ற தாலே
பயனுரை ஏற்றுக் கொண்டாள்
ஆவலாய் அவள்ஊர்ப் பேரை
அறிந்திட எண்ணங் கொண்டு

11 போயவள் ஊரைக் கேட்டால்
புலியெனக் கோபங் கொள்வாள்
ஆயினும் அவள்இ ருக்கும்
அழகிய ஊரின் பேரைத்
தூயநல் தமிழில் சொல்வேன்
தொடர்ந்துநீர் கேட்க வேண்டும்
நேயமாய் மற்றூர் எல்லாம்
நெருங்கிடும் சென்னை ஊர்தான்

12 நங்கையின் ஊரின் பேராம்
நலமுறு தந்தை பேரோ
தங்கப்பன் என்ப தாகும்
தாயுடைப் பேரோ முல்லை
இங்கிது யார்கேட் டார்கள்?
இவள்பெயர் என்ன வென்றே
நங்கையின் பேர்கேட் போரே
நானது சொல்லு கின்றேன்

13 அவள்பெயர் செல்வி யாகும்
ஆய்வொடு பேச வல்லாள்
கவனமாய்க் கல்வி கற்பாள்
கலைகளில் ஆர்வங் கொள்வாள்
புவனமே எதிர்வந் தாலும்
பொய்யெதும் புகல மாட்டாள்
தவற்றினைக் கண்டித் தாலும்
தக்கவர்க் கிரக்கங் கொள்வாள்

14 பெற்றவர் தங்கட்கு இந்தப்
பாரினில் ஒருத்தி யாகப்
பிறந்தனள் அன்புச் செல்வி
பெருமனத் தந்தை தாயார்
கற்றவர் வாணி கத்தால்
கணக்கிலாப் பொருள்கள் ஈட்டி
உற்றவர் தமக்கும் ஏழை
உறவினர் தமக்கும் கல்வி

15 பொதுப்பணி சிறக்க நல்ல
பொருட்களை வழங்கும் வள்ளல்
புதுமையை ஏற்கும் நெஞ்சம்
புலமையைப் போற்றும் உள்ளம்
பதுக்கலைச் செய்தி டாமல்
பணவர வேய்த்தி டாமல்
புதுக்கலை வரவேற் கின்ற
புகழ்நிறை பெரியார் நல்லார்.

(வேறு)

16 வானென்றும் தேனென்றும் புலமை பெற்றோர்
வாழ்த்துகின்ற தாய்த்தமிழை வளர்ப்ப தற்கு
ஏனென்றும் எதற்கென்றும் வினவி டாமல்
எடுத்தெடுத்து மகிழ்வோடே ஈயும் உள்ளம்
தானென்னும் செருக்கெனிலோ சிறிதும் இல்லார்
தங்கப்பன் என்பதாகத் தமிழ மக்கள்
கோனென்னும் படியவரைப் புகழ்வார் சற்றும்
கோதற்ற தங்கப்பன் மகிழ்வார் கேட்டு,

3. எதிர் வரிசையில்

17 எதிராய் இருக்கும் வரிசைதனில்
இலங்கும் சிறிய வீடொன்றில்
மதியார் தமையும் மதிக்கின்ற
மதிகொள் இளைஞன் ஒருவனுமே
எதுகை மோனை நிறைந்துள்ள
எழில்சால் கவிதை போலிருந்தான்
புதிய தாக வந்துள்ளான்
முகிலன் என்ப(து) அவன்பெயராம்.

18 அன்னை தந்தை இருவருமே
அருமை மகனின் மழலையினை
முன்னைத் தமிழில் கேட்டுமகிழ்
முழுமைப் பேற்றை இழந்திட்டார்!
என்ன வோஓர் நோய்தாக்க
இருவர் தாமும் சேர்ந்தொருநாள்
மின்னல் போலப் புவிவிட்டு
மறைந்தார் மாண்டார் போனாரே!

19 இறைவன் ஆணை அதுவானால்
எவர்தாம் அதனை மீறிடுவார்?
விரைவாய்க் காலம் ஓடிடினும்
வருத்தம் எளிதில் நீங்கிடுமோ?
குறையே இல்லார் உலகத்தில்
யார்தாம் உள்ளார்? அடடாவோ
பறக்கத் தெரியாப் பறவையெனப்
பையன் முகிலன் இருந்தனனே!

20 தாயின் தம்பி திருச்செல்வம்
தானே முன்வந்து அக்காளின்
சேயாம் முகிலன் தனைச்சேர்த்து
செய்யும் சிறப்பு யாவையுமே
ஓய்தல் எதுவும் இல்லாமல்
உவகை யோடு செய்துவந்தார்
மேயும் கன்று வளர்தல்போல்
முகிலன் வளர்ந்தான் விரைவாக!

(வேறு)

21 பொய்யுடலை மெய்யென்றே புகல்தல் போலப்
பொருளில்லான் தனையன்றோ பெற்றோர் அன்பாய்ச்
செய்யதமிழ் மொழியினிலே விருப்புக் கொண்டு
செல்வமொடு திருவென்னும் அடையைச் சேர்த்தார்
பையஅவ ரோடிந்த முகிலன் தானும்
பலஇன்னல் களுக்கிடையே கற்று வந்தான்
கையாலா காதவனா முகிலன்? மேலும்
கற்றுப்பல செல்வங்கள் சேர்த்துக் கொள்வான்

22 என்றதொரு நம்பிக்கை உளத்தில் சேர்த்து
என்றைக்கும் செல்வமென இலங்குகின்ற
பொன்ருத கல்வியினை அன்பு மாமன்
பொறுப்புடனே படிக்கவைத்து மகிழ்ந்திருந்தார்
கன்ருக இருந்திட்ட முகிலன் இன்று
காளையென மாறிவிட்டான் அழகு கூடி
நன்ருக இளமீசை முகத்தில் தோன்ற
நறுமணம்செய் பூப்போல இலங்குகின்ருன்!

4. பள்ளிப் படிப்பு

23 குற்றம் சொல்ல முடியாத
குணக்குன் ருன முகிலனெடு
வற்ரு அன்புப் பெருஞ்செல்வி
ஒன்ருய்ச் சேர்ந்து படித்திட்டாள்
முற்றும் முடிய முனைந்தாலும்
முதன்மை இடமோ முகிலனுக்கே
பெற்ருேர் மற்ருேர் ஆசிரியர்
பெரிதும் போற்றும் படியாக

24 முதன்மை எய்தச் செல்வியவள்
முயன்ருள்; படித்தாள்; முகிலன்பால்
எதனு லோவின் சினமுற்ருள்
எய்தா முதன்மை தருஞ்சினமோ?
இதமாய்ப் பழகிப் பார்த்தாலும்
இவள்ஏன் கோபங் கொள்கின்ருள்?
முதலில் முகிலன் அறியவில்லை
முடிவில் அறிந்து முறுவலித்தான்!

25 படிப்பில் முதன்மை இலாமையினுல்
பளிங்கு நெஞ்சப் பாவையவள்
வெடிக்கும் உள்ளத் துயரோடு
வெதும்பிக் கோபங் கொள்கின்ருள்
நடிப்பில் லாத சினமன்ருே?
நன்ருய் முகத்தில் தெரிகிறது!
துடிப்பு மிக்க இளையவளைத்
தூய முகிலன் உளம்புகழும்!

26 பள்ளிப் படிப்பும் முடிந்ததுவே
பல்லோர் நாளும் எதிர்பார்த்த
துள்ளித் திரியும் நாளதுவும்
தொடர்ந்து மகிழ்ச்சி தந்ததுவே
தெள்ளத் தெளிந்த கேள்விகளே
தேர்வுத் தாளில் இருந்ததனால்
உள்ளங் களித்துப் பெரும்பாலோர்
உரிய விடையை எழுதினரே!

27 அச்சங் கொண்ட உளத்தினராய்
அல்லும் பகலும் நினைந்தவராய்
துச்சம் என்றே எழுதிவந்த
தேர்வின் முடிவு தனைநோக்கி
மெச்சும் வகையில் மௌனமுடன்
மேலோர் போலத் தோன்றினரே
* கச்சம் போல நடந்தனரே
கயமை யாவும் விட்டனரே

28 சிக்கல் ஏதும் இல்லாமல்
சிறப்பாய் விடைகள் செய்தவரும்
'திக்திக்' கென்று மனந்துடிக்கத்
தேர்வின் முடிவை எதிர்நோக்கி
ஒவ்வோர் நாளும் செய்தித்தாள்
ஓடி ஓடிப் பார்த்தனரே
இவ்வா ருக எதிர்பார்த்த
இளையோர் கண்டு தெரிந்துகொள,

29 தேர்வின் முடிவை நாளிதழ்கள்
தெரியும் வண்ணம் முதற்பக்கம்
சீராய் வெளியிட் டுவந்தனவே
சிலபேர் வருந்தப் பலர்மகிழ்ந்தார்!
தோற்றோர் வருந்தேல் தோற்றோர்க்காய்
துணைநிற் பதுவே எம்பணியாம்
தோற்றோர்க் கான கல்லூரி
தொடர்ந்து தருமிவ் விளம்பரமும்!

* (கச்சம் = ஆமை)

30 (அ) முதன்மை பெற்ற மாணுக்கன்
முகிலன் என்று நாளிதழ்கள்
முதன்மை கொடுத்துச் செய்தியினை
முறைமை யாகத் தெரிவிக்கும்!
இதனைப் பார்த்த எல்லாரும்
எல்லை யில்லா மகிழ்வுற்றுப்
பதமாய் வார்த்தை பலபேசிப்
பாராட் டுரைத்தார் முகிலனிடம்

30 (ஆ) கேட்ட முகிலன் கிறுகிறுத்தான்
கேண்மை யாளர் முறுவலித்தார்!
வாட்டங் கொண்ட முகத்தோடு
உலவி வந்தாள் இளஞ்செல்வி
நாட்டின் முதன்மை தனக்கிலையே!
நங்கை யுள்ளம் வருந்தியதால்
வீட்டில் கிடந்தாள் உளம்நொந்து
வார்த்தை ஏதும் பேசாமல்!

31 பள்ளிப் படிப்பு முடிந்ததுமே
பாங்காய் ஏதும் வேலையிலே
தள்ளி விடவே திருச்செல்வம்
தனக்குள் எண்ணிக் கொண்டிருந்தார்
துள்ளி ஓடும் பருவத்தில்
தொழிலில் ஈடு படுத்துவது
நல்ல தல்ல என்றுபலர்
நவின்ற தாலே கல்லூரி

32 படிப்ப தற்கும் முன்போலப்
பாடு மிகவாய்த் தான்பட்டார்
இடியும் மின்னும் வானத்தில்
இடைவி டாமல் மழைக்காலம
துடிப்போ டிருக்கும் அதுபோலத்
தொடர்ந்து வறுமைத் துயரத்தில்
குடித்த னந்தான் நடந்திடினும்
குறுக்கீ டின்றித் தன்கல்வி

33 தொடர்வ தற்குப் பாடுபடும்
தூய மாமன் திருச்செல்வம்
படரும் கொடியைத் தாங்குகின்ற
பருத்த கொழுகொம் பென்றேதான்
அடலே றன்ன முகிலனுமே
அன்பாய்த் தனக்குள் எண்ணலுற்ருன்
இடர்கள் யாவும் கற்றதன்பின்
இல்லா மல்நான் செய்திடுவேன்

34 என்று தனக்குள் நினைத்தபடி
இருந்தான் இனிமேல் முன்னைவிட
நன்ருய்க் கற்று நல்லபெயர்
நாட்டி விட்டுத் தான்விரும்பும்
பொன்ருப் பணியாம் பிறர்பிணியைப்
போக்கு கின்ற மருத்துவத்தை
என்ரு வதுதான் கற்றிடவே
இறைவன் தன்னைப் பற்றிநின்ருன்!

5. கல்லூரிப் படிப்பு

35 செல்வியும் மேற்ப டிப்பு
சேர்ந்திட விருப்பங் கொண்டு
கல்வியின் நலத்தை எல்லாம்
கருத்துடன் உணர்ந்து கொள்ளும்
தன்னுடைத் தந்தை தாயைத்
தக்கநல் முறைமை போடே
அன்பதாய்க் கேட்டாள் அன்ஞர்
அப்படி யேசெய் என்ருர்!

36 கல்லூரி ஆசான் போற்ற
கனிவுறு தோழி யர்கள்
செல்வியைப் புகழ்ந்து பேச
சிறப்பொடு பயின்ருள் பாடம்
வெல்லமும் தோற்கும் வண்ணம்
வார்த்தையில் சுவையைக் கொட்டும்
நல்லசூழ் நிலையில் கல்வி
நலமெலாம் பெற்று வந்தாள்!

37 சென்னையில் எண்ணில் லாத
சிறப்புடைக் கழகம் மன்றம்
அன்னவை சொல்வ தாயின்
ஆயுளும் போதா தன்ருே?
முன்னவர் தம்மைப் போற்றி
முறையொடு தமிழைப் பேணும்
சின்னமாய் நண்பர் மன்றம்
சிறப்புடன் திகழ்ந்த தாங்கே!

(வேறு)

38 ஆணும் பெண்ணும் சேர்ந்திடலாம்
அவர்தம் அறிவில் தேர்ந்திடலாம்
பூணும் அணிகள் யாவையுமே
பொன்ருத் தமிழின் காவலுக்கே
தாயைத் தருதல் செய்திடலாம்
தம்மைப் புகழால் நெய்திடலாம்
வீணுய் வாதம் செய்யாமல்
விளங்கும் நலன்கள் கொய்திடலாம்

39 ஆண்டின் நிறைவு விழாநடத்தி
அருமைத் தமிழன் புகழ்பரப்பத்
தூண்டும் முறையில் மாணவரைத்
தூய தமிழில் சொற்பொழிவைப்
பேசச் செய்ய ஏற்பாடு
பெரிதாய்ச் செய்தார் மன்றத்தார்
பூசல் ஏதும் இல்லாத
புதுமை ததும்பும் செயலிதனை

40 நேயத் தோடு எல்லாரும்
நல்ல உள்ளங் கொண்டதனுல்
ஒய்வு ஒழிதல் இல்லாமல்
ஓடி யாடி ஒத்துழைத்து
வாயால் தங்கள் வருவாயால்
வேண்டும் அளவு துணைசெய்தார்
தீய பழக்கம் ஏதுமிலாத்
தெளிந்த முகிலன் தானுமிதில்

(வேறு)

41 மன்றத்தார் தருகின்ற தலைப்பில் நின்று
மதித்திறத்தால் மற்றவரைத் தன்பால் ஈர்த்து
இன்றிந்த இளையவனின் சொற்பெ ருக்கை
இருசெவியால் கேட்கின்ற பேறு பெற்றோம்
என்றந்தக் கூட்டத்தார் மகிழ்ந்து சொல்ல
யானதிலே பேசிடுவேன் நன்றாய்ப் பேசி
வென்றிதனை எய்திடுவேன் என்று சொல்லி
விரைவுடனே சென்றதிலே பெயர்கொ டுத்தான்

42 உன்வீட்டின் எதிர்வீட்டான் முகிலன் என்பான்
உரையாற்றப் போகின்றான் இங்கே உள்ள
இன்தமிழை வளர்க்கின்ற ஒன்றே என்றும்
இலக்காகக் கொண்டுள்ள மன்றந் தன்னில்
என்தோழி நீஇதிலே பேசி வெற்றி
ஈட்டிவிட வேண்டாமோ என்றே சூழ்ச்சி
தன்போக்கில் சொல்லிட்டாள் வெற்றிச் செல்வி
தங்கஉடல் கொண்டசெல்விக் குயிரின் தோழி

43 செய்தியிது கேட்டதுமே செல்வி தானும்
சென்றுபெயர் பதிந்துகொள முடிவெ டுத்தாள்
எய்திவிட வேண்டும்நாம் முதன்மை என்ற
எண்ணத்தை நெஞ்சத்தில் வளர்த்துக் கொண்டு
ஒய்யார நடைபயின்று செயலா ளர்பால்
உங்களது மன்றத்தின் பேச்சுப் போட்டிக்கு
ஐயாஎன் பெயரையுமே பதிந்து கொள்க
அதற்கெதுவும் காசுண்டா என்று கேட்டாள்

44 செந்தமிழைப் பேணுகின்ற சீர்சால் மன்றச்
செயலாளர் செல்வியது பேச்சில் நந்தம்
செந்தமிழின் சீர்மையொரு உணர்ச்சி வேகம்
சேர்ந்திருக்கக் கண்டதனால் முறுவல் பூத்தார்
வந்திங்கே நான்கேட்கும் கேள்விக் கொன்றும்
விடைபகர மாட்டாமல் சிரிக்கின் றீரே!
வந்ததுமக் கென்னவென்று செல்வி கேட்க
வருத்தமிலாச் செயலாளர் பேச லுற்றார்

45 "எங்களது பதிவேட்டில் உங்கள் பேரை
எழுதிடுவேன் அதற்கெதுவும் கட்ட ணத்தைத்
தாங்களிடம் கோருதற்கு மன்றச் சட்டம்
தனிலிடமும் இலையதனல் கேட்க மாட்டேன்
நீங்களேனும் மன்றத்தின் வளர்ச்சிக் காக
நன்கொடைகள் தருவதெனில் தடையொன் றில்லை!"
ஈங்கிவற்றைக் கேட்டுநல்ல விளக்கம் பெற்ற
எழிற்செல்வி மகிழ்ச்சியுடன் விடு சென்ருள்.

6. நண்பர் மன்ற விழா

46 எதிர்காலம் எனுந்தலைப்பு யாவ ருக்கும்
ஏற்புடைய தென்றெண்ணி அறிவித் தார்கள்
புதிர்மிக்க இத்தலைப்பில் யாது பேச
புரியாமல் பற்பலபேர் திகைத்து நின்ருர்
சதிர்ஆகும் செல்விக்கும் திகைப்புத் தோன்ற
சங்கமுதல் இன்றுவரை உள்ள தான
முதிர்ந்ததமிழ் இலக்கியத்தைத் துருவிக் கற்று
முதன்மையிடம் தான்பெறவே மிகமு யன்ருள்

47 குறித்தபடி குறித்தநாள் குறித்த வேளை
கொஞ்சுதமிழ்ச் சுவைமடுக்க விழாத்தொ டங்கி
பறித்தமலர் போலிருந்த சிறுவர் வந்து
பாடினரே இறைவாழ்த்து பல்லோர் உள்ளம்
பறித்தபடி போய்விட்டார் பையப் பைய
பார்த்தபடி நின்றிருந்த கூட்டம் அங்கே
முறிப்பில்லா ஒருமனிதர் தலைவ ராக
முத்தமிழுக் கொருமகனய் இருத்தல் கண்டார்

48 தங்கப்பன் தலைமையிலே விழாந டக்க
தங்களது முறைவந்த போதில் நன்ருய்ச்
சிங்கமென நடந்துவந்து சுவைமி குந்த
சொல்லெடுத்து உளங்கொள்ளும் குரலைச் சேர்த்து
பொங்கிவரும் வெள்ளமென இனிமை மிக்சப்
பொழிவுதனை மாணவர்கள் தலைப்பில் நின்று
செங்கரும்புச் சாருக அவையில் தந்தார்
செகம்மறந்து அவையோர்கள் கேட்டு வந்தார்

49 இயல்பான சொல்லடுக்கு பிசிறில் லாத
எழிலான நடையோட்டம் கருத்துச் சேர்க்கை
நயஞ்செறிந்த நகைச்சுவைகள் அங்கிங் கென்று
நலஞ்சேர்க்கும் சிறுகுட்டிக் கதைகள் என்று
முயற்சியொடு தமிழமுதப் பிழிவு தந்தார்
முற்போக்குப் பேச்சினிலே தோய்ந்த மக்கள்
உயர்ச்சிதரும் போட்டியிது மாணாக் கர்தம்
உயர்வறியும் வாய்ப்புமிது என்று சொன்னார்

(வேறு)

50 முதலினில் செல்வி அதன்பின் பற்பலர்
முடிவினில் முகிலன்; வரிசை யாகத்
திருந்திய தமிழைப் பேசி மக்களைத்
தம்பால் ஈர்த்து இமையா நாட்டம்
அவர்கொளச் செய்தனர்; அருந்தமிழ் போற்றினர்
யாவரும் அழகுறப் பேசுகின் றார்கள்
எவர்முதற் பரிசினைப் பெறப்போ கின்றார்?
என்றறி யாமல் நின்றனர் அவையோர்

51 நடுநிலை பிறழாத் தலைவர் தம்மொடு
நடுவர் மூவர் பேசியோர் தங்கட்கு
இட்ட மதிப்பெண் யாவையும் ஒன்றாய்
எண்ணினர் எண்ணிய பின்னர் யார்யார்
என்றெதிர் பார்த்திடும் அவையினர் கேட்டிட
''பதின்மர் பேசினர்; இருவர் பெண்கள்
பேசியோர் தம்மில் இலக்கிய வளமும்
இன்றமிழ் நலமும் குறைவறத் துலங்கிட
ஏறுபோல் வந்துநல் வீறுடன் பேசிய
முகிலன் என்பவர் முதல்நிலை பெற்றிட
இரண்டாம் பரிசினைச் செல்வி பெறுவார்
என்ற செய்தியை அறிவித் தார்கள்
கேட்டவர் யாவரும் மகிழ்வொலி எழுப்பினர்!

(வேறு)

52 இந்தநற் சேதி கேட்டே
இருந்தவர் கைகள் தட்டி
உந்திய உணர்ச்சி யாலே
ஓ!ஊ!ஓ! என்றெல் லாரும்
குந்தகம் இல்லா நல்ல
குறுநகை புரிந்தார் அங்கே!
பந்தினைத் தூக்கல் போல
பற்பலர் முகிலன் தன்னைத்

53 தோளினில் தூக்கி வைத்தார்
தொடர்ந்துநல் மகிழ்ச்சி கொண்டார்
செல்வியை வென்றாய் நாங்கள்
சிரித்திடச் செய்தாய் அப்பா!
தாளினால் இட்ட வேலை
தலையினால் இனிமேற் செய்வோம்
கேளடா ஏது வேண்டும்?
கொட்டுவோம் உன்றன் முன்னே!

54 என்றனர் முகில னுக்கு
என்னதான் சொல்லித் தப்ப
என்றெதும் தெரிய வில்லை
ஏதடா இன்றைக் கென்னை
நின்றிட விடமாட் டாரோ!
நல்லது! நிலத்தில் நில்லேன்!
இன்றெனை இறக்கி விட்டால்
இங்கிருந் தோடிச் சென்றே

55 என்னுடை மாம ஞரிடம்
இதைஎடுத் தோது வேனே
தன்னுடை மார்பில் என்னைத்
தாவியே அணைத்து இன்பம்
பொன்னுடை போர்த்தப் பட்ட
பெரியவர் போல்கொள் வாரே
இன்னது தெரியா நண்பர்
இங்கெனைத் தோளில் வைத்தார்!

56 என்றுபற் பலவாய் எண்ணி
இருந்தவன் நண்பர் தம்மை
அன்பதாய் வேண்ட லுற்றான்
இறக்குக என்னை என்றான்!
இன்பநல் நண்பர் எல்லாம்
இறக்கினர் நிலத்தின் மீது
தன்பரி செடுத்துக் கொண்டு
தாவியே வீடு சென்றான்

57 தந்தையார் தலைமை ஏற்க
தலைவரின் பிள்ளை என்னை
சிந்தையில் நிறுத்தி இங்கு
சிறப்புசெய் முதன்மை தந்தால்
நிந்தைகள் உலகம் சொல்லும்!
நிலைமையும் இதுவே யன்றோ ?
விந்தையாய் செல்வி சொன்ன
விளக்கமும் நகைப்பே யாகும் !

58 உண்மையில் லாத இந்த
உரையினைத் தோழி மார்கள்
உண்மையே செல்வி உன்றன்
ஒவ்வொரு வார்த்தை தாமும் !
என்றனர் வேறென் செய்வார்?
இவளிடம் உண்மை சொல்லின்
நன்றல! ஒப்புக் கொள்ளாள்!
நவின்றனர் தமக்குத் தாமே!

59 சொல்வது சரிதான் செல்வி!
சொல்லிய உனக்கு நாங்கள்
சொல்வதும் ஒன்றே: இந்தச்
சொற்சுவைப் போட்டி தன்னில்
செல்வதில் பிந்திட் டாலும்
வரும்பல போட்டி; வெல்வாய்!
வெல்லமே ! சொற்கள் கேட்பாய !
வேதனை வேண்டாம் என்பர்

60 இப்படி விழவு யாவும்
இனிதுற நிறைவு எய்த
எப்படி நடத்து வார்கள்
இன்பநற் றமிழ்வி ழாவை
துப்பெதும் உண்டோ என்ற
தூயநெஞ் சில்லார் தாமும்
ஒப்பிலை இதுபோல் முன்னர்
ஒருவிழா இல்லை என்றார்!

7. கடற்கரை உலா

61 தோழன் செழியன் தன்னோடு
தரங்கம் பாடும் கடற்கரைக்கு
வேழம் நிகர்த்த இளமுகிலன்
விரும்பிச் சென்றான் ஓர்நாளே
சூழ இருந்த மக்களையே
சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி
சூழல் தன்னை வெகுவாகச்
சுவைத்த வண்ணம் நடந்தனரே!

62 செழியன் ஏனோ ஓரிடத்தில்
சென்ற பின்னர் மீளாமல்
விழிகள் நிலைத்து நின்றதனை
வேடிக் கைதான் எனநினைத்து
செழிய! பார்ப்ப தென்னப்பா?
சொல்வாய் சற்று எனக்கென்று
இழுத்து முகிலன் கேட்டபின்னும்
இமையா நாட்ட மாய்நின்றான்!

63 இமையா நாட்ட மாய்நின்ற
இளமைச் செழியன் கண்திருப்பி
உமையாள் என்ற தோழியுடன்
உவந்து பேசிச் சிரித்தபடி
செல்வி அங்கு நிற்கின்றாள்
சுட்டிக் காட்டும் இடந்தனிலே
நல்வி தத்தில் உரையாடும்
நங்கை யர்தம் உருக்கண்டு

64 எனக்கு நீயோர் மெய்நண்பன்
ஏற்பட் டதுபோல் செல்விக்கும்
இனிக்கப் பேசும் எழில்உமையாள்
இன்ப நட்பின் இலக்கணமாம்!
தனித்து எங்கும் செல்லாமல்
தோழி உமையின் துணையோடே
மணிக்க ணக்கில் பொழுதுதனை
மகிழ்ச்சி யோடே செலவுசெய்வாள்!

65 எங்கும் உனையே வெல்வதற்கு
எண்ணி எண்ணி முனைகின்ற
மங்கை செல்வி தனைப்பற்றி
முகில! என்ன நினைக்கின்றாய்?
பங்கம் இல்லா நண்பனிதைப்
பேச்சின் ஊடே கேட்டிட்டான்
தங்கச் செழிய என்தோழ
தளரா ஊக்கம் மிகக்கொண்டு

66 சீர்சால் தமிழின் திறம்பேசி
சிறுமை ஒழிக்கும் முறைபாடி
ஊர்ஊ ராக இருக்கின்ற
உளுத்த கொள்கை தமைச்சாடி
வேர்வே ராக அறுத்தனளே
வீரப் பேச்சால் அவையினரை
'பார்' 'பார்' என்றே பகர்ந்தனளே
பழமைக் கேட்டைத் தகர்த்தனளே

67 ஆண்கள் கூட அவையினிலே
அழகாய்ப் பேச முடியாமல்
தூண்கள் போல நிற்கின்றார்
தாய் நங்கை அவள்மட்டும்
துணிச்ச லாக மேடையிலே
தொடர்ந்து பேச்சு மழைபொழிந்தாள்!
வேண்டும் அறிவு தனைப்பெற்ற
வீரச் செல்வி வாழ்கவாழ்க!

68 சிறிதும் அவள்பால் சினங்கொள்ளா
சிந்தை சிறந்த நல்முகில!
வறிய ளாக நீயிருந்தும்
வளமி குந்த அறிவுடையாய்!
அரிய நெஞ்சம் வாய்ந்தவனே!
அன்பு மிகுந்த உனைநட்பாய்ப்
பெற்ற நானே பேறுபல
பெற்றேன் என்று மொழிந்திட்டாள்!

69 உமையும் செல்வியும் தற்செயலாய்
உண்மை யான புகழ்மொழியை
அமைதி யாகவே சொன்ன
அரிய முகிலன் மொழிகேட்டு
இமையும் மூட மறந்தாராய்
இனிதாய்க் கேட்டு மகிழ்ந்திட்டார்
குமையா நெஞ்ச நல்முகிலன்
குணக்குன் றென்னும் செல்வியுளம்!

70 பெருமை யாகத் தனைமுகிலன்
பேசி யதனைப் பலபடவே
அருமை யாகத் தோழியொடு
அளவ ளாவிச் செல்விசெல
பொறுமை மிகுந்த உமைகூட
போதும் நிறுத்து எனச்சொன்னாள்
திரும்பும் நேரம் ஆனதனால்
துள்ளி எழுந்து நடந்திட்டார்

8. நெஞ்சத்தின் தவிப்பு

71 நெஞ்சமே மோசம் நீதான்
நீண்டஇவ் இடத்தை விட்டு
கொஞ்சமும் நீங்கி டாமல்
கொடுமையைப் புரிகின் றாயே!
பஞ்சினும் மென்மை மிக்க
பார்வையால் என்னை நாளும்
கெஞ்சிய முகிலன் தன்னைக்
கதறவே செய்தேன் பண்ணாள்

72 உன்னைநான் மோசம் என்றே
உரைத்துள்ளேன்; ஆனால் என்னை
உன்னினும் பலவா றாக
உற்றுஉற் றங்கிங் கென்று
கண்ணெனும் உறுப்புக் கண்டு
காட்சியின் இன்பம் நல்கி
என்னைஎவ் வாறெல் லாமோ?
ஏங்கிட வைக்கும் இன்னும்

73 கால்களும் பின்னிப் பின்னிக்
கபமையைச் செய்யும்; ஓயும்!
மேலெலாம் வியர்க்கும்; நாணம்
மேனியைப் பார்க்கக் கூசும்!
தோலெலாம் சிலிர்க்கும்; உள்ளம்
தொடர்ந்துபின் னாக ஓடும்!
சேலெனும் விழியி ரண்டும்
சிரித்திடும் இன்பம் கூடும்!

74 எனக்கிது வரைக்கும் இல்லா
இனியதாற் புதுமை யன்றோ?
மனத்தினில் ஒவ்வொன் றாக
மறுபடி எண்ணும் போது
இனித்திடும் உள்ளம் பொங்கி
இளமையால் உறுப்பெல் லாமும்
தனித்தனி யாக என்னைத்
தவித்திடச் செய்யும் ஏனோ?

75 கனவிலும் காணும் எல்லாக்
காட்சிகள் தனிலும் பொல்லா
மனத்தவிப் பதனைத் தந்து
மயக்கினான் முகிலன் வந்து
உணவதும் செல்ல வில்லை
உறக்கமும் கொள்ள வில்லை
தணலெனத் தகிக்கும் உள்ளம்
தனைஎவர் அறிவார் அம்மா!

76 என்னுளே வைத்துக் கொண்டு
இருக்கநான் விரும்ப வில்லை
என்னுளம் கொள்ளை கொண்ட
இனியவன் முகிலன் தன்னை
என்னுடன் பேசச் செய்வேன்
எதுஇனி வரினும் அஞ்சேன்
அன்னவ னேவந் தென்னை
அழைத்திடும் படிநான் செய்வேன்!

9. முகிலன் மனம்

77 ஏனோ இந்தச் செல்வியின்பால்
என்றன் உள்ளம் செல்கிறதே!
நானோர் வறியன்; நல்குரவால்
நாளும் வருந்தும் மிகச்சிறியேன்
மானோ மயிலோ எனும்வண்ணம்
மனத்தைக் கவரும் செல்வியினை
ஏனோ விரும்பும் என்நெஞ்சம்
எழிலின் பிறப்பாம் அவள்என்றன்

78 வாழ்க்கைத் துணைவி ஆவாளோ?
வாழ்வில் இன்பம் தருவாளோ?
வாழ்ந்தால் என்றும் அவளோடு
வாழ என்றன் மனம்விரும்பும்
கூழுக் கும்திண் டாடுகின்ற
குலச்சி றப்பும் இல்லாதோன்
யாழைப் பழிக்கும் குரலுடைய
ஏந்தி ழையை நினைப்பதுமேன்?

79 எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன்
ஏதோ ஒன்றிங் கிப்போது
கண்ணி வைத்தென் உளந்தன்னைக்
கலங்கச் செய்து விட்ட துவே!
பண்ணி சைபபார் பின்னாலே
பாய்ந்து செல்லும் மனம்போல
நண்ணாப் பொருளாய் இருக்கின்ற
நங்கை யோடென் உளஞ்செல்லும்!

80 பருவம் உருவம் பேராசை
பரமன் எனக்கேன் தந்தானோ?
கருவங் கொண்ட பெண்மலரை
கணமும் நினைத்தல் சரிதானோ?
ஈன்ற அன்னை தந்தையினை
இழந்த எளிமை தனிலுழலும்
யானோ அவளை எண்ணுவது?
ஏனோ எண்ணம் தோன்றியதே!

10. குழப்பமும் விளக்கமும்

81 கல்லூரிப் பாடங்கள் முடிந்தும் கூட
கலங்காத செல்விமனக் கலக்கத் தோடே
உள்ளூர ஒருவிதத்தில் வருத்த முற்றே
உவகையது இல்லாமல் அழகு குன்றி,
கள்ளூறும் பார்வைதனில் கவர்ச்சி இன்றிக்
காட்சியளிக் கும்விந்தை கண்ட தோழி
துள்ளிவந்து தொட்டதையும் வெறுத்தொ துக்கித்
தோழியர்கள் போனதன்பின் தனியாய் வந்தாள்.

82 திட்டமொன்றைத் தீட்டிவிட்டே இருந்த செல்வி
தோழியரை விரட்டிடவே நடித்தாள் வீதி
கூட்டமின்றி வெறித்தோடி காட்சி நல்கும்
குறுகுறுத்த கண்விழிகள் எங்கோ செல்லும்
போட்டதிட்டம் பாழ்தானோ என்றே உள்ளம்
பலப்பலவாய் தனக்குள்ளே அங்க லாய்க்கும்
மட்டமில்லை திட்டமின்று பலிக்கும் அங்கே
முகிலன்தனி யாகச்செல் கின்றார் என்றே

83 கண்டுவிட்டுக் களிப்படைந்தாள் விரைந்து சென்று
காணுதாள் போல்நடந்தாள்! முந்தி ஓடி
வண்டுவிழி யதனாலே ஓரப் பார்வை
ஒன்றுமட்டும் பார்த்துவிட்டு என்திட் டத்தை
இன்றுநிறை வேற்றிடுவேன் என்றே எண்ணி
இன்புடனே நடந்தோடிப் பறந்தாள்; பின்னர்
கொண்டுவந்த புத்தகத்தில் ஒன்றை மட்டும்
கைநழுவ விட்டுவிட்டுக் கடுகிச் சென்றாள்

84 புத்தகத்தைக் கைநழுவ விட்ட தொன்றும்
பாராமல் முகிலன்தன் போக்கில் வந்தான்!
வித்தகனாய் இல்லாமற் போன தாலே
வனிதையவள் நடையழகைக் கவிதை யாலே
இத்தரணி தனில்பாட இயல வில்லை
இனிமேல்நான் கவிபாடக் கற்றுக் கொள்வேன்
புத்தமுதக் கவிபாடி பூவைக் கென்றும்
புகழாரம் சூட்டிடுவேன் என்றான்; நின்றான்!

(வேறு)

85 வழியிலோர் புத்தகந்தான்— என்ன
வந்து கிடக்கிறது!
எழில்மய மானதொரு— அட்டை
ஏற்றமே நல்கிடுது
இதையார் நழுவவிட்டார்?— இங்கே
இரக்கமில் லாதநெஞ்சார்!
மண்ணில் வருந்திடவே— யார்தான்
மறதியாய் விட்டனரோ?

86 என்று வருந்தினனே— கையால்
ஏந்தி எடுத்தனனே
நன்று புரட்டினனே— பக்கம்
நகர்ந்து மறைந்தனவே
குண்டு மணியதுபோல்— அச்சுக்
கோத்த எழுத்ததுபோல்
செண்டு மலர்விழியாள் — இளஞ்
செல்வி பெயர்கண்டாள்!

87 என்ன இதுபுதுமை!— செல்வி
இப்படி யாமறப்பாள்?
சின்ன இடையழகி— இன்று
சீக்கிரம் போவதுமேன்?
முன்னம் ஒருநாளும்— மங்கை
*மஞ்ஞை நடையோடு
என்முனம் போனதாக— யானும்
என்றுமே கண்டதில்லை

(*மஞ்ஞை— மயில்)

88 அன்னந்தான் வந்ததுவோ?— நன்ருய்
ஆடி நடந்ததுவோ?
என்னவோ நானறியேன்— அடடா!
எவரிங்(கு) எனக்குரைப்பார்?
இன்னவா றெண்ணிநிற்க— நேரம்
எவர்க்கும் அடங்காமல்
சென்றது சூரியனும்— சற்றுச்
சாய்ந்தனன் மேற்றிசையில்!

89 உடனே அவள்கையில்— கொடுத்து
உதவி தனைப்புரிவேன்
கடமை இதுவன்ருே?— நற்
காரியம் செய்தற்குக்
காலம் கடத்துவதோ?— கடத்தல்
கற்ருர்க் கழகாமோ?
காலங் கடத்தாத— முகிலன்
கடும்விரை வாய்ச்சென்ருன்.

90 போகும் வழியினிலே— உள்ளம்
பற்பல அசைபோடும்!
ஆகும் செயல்தாஞ?— நெஞ்சின்
ஆசை சரிதாஞ?
பாகு மொழியாளை— எண்ணிப்
பையச் சிரிப்புதிர்த்தான்!
தானே சிரிப்படக்கி— பெரும்
சிந்தனை யால்நிறைந்தான்!

11. சந்திப்பு

91 வாருங்கள் வாருங்கள் உட்கா ருங்கள்
வரவேற்ற படிநின்ருள் செல்வி அந்த
சீர்மிக்க வரவேற்பைக் கண்டு சற்று
சிவந்ததவன் திருமுகமும் கூச்சத் தாலே!
யார்வந்த தென்பதுபோல் எட்டிப் பார்த்த
ஏவலாளை சிற்றுண்டி கொணர்க என்ருள்
நேர்பேச முடியாத முகிலன் உள்ளம்
கனவிதுவோ எனவியந்த படிஇ ருக்கும்!

92 வார்த்தையெதும் பேசுதற்கு இயலா னாகி
வாய்மூடி மௌனியென அவன்இ ருந்தான்!
பார்த்தபடி இருந்திருந்த செல்வி நல்ல
பண்புடனே சிற்றுண்டி கொடுக்க லானாள்
எதற்கிவைதான் இனும்சிறிது பொழுதில் விடு
ஏகிடுவேன் போயுணவு கொள்தல் வேண்டும்
அதற்கிடையில் சிற்றுண்டி என்னும் பேரில்
அளிக்கின்றீர் பேருண்டி என்று ரைத்தான்!

93 வாய்திறந்து ஒருவாறு சிலசொல் பேச
வாய்ச்சுவைக்குச் சிற்றுண்டி வைத்த நங்கை
போய்நின்றாள் ஓர்புறமாய் போன பின்பும்
புசிக்காமல் தயங்குகின்ற முகிலன் தன்னை
தாய்நிகர்த்த அன்போடு வைத்த தெல்லாம்
தட்டினிலே மிச்சமின்றி உண்ணல் வேண்டும்
வேய்ங்குழலின் நாதமென ஒலிக்கும் பேச்சில்
வேண்டுதலை அவள்விடுத்தாள்; அவனும் உண்டான்!

94 வந்தசெயல் என்னவெனக் கேட்டி டாமல்
வரவேற்று மகிழ்ந்திருக்கும் செல்வி என்ன
விந்தைமகள் என்றபடி எண்ணிக் கொண்டு
"விரைவாக வந்தீர்கள் போலும் நீங்கள்
வந்தவழி தனில்யானும் வந்த போது
வடிவுடனே விளங்குகின்ற இந்த நூலைச்
சந்தித்த என்கண்கள் பேரைத் தேடும்!
செல்வியுங்கள் பெயரிருக்க எடுத்து வந்தேன்"

95 என்றுரைத்து எடுத்தளித்தான் நூலை அந்த
எழிலார்ந்த புத்தகத்தைப் பணிவி னோடு
நன்றியுரை பகர்ந்தபடி செல்வி வாங்க
நன்றாகப் பார்த்திடுங்கள் நும்நூல் தானா?
என்றதொரு வெற்றுவினா எழுப்ப லானான்
என்னுடைய புத்தகந்தான் எடுத்து வந்து
இன்றேஎன் வீட்டிற்குக் கொண்டு தந்தீர்
இதயத்து நன்றியென மொழிந்தாள் மெல்ல!

(வேறு)

96 கண்களும் கண்களும் கனிவுடன் நோக்கின
காதலும் அங்கே இயற்கையாய்த் தோன்றி
எண்ணிட இயலா மகிழ்வினை நல்கிட
இருவர் உள்ளமும் இணைந்தன ஒன்ருய் !
பெண்ணும் ஆணும் பாசத் தோடு
பார்த்திடும் போது பேசுதல் ஏது ?
நுண்ணிய அறிவுடை நூலிடைப் பெண்ணுள்
நோக்கிய பார்வையில் தன்னை மறந்தான்.

97 அச்சமும் கூச்சமும் அகன்று போயின
இருமனத் தினிலுமோர் மறைபொருள் இல்லை
'நீங்கள்' என்று பேசிய முகிலன்
'நீ'யென மாற்றினுன்; அவளோ இனிமேல்
நீங்கா திருங்கள் என்று மொழிந்தனள்
ஓங்கி வளர்ந்தது உண்மைக் காதல்
தூங்கிய போதும் கனவினில் பேசினர் !
தொடர்ந்தது பேச்சு; தொடர்ந்தது காதலே !

98 எதிரெதிர்க் கருத்தினைக் கொண்டவ ராக
அ இலங்கிய இருவர் முகிலனும் செல்வியும் !
வியப்பிது இருவரும் உயிருக் குயிராய்
விரும்பு கின்றனர் உரைபல பேசி !
ஒருவரை மற்றவர் ஒழிப்பவர் போலவே
வெறுப்பொடு பார்த்தவிண் பார்வைகள் நீங்கி
இன்பப் பார்வையை இனிதுற வீசினர்
இதுதான் காதலின் இயல்பு போலும் !

98 அரும்பிய காதலால் கல்வியிற் கொண்ட
ஆ அளவிலாக் காதலை மறந்தனர் இல்லை !
பலமுறை பார்த்துப் பேசிப் பழகினும்
பண்பெதும் கெடவில்லை; அன்பினில் வளர்ந்தனர்
இருவர் இடையிலும் இருந்த வேற்றுமை
பொடிப்பொடி யாயின; ஓங்கிய தோற்றுமை
ஒருமனப் பட்டவர் உண்மைக் காதல்
மடமட எனவளர் செடியென வளர்ந்தது.

99 பார்த்திட வும்மனம் கூசினர் வெறுத்தனர்
பண்டைய நிகழ்ச்சி! வாய்த்திடும் போதெலாம்
பார்த்துப் பழகிப் பேசி மகிழ்ந்திட
பண்புறு நெஞ்சினர் இருவரும் விரும்பினர்!
விந்தை அல்லவோ காதல் வாழ்வு!
விளக்கிட முடியுமோ இயற்கைக் காதலை?
சந்தன மேனி செல்வியும் முகிலனும்
சந்திப் பதுவோ அன்றாட நிகழ்ச்சி!

12. நெஞ்சும் நினைப்பும்

100 என்னுடைய வாழ்விற்குத் துணையாய் ஆகி
ஏற்றமிகு நல்வாழ்வை எனக்கு நல்கும்
பெண்ணரசாய்ச் செல்விதிகழ்ந் திடுதல் வேண்டும்
பேராசை எனக்குண்டு முன்பு இன்றோ
அன்னவளின் அன்பெனக்கு முழுமை யாக
அட்டியின்றிக் கிடைக்கிறது ஆனால் நானோ
பன்னலமும் மிகப்பெற்று செல்வங் கொண்டு
பாவையவள் இருக்கின்ற நிலையைக் கண்டு

101 ஒருவேளை எம்காதல் நிறைவே றாமல்
ஒழிந்திடுமோ தோற்றிடுமோ என்றே அஞ்சி
கருவாகி உருவாகிக் காளை யாகிக்
கன்னியினைக் காதலிக்கும் நிலையைத் தந்து
பெருவாரி யாகஎனைச் சோதிக் கின்ற
பெருமானை எண்ணிக்கண் ணீர்உ குத்து
ஒருவாறு இருக்கின்றேன் என்னை அன்னோன்
ஒப்பில்லாப் பேரருளால் காத்தல் வேண்டும்

102 என்மாமன் இதையொத்துக் கொள்வார் ஆனால்
எழிற்செல்வி யின்தந்தை ஒப்பு வாரா?
தன்செல்வி ஏழ்மையிலே உழல்வோ னுக்குத்
தாரமாக யார்தந்தை ஒப்புக் கொள்வார்?
இன்னவற்றை எண்ணித்தான் என்றன் உள்ளம்
இன்னலுறும்; என்னசெய்ய? இவைகட் கெல்லாம்
முன்னமொரு தீர்வுகண்ட பின்பே எங்கள்
மணநிகழ்ச்சி நடக்குமிது உறுதி என்று

103 மனத்திற்குள் எண்ணியபின் பலவாறாக
மனமலேந்து சென்றதுவே! என்னை அன்பால்
தனதாக்க முனைகின்ற செல்வி நல்ல
திருடியிதில் ஐயமில்லை என்றன் நெஞ்ச
நினைவினிலே எப்போதும் தவழ்கின்றுளே!
நானுமொரு திருடன்தான் அவளுள்ளத்தை
இங்கெடுத்து வந்துவிட்டேன்! ஆக நாங்கள்
இருவருமே திருடரெனில் பிழையொன்றில்லை!

104 களவியலைப் படித்ததனுல் தவறிவிட்டேன்
கற்றதனுல் பிழைபுரிந்து எனக்குள்ளாக
உளநிறைவு சிறிதேனும் இல்லாமல்நான்
உழல்கின்றேன்; நிலைமையிது நீடித்திட்டால்
அளவற்ற துயர்ப்பட்டு: என்முன்னேற்றம்
அறிவதற்குத் துடிக்கின்ற மாமன் மேலும்
உளவருத்தங் கொண்டிடுவார் அந்தக் காட்சி
உருவாகா திருக்கமனத் துணிச்சல் வேண்டும்

105 மறப்பதற்கு நினைத்திடினும் பாழும் நெஞ்சம்
மறப்பதில்லை; நெஞ்சிலெழும் ஆசை தன்னைத்
துறக்கநினைத் தாலுமது கூடவில்லை
தொல்லையொன்ரே? காதலுறும் மனமே நீ ஏன்
மறப்பதில்லை மற்றவற்றை நினைப்பதற்கு
முயற்சியெதும் எடுப்பதில்லை; முயன்ருல் தோல்வி!
உறக்கத்தின் போதிலுமிவ் உணர்வு உந்தி
உலவுதல்போல் கனவுவரும்! இதுவா காதல்?

13. தேர்வும் தெளிவும்

106 இப்படியாய் அலைமோதி இருக்கும் போது
இன்னுமொரு மாதந்தான் ஆண்டுத் தேர்வு
எப்படியும் வந்துவிடும்; அதற்குள்ளாக
எல்லாமும் நன்ருகக் கற்றுக் கொள்க
அப்படியும் வருகின்ற ஐயம் நீக்க
அடியேனை நாடுங்கள் என்பதாகச்
செப்பலுற்ருர் ஆசிரியச் செம்மல்; யார்க்கும்
செவிமறுக்கும் மாணவர்கள் செவிகொடுத்தார்!

107 விருப்பம்போல் முதலிடத்தில் விற்றி ருந்தான்
உயர்வுதரு முதன்மைதனைப் பெற்ற தாலே
இருப்பின்றிக் களித்துமிகக் குதித்தாள் செல்விக்கு
இல்லானாய் வரப்போகும் முகிலன் கல்வி
பொறுப்போடு கற்றதனால் முதன்மை எய்திப்
புகழெய்தும் காட்சியினைக் கண்டு வந்தாள் !
சிரிப்புமிகக் கொண்டவனாய் அவன்இ ருந்தான்
சிலர்நெஞ்சில் பொறாமைத்தீ வளர்தல் கண்டான்

108 நேரினிலே நன்றாகப் பழகிக் கொண்டும்
நெஞ்சத்தில் பொறாமைதனை வளர்த்துக் கொண்டும்
சீர்சிறிதும் இல்லாத விதத்தில் வீணாய்
சினமூட்டும் படிஇழிந்த சொற்கள் பேசி
யார்சொன்னார் என்றறிய முடியா வண்ணம்
இயம்பிமிகக் கேடுசெய்யும் எலும்பில் லாதார்
யார்யாரென் றறிந்துகொண்டான் முகிலன் நாட்டில்
இலங்குகின்ற கீழ்மைதனை வெறுத்தொ துக்கி

109 நல்லமனம் பொருந்தியமேன் மக்கள் சொன்ன
நற்சொற்கள் ஆசிமொழி பாராட் டெல்லாம்
வெல்லமென அவன்நெஞ்சம் ஏற்று வந்து
விம்மியது பெருமிதத்தால்; மகிழ்ச்சி அன்றோ ?
நல்லவரும் சிலபேர்கள் இருக்கின் றார்கள்
நாடுஇன்னும் கெட்டவரால் நிறைய வில்லை !
தொல்லைதரும் தீயவர்கள் இருந்த போதும்
தூயவர்கள் புகழ் மொழிகள் ஊட்டம் நல்கும் !

14. நல்லூழ்

110 மாநிலத்தில் கல்லூரிப் புகுமு கத்தில்
முதன்மைநிலை முகிலன்பெற் றுவந்தி ருந்தான்
நானிலத்தில் கல்விமிகச் செழிப்ப தற்கும்
நற்றமிழர் அறிவியலில் சிறந்தோங் கற்கும்
தேனினியப் பெருவணிகர் தாம்முன் வந்து
தொகையாகப் பரிசுபல வைத்தி ருந்தார்
மேனியது சிலிர்த்திடவே மகிழ்ச்சி கொண்டு
முழுப்பரிசும் தான்பெற்று முறுவ லித்தான்!

111 நாளிதழும் மற்றவையும் பேட்டி கண்டு
நலமிக்க கல்வியிலே முதன்மை பெற்ற
ஆளிவன்தான் அறிந்திடுவீர் என்ப தேபோல்
அப்படியும் இப்படியும் பலகோ ணத்தில்
இளையவனின் வரலாற்றை அறிவித் திட்டு
எழிலான அவன்படத்தை வெளியிட் டுப்பின்
நாளையிவன் சிறந்திடுவான் மருத்து வத்தில்
நாட்டமிகக் கொண்டுள்ளான் எனச்சொல் லிற்று

112 அரசாங்கம் இதையறிந்து முகில னுக்கு
ஆகின்ற செலவெல்லாம் தான்கொ டுத்து
குறைசொல்ல இடமின்றி வசதி யாவும்
கொடுத்துதவி மருத்துவத்தைப் பயில்வ தற்கு
நிறைந்தவிருப் போடிருந்த முகிலன் தன்னை
நன்றுகப் போற்றியது கண்கா ணித்து
விரைந்தங்கு கலைபயிலச் சென்றான் காலம்
விரைவுறவே கழிவதனைக் கண்டு வந்தான்!

113 மற்றவர்கள் நோய்நீக்கித் தாயைப் போல
மனங்கசிந்து மற்றோர்க்குத் தன்னா லாய
நற்செயலை என்மருகன் முகிலன் செய்வான்
நானவற்றைக் கண்டுமனம் மகிழ்ந் திருப்பேன்
புற்பூண்டும் அவன்புகழைப் பாடும்; நல்ல
புத்தமுதம் உண்டவன்போல் அவன்க ளிப்பான்
சொற்கொண்டு சுவைபடைக்கும் கவிஞர் கூட
சுகப்படுத்தும் அவனிடத்தில் வரத்தான் வேண்டும்!

114 என்றுபல திருச்செல்வம் எண்ணி லுற்றார்
இதுவரையும் தான்பட்ட துன்பம் யாவும்
ஒன்றுசேர்ந்து ஓடியதாய் நெஞ்சம் எண்ண
உவமைமிகக் கொண்டவராய் மெய்ம றந்தார்!
இன்றுமினி வருநாளும் என்றென் றைக்கும்
இணையற்ற புகழ்பரப்பி எல்லா ருக்கும்
சென்றுபிணி தீர்த்திடவும் வேண்டும் என்றும்
செருக்கின்றி கனிவாகப் பழகி மக்கள்

115 நோய்தீர்க்கும் மருத்துவனாய் விளங்கல் வேண்டும்
நொடித்தவரை துன்பத்தால் வருந்து வோரை
தாய்போல இனிதாகப் பேசி எந்தத்
தருணத்தும் சினமின்றிப் பொறுமை காத்தே
ஓய்வின்றி முகிலனிவன் உழைத்து நோயை
ஒழித்திடவே முனைப்போடு தொண்டு செய்து
வாய்த்ததொரு பேறென்று நினைத்து நாளும்
வருவாயைக் கருதாமல் இருத்தல் வேண்டும்

15. காலமும் கடமையும்

116 மருத்துவப் படிப்பு தன்னில்
மதிநிறை முகிலன் நல்ல
விருப்புடன் படித்த தாலே
விளங்கினான் முதன்மை பெற்று
மருத்துவப் பணியை அரசு
மனையினில் தொடங்க லானான்
கருந்தொடும் கனிவி னோடும்
கையூட்டு வாங்கா வாறு

117 அரசினர் பணிக்கூ டத்தில்
ஆற்றினான் பணிகள் நன்றாய்!
மிரண்டிடும் பார்வை யாலே
மிரட்டலில் பயந்து செல்லும்
கரவிலா நெஞ்சங் கொண்ட
களைக்கிலா நோய்கொள் மக்கள்
திறந்துவாய் பேசக் கூட
துணிவிலார் ஏழை மாந்தர்!

118 செய்திடும் வேலைக் காக
சீரிய ஊதி யத்தை
கையிலே அரசு நல்கும்
கடமை செய் நெஞ்ச மில்லா
பொய்மனப் பித்த ரெல்லாம்
புகழ்மருத் துவராய் வந்து
நைவுறும் எளியார் தம்மை
நசுக்குவார் இரக்க மின்றி!

119 கனிவிலாப் பார்வை கொண்டு
கழலெனச் சுடுவார்; தம்மைத்
தனியர சாக எண்ணித்
தாதியர் பின்னுல் செல்வார்!
மனிதரா இவர்கள் எல்லாம்?
முகிலனிவ் வாறு எண்ணி
இனிதுறப் பணிகள் செய்வான்
எதிரியர் பெருக லானுர்!

120 யாவரும் தீயர் தாமா?
இல்லைநல் லாரும் உண்டு!
ஆவலாய்ப் பணிகள் செய்யும்
அழகிய முகிலன் தன்னை
தூயவர் போற்ற லானுர்
துணைஎன இருக்க லானுர்
நேயமாய்ப் பழகும் நல்ல
நெஞ்சங்கள் வாழ்க மாதோ!

121 இங்ஙனம் பணிகள் செய்தே
இளையவன் மகிழ்ந்தி ருக்க
மங்கையும் விருப்புக் கொண்டு
மகளிர்கல் லூரி ஒன்றில்
பங்கமில் நல்லா சிரியை
பொறுப்பினை ஏற்றுக் கொண்டு
எங்கணும் மலிந்தி ருக்கும்
இருளினை ஓட்ட லானுள்!

122 கடமையைச் செய்வ தற்குக்
கசந்திடாள்; காலந் தாழ்த்தாள்!
மடமையை நீக்கு தற்கு
மறுக்கிலாள்; கோதில் கல்வி
உடமையை பிஞ்சு நெஞ்சம்
உடன்பட பயிற்று விப்பாள்!
படபடப் பில்லா மென்மை
பாங்குகொள் இனிய மாது!

123 பொறுப்பொடும் பொறுமை யோடும்
பொன்மனச் செல்வி நல்ல
விறுவிறுப் பாகக் கல்வி
உளங்கொள விளம்பும் பாங்கை
விருப்பொடு படிப்பார் அன்பு
விளங்கிடும் முதல்வர் தாமும்
சுருங்கிய நாளில் கண்டு
சொற்களால் புகழ்ந்து ரைப்பார்!

124 செல்வியின் மொழித்தி றத்தை
சேர்ந்துடன் பணிகள் செய்து
கல்வியின் தரத்தைக் கூட்டும்
கவின்மனப் பண்பு மிக்கார்
நல்வித மாகப் போற்றி
நயவுரை புகலு வார்கள்!
கல்லூரி புகழ்பெ ருக்க
கடுமையாய் உழைத்தாள் செல்வி.

125 காலமோர் ஓட்டக் காரன்!
கடுகியே மறையு தன்றோ?
காலங்கள் மாற மாற
கவின்பரு வங்கள் மாறும்!
காலமாற் றங்கள் கண்டு
காலத்தில் செல்விக் கேற்ற
காளையை மணஞ்செய் விக்க
கருதினர் அன்புப் பெற்றோர்!

126 திருமணம் பேசு தற்குள்
செல்வியைக் கேட்க லானார்
திருமணம் செய்வ தற்கு
தடைபோதும் செல்விக் கில்லை!
பெருமனங் கொண்ட பெற்றோர்
புரிந்திடும் விதத்தில் நெஞ்சம்
ஒருவன்பால் சென்ற செய்தி
உரைத்தனள் மென்மை யாக!

127 மணமகன் தேடும் தொல்லை
மண்ணணினில் தந்தா யில்லை !
மணமகன் அழகன் தானு ?
மனங்கொண்ட அவனை நாங்கள்
இனங்கொளும் படிஎ மக்கே
இயம்பிடு என்ருர் பெற்ருர்
தனதுயிர் தந்தை தாயார்
தெரிந்திட எல்லாம் சொன்னுள்

128 மகளுரை கேட்ட பெற்ருேர்
மகிழ்ந்தனர் அதன்பின் னுலே
தகவொடு பணிகள் செய்யத்
தொடங்கினர் சுணக்க மின்றி !
நகைமிகு முகத்த ளாக
நங்கையுந் திகழ லானுள்
புகன்றதன் காதல் ஏற்ற
பெற்றவர் தமைப்பு கழ்ந்தாள் !

16. திருமணப் பேச்சு!

129 நேரில் சென்று முகிலனையே
நேர்ந்த காதல் தனைப்பேசி
சீரார் மன்றல் தனைச்செய்ய
சிறந்த பெரியார் தங்கப்பன்
பாரில் நல்ல முறைசமைத்தார்
பண்பின் வழியில் உரையமைத்தார்
நேரார் இவர்க்கு எனமுகிலன்
நெஞ்சில் போற்றி வியந்திருந்தான்

130 பேச வார்த்தை இனிஇல்லை
பேச முடியாப் பெருமகிழ்வு
பேசு கென்று அவர்கேட்க
பிள்ளை மொழியில் எலாம்சொன்னுன்
நேச மாகப் பேசுவதில்
நிகரில் லாத தங்கப்பன்
பேசப் பேச மகிழ்வெள்ளம்
பெருக்கெ டுத்து உளந்துள்ளும்

131 எங்கள் விருப்பம் தனையறிந்து
ஏழை செல்வன் என்றிருக்கும்
ஏற்றத் தாழ்வு தமைக்கூட
எண்ணு மல்நிர் இங்கென்னை
தாங்கள் மருக ளுயேற்கத்
துணிந்த உங்கள் செயல்கண்டு
வங்கக் கடலாய் என்னுள்ளம்
வற்று மகிழ்வில் திளைக்கிறது

132 வறிய னுன எனைநீங்கள்
விரும்பீர் ஏற்கீர் என்றிருந்தேன்
அறியா மைதான்! அதையின்று
அறிந்தேன் அறிந்து மகிழ்வுற்றேன்
சிறியேன் வந்து உங்களிடம்
சீரார் காதல் தனைச்சொல்லி
உரிய வாறு எங்கட்கு
உவந்து இனிய திருமணத்தைச்

133 செய்து வைக்க கோரிக்கை
தருதல் வேண்டும் எனநினைத்தேன்
கொய்து கொய்யாக் கனிதன்னை
கொணர்ந்து தருதல் போல்நீங்கள்
பெய்து நிலத்தில் நலங்கூட்டும்
பருவ மழையாய் ஆனீர்கள்
வைது விடுவீர் என்றிருந்தேன்
வாழ்த்து கின்றீர்; வணங்குகிறேன்.

134 சொல்லுதல் யார்க்கும் எளிதாகும்
சொன்ன படியே செய்வதில்தான்
அல்லல் மிகவும் உண்டாகும்
அழியாக் குறளும் இதைபோதும்!
எல்லை யின்றி மேடையினில்
எண்ணில் லாமல் பேசிடுவார்
சொன்ன யாவும் விட்டிடுவார்!
சுயநலம் ஒன்றே போற்றிடுவார்!

135 மற்றோர் போல இல்லாமல்
மேன்மைக் கருத்தைச் சொலலின்றிக்
கற்றா ராக நடந்திட்டீர்
கற்ற வாறே கடைப்பிடித்தீர் !
மற்ற யாவும் மாமனிடம்
முறையாய்ப் பேசிச் செயல்முடிப்போம்
முற்றும் மகிழ்வாய் மன்றலினை
முனைந்து செய்வோம் விரைவினிலே !

136 இசைவாய்ச் சரிஎன் றுரைத்துவிட்டு
இனியோர் நாளில் நும்மாமன்
இசைவைக் கேட்க யான்வருவேன் !
என்று சொல்லி விடைபெற்றார்
இசைந்தான் முகிலன் கைகூப்பி
இனிய பெரியார் தங்கப்பன்
விசையை மிதித்து மகிழ்வுந்தில்
விரைந்தார் ; வீடு போய்ச்சேர்ந்தார் !

17. முகிலனும் மாமனும்

137 தன்மாமன் அறிந்துகொள விவர மாக
தங்கப்பன் வந்தசெய்தி தெரிவித் திட்டு
அன்னவரின் மகளுக்குத் தன்னைக் கொள்ளும்
ஆசையினைத் தெரிவித்தார் என்ப தாயும்
முன்னமேதான் அவளைமன விருப்பங் கொண்டு
மிகப்பலநாள் பழகிவரும் பழக்கம் யாவும்
இன்முகத்து மாமனிடம் இயம்ப லானான்
இதைக்கேட்டு மாமன்மென் முறுவல் பூத்தார் !

138 பெருஞ்செல்வர் தங்கப்பன் உன்னை வந்து
பெண்ணுக்கு ஆளனெனத் தேர்ந்தெ டுக்கக்
கருதியது பெருமையுறு செயலே யாகும்
கைச்சொடுக்கில் செல்வர் பலர்முன் வந்து
திருமிக்க செல்வியினைக் கொளத்து டிப்பார் !
தேடியுனை வருவதுன்றன் நற்பே றன்றோ ?
அருமனிதர் அவரென்பேன் ! உங்கள் நெஞ்சின்
ஆசைகளை அறிந்தவராய்ச் செயல்செய் கின்றார் !

139 மெய்யான காதலுக்குத் தடைசொல் லாமல்
மேலான கருத்துடைய பெரியார் வந்து
செய்யதமிழ் மணம்புரிந்(து) இரண்டு பேரும்
சீர்மிக்க வாழ்வமைக்கத் துணைகள் செய்யும்
நல்மனத்தைப் போற்றுகிறேன் நானும் உங்கள்
நற்காதல் வாழ்வுக்குத் துணை இருப்பேன்!
செல்வமுனைச் சேர்கிறது! முன்பு போன்றே
செருக்கின்றி இருந்திடுவாய் இன்றும், என்றும்!

18 தங்கப்பனும் திருச்செல்வமும்

140 திருச்செல்வம் முகிலனது மாமன் தன்னைத்
தங்கப்பன் கண்டுவரச் சென்றார்; சற்றும்
பொருட்செல்வம் இலையென்ற போதும் நல்ல
புன்னகையைப் பெருமுதலாய் வைத்திருந்த
திருச்செல்வம் தமைக்கண்டு மகிழ்வு கொண்டு
தங்கப்பன் மனந்திறந்து பேசக் காலம்
உருண்டதுவே விரைவாக! வந்தவர்க்கு
உண்பதற்கு மாம்பழத்தை வெட்டி வைத்து

141 சுவைமிக்க எலுமிச்சைச் சாறு நல்க
தங்கப்பன் குடித்திட்டார் மகிழ்ச்சி சேர்சொற்
சுவையான பேச்சிற்குப் பின்னதாகச்
செல்விக்கும் முகிலனுக்கும் மணஞ்செய் விக்கும்
பொறுப்புதனை விரிவாகப் பேச லானார்
பொதுவாக எளிமையொடு செய்வ தாயும்
மறுப்பெதுவும் சொல்லாமல் நாள்பார்க் காமல்
மணஞ்செய்யச் சம்மதித்தார் இரண்டு பேரும்!

19. மருத்துவப் பணி

142 பணியினிலே பொறுப்போடும் பணிவன் போடும்
பரிவோடும் நடந்ததனால் வெகுநா ளாயே
அணிஅணியாய் எத்தனையோ பேர்இ ருந்தும்
அனைவோரும் முகிலனையே புகழ்ந்தார்; மேலும்
துணிவோடு செயலாற்றும் திறத்தைக் கண்டு
தூயமன மேலாளர் இவனை இன்னும்
தணியாத நோய்தீர்க்கும் மேற்கல் விக்குத்
தாய்நாட்டின் நலங்கருதி இங்கி லாந்தின்

143 இணையற்ற இலண்டன்மா நகரத் திற்கு
இவன்சென்று தேர்ந்துவழத் தெரிவு செய்து
துணைசெய்தார்; தொடர்ந்துதவி செய்வ தாயும்
தொலைவெண்ணி மருளாதே என்ப தாயும்
பணைத்தஉடல் கொண்டுநலன் விளைக்க எண்ணும்
பணிமணையின் மேலாளர் முகிலன் தோளில்
அணைத்தபடி அன்புடனே பேச லானார்
அரியபெரும் பேறிதனைப் பெற்ற தற்கு

144 நன்றிமிகு பார்வையினை அவர்பால் நாட்டி
நாக்குளற வாய்குளற உணர்ச்சி கூட்டி
ஒன்றையுமே பேசாமல் முகிலன் நின்றான்
உடனேயே மேலாளர் கைய மர்த்தி
வென்றியுடன் இங்குவந்து பிணியை நீக்கி
வரலாற்றில் உன்பெயரை நாட்டு; நானும்
இன்றுநம(து) அரசினர்க்குத் தெரிவிக் கின்றேன்
இதற்குதவி அரசுசெயும் என்று சொன்னார்!

145 சொல்லவொண்ணு மகிழ்ச்சியுடன் விரைந்து சென்று
சித்திரையின் முழுநிலவாய்த் திகழும் செல்வி
செல்லுகின்ற திக்கினிலே காத்து நின்று
செய்தியிதைச் சொல்லலுற்றான் கேட்ட செல்வி
சொல்லுகின்றேன் பெருமகிழ்வால் எனைம றந்து
சொக்கிவிட்டேன் உளங்கவர்ந்த நீங்கள் இங்கு
இல்லாமல் யான்மட்டும் தனித்தி ருப்பேன்
இலண்டனிலே நீரிருப்பீர்; இதுதான் துன்பம்!

146 உமைப்பிரிந்து தனித்திருக்கும் நாட்கள் என்னை
ஓயாமல் வருத்திடுமே அதனை வெல்ல
இமைப்பொழுதில் எனக்கேதும் மருந்து சொல்வீர்!
இதுவன்றோ பெருந்தொல்லை என்று மெத்தக்
குழைப்போடு சொல்லியநல் காதல் தேனை
கண்டுமனம் கலங்கியவா றிருந்தான்; பின்னும்
எமைப்பிரிய எண்ணாத எழிலின் ஊற்றே!
எண்ணிக்கொள் காலமினி விரைந்து போகும்!

147 ஈராண்டு காலந்தான்; ஒருவி நாடி
என்றோடிக் கழிந்துவிடும்; அதன்பின் கூடி
பாராண்டு கொண்டிருப்போம் இல்ல றத்தின்
பல்சுவையும் துய்த்திடுவோம்; அதுவ ரைக்கும்
சீராண்டு கொண்டிங்குத் தொடர்ந்து அஞ்சல்
செய்தியெனக் கெழுதிடுவாய் என்றான்; அங்குத்
தாராண்டு கொண்டிருக்கும் வண்டு! வானில்
தவழ்நிலவு உலாவரவும் வீடு சென்றார்!

148 திருச்செல்வம் தங்கப்பன் என்பா ருக்கும்
தீதற்ற செய்தியிது தெரிந்து போச்சு!
நறுக்கென்றோர் எண்ணத்தை ஆவ லோடு
நலமிக்க தங்கப்பன் சொன்னார்; பேச்சு
பொருட்செறிவு மிக்கதென திருச்செல் வத்தின்
பொன்னான திருவுள்ளம் சொல்ல லாச்சு!
சுருக்கென்று திருமணத்தைச் செய்து வைத்துச்
சென்றிடுக இலண்டனுக்கு என்போம் என்று

149 செல்வியையும் முகிலனையும் கருத்துக் கேட்டு,
சரியென்று சொல்லியதும் ஏற்பா டெல்லாம்
செயவேண்டும் எனுங்கருத்தில் அவர்பால் வந்து;
சிறப்புறுதம் உளக்கருத்தைப் பிட்டு வைத்தார்
கல்வியறி வுடையவர்கள் பரப ரப்பாய்க்
களவியல்போல் விரைவதுவோ? இதற்கு நாங்கள்
இருவருமே சம்மதியோம்; ஏற்றுக் கொள்ளோம்
என்றபடி ஒருகுரலில் சொல்லி விட்டார்!

150 இருவர்தம் மனக்கருத்தும் அதுவே யானால்
இடரில்லை! மனம்போல மன்றல் தன்னை
காதியால் மேற்கல்வி முடிந்த பின்னர்
களிப்புடனே நடத்திடுவோம் தடையொன் றில்லை
இரண்டாண்டுக் கல்வியென உரைப்ப தால்தான்
இப்பொழுதே மணவினையை முடிப்போம் என்று
திரண்டதெங்கள் உளக்கருத்து இலண்டன் சென்று
திரும்பிவந்த பிற்பாடே மணமு டிப்பு!

151 எனச்சொன்ன முதியவர்தம் வார்த்தை கேட்டு
இளநெஞ்சம் இரண்டும்சேர்ந் தின்பங் கொள்ளும்!
இனஞ்சொல்ல முடியாத பதற்றத் தோடு
இலண்டனுக்குப் போவதனை எண்ணிக் கொண்டு
மனச்சுமையை இராப்பகலாய் வளர்த்து வந்தான்
மதிநிறைந்த நல்முகிலன் செல்வி யோடு
மணிக்கணக்காய் பேசலுற்றான்; நில்லாக் காலம்
மளமளஎன் றோடிற்று சோர்வில் லாமல்!

20. இலண்டன் புறப்பாடு

152 பணிமனையின் மேலாளர் மற்று முள்ளோர்
பழகியநற் பாசத்தால் வழிய னுப்ப
அணிஅணியாய் வந்திருந்தார் முகில னோடு
அன்புடனே கைகுலுக்கி இனிமை சேர்த்தார்
பிணியாளர் ஒருசிலரும் பார்வை யாலே
பேசாத பேச்செல்லாம் பேசி நின்றார்
மணியான மனிதரிவர் என்று யாரோ
மனத்திருந்த கருத்ததனைச் சொன்னார் அங்கே

153 தங்கப்பன் திருச்செல்வம் இவர்க ளோடு
தணியாத காதலலை நெஞ்சில் மோத
தங்கநிற மங்கைமலர்ச் செல்வி நின்றாள்
தளிருடலில் ஏன்வருத்தம் என்ப தேபோல்
அங்குவந்து மென்காற்று தலைநீட் டிற்று
அதையெங்கே அவளறிவாள்? அவளுள் ளத்தில்
பொங்கிவந்த உணர்ச்சியினை வடிப்ப தற்கு
பொருத்தமுறு வார்த்தையினித் தோன்ற வேண்டும்!

154 உள்ளத்தில் தோன்றுகிற உணர்ச்சி யாவும்
உருப்பெற்று முகத்தினிலே தெரியும் என்று
விள்ளுவர்நற் பேரறிஞர் ஆனால் இங்கோ
விளங்குகின்ற முகிலனது திருமு கத்தில்
எள்ளளவும் துயர்உணர்ச்சி தெரிய வில்லை
இவன்நடிகப் பேரரசன்! நடிக்கின் றானே!
குளிர்மைமிகு பார்வையினால் பார்த்துக் கொண்டு
குறுநகையைச் சிந்தியவா றிருந்தான் நன்று

155 விண்வெளியைத் தன்வழியாய் ஆக்கிக் கொண்டு
விருட்டென்று வானூர்தி பறக்கும் நல்ல
தண்ணென்ற தென்றலங்கு வீசும்; கைகள்
தாமாக அசைந்துவிடை பெற்றுக் கொள்ளும்
கண்களிலே நீர்த்திவலை பொங்கும்; பின்பு
களிப்புவந்து அதையகற்றும் மீண்டும் துன்பம்
பெண்களுக்கே உரித்தென்று சொல்வ தேபோல்
பேதைமனச் செல்விமட்டும் அழுவாள் மற்றோர்

156 உள்ளங்கள் பொருமையினால் பலவா றெண்ண
உறுத்துகின்ற முகத்தோடு கருமை தோன்ற
கள்ளமுறு தீநெஞ்சால் கருகிச் சாக
கனிவுறுகல் நெஞ்சத்தார் சிரித்தார் மெல்ல!
அள்ளிடுவான் பெரும்புகழை ஐயோ இந்த
அற்பனுக்கா பெருவாழ்வு சிறப்பெல் லாமும்
உள்ளிருக்கும் மேலாளன் நம்மை எல்லாம்
ஒதுக்கிவிட்டு இவனைத்தேர்ந் தனுப்பிட் டானே!

157 என்றொருபால் மறைவாகப் பேசிக் கொண்டு
இங்கின்று வழியனுப்ப வராதி ருந்தால்
நன்றல்ல; நல்லான்போல் உலகில் யாரும்
நமைப்பற்றித் தவறாக எண்ணு வாறு
அன்றாடம் நடித்திடவே வேண்டும் மிக்க
அன்புடனே இருத்தல்போல் வந்து விட்டோம்!
கன்றுகிறோம் இவன்பெற்ற சிறப்பை எண்ணி
கறுவியவர் எல்லோரும் விட டைந்தார்!

158 திருச்செல்வம் தங்கப்பன் செல்வி என்பார்
தமைவிட்டு வானூர்தி சென்ற பின்னும்
பெரும்பொழுது வான்வெளியே பார்த்து நின்றார்
பக்கத்தில் நின்றவர்கள் எவரும் இல்லை!
ஒருவருமே இல்லையடா வீடு கட்கு
ஓடிவிட்டார் நடித்தவர்கள் எல்லாம்! வானில்
குருவிபல ஒன்றாகப் பறந்து தங்கள்
கூடடைய விரையும்பொன் மாலை நேரம்!

159 எதைப்பற்றிப் பேசிடவும் தோன்றி டாமல்
இடித்தபுளி போலவர்கள் மகிழ்வுந் தேறி
வதைப்பட்டுச் சின்னேரம் இருந்தார்; பின்னர்
வாய்பேசா ஊமைநிலை கலைத்து விட்டு
சதைமிக்க காரோட்டி தமைஅ ழைத்து
சடுதியாய் ஓட்டுமென விரைவு செய்தார்
அதைக்கேட்டுக் காரோட்டி விசைய முத்த
அனைவருமாய் தங்கப்பன் இல்லம் சேர்ந்தார்,

21. இலண்டன் சேரல்

160 இலண்டனிலே வானூர்தி இறங்கிற் றங்கு
இவன்வரவை எதிர்பார்த்துச் சிலபேர் நின்றார்
முகிலனிவன் எனக்கண்டு முந்தி வந்து
முறுவலோடு கைகுலுக்கி வரவு கூறி
மிகுஅன்பு கொண்டவர்கள் காரில் ஏற்றி
மிகச்சிறந்த விடுதியிலே அவனைச் சேர்த்தார்
தகுநன்றி அவர்க்கெல்லாம் சொல்லி விட்டுத்
தண்ணீரில் குளித்துஉடை மாற்றிக் கொண்டான்

161 பயணத்தால் களைத்திருந்த கார ணத்தால்
பகலவன்தன் முகத்தினிலே படும்வ ரைக்கும்
அயர்ந்துமிகத் தூங்கிவிட்டான்! அதன்பின் காலை
அருங்கடனைக் கழித்துவிட்டு வெளியே பார்த்து
முயற்சிமிகக் கொண்டவர்கள் எறும்பைப் போல
முன்னேற்றம் ஒன்றினையே கருது வோர்கள்
அயர்வெதுவும் இல்லாமல் சுறுசு றுப்பாய்
அரும்பணிகள் இயற்றிடுவர் என்றே அந்த

162 எழில்நாட்டில் இருக்கின்ற மக்கள் தம்மை
ஏற்றிமனம் மகிழ்ந்திருந்தான் அவரி டத்தில்
கொழிக்கின்ற செல்வவளம் இனிய பேச்சு
களிப்புமிகக் கொண்டுநடம் ஆடும் காட்சி
விழிநோக்கும் இடமெல்லாம் வீற்றி ருக்கும்
வற்றாத துப்புரவு இவைக ளாலே
பொழில்போலத் தோன்றுகிற தென்றே எண்ணிப்
பொன்றாத மகிழ்ச்சியினில் திளைத்தான்; அன்னார்

163 வெளிநாட்டார் தம்மோடு பழகும் நேர்த்தி
வியப்புமிகத் தந்தது நல் முகில னுக்கு!
பளிங்கென்று திகழ்ந்தபெருங் கட்டி டத்தில்
பயில்கூடம் இருந்ததங்கு முகிலன் சென்றான்
எளிமையுடன் இருந்தவனை அங்கி ருந்த
எழில்பெண்கள் பலர்கூடி அன்பாய்ப் பேசி
களிமிகு சிரிப்போடு யாரென் றார்கள்
நலமுகிலன் அவர்க்கெல்லாம் பதிலு ரைத்தான்

164 தமிழ்நாட்டான் எனக்கேட்டு அங்கோர் நங்கை
தக்கபல கேள்விகளைக் கிளப்ப லானாள்
அமிழ்தமென அவள்கேள்வி இனித்த தென்றால்
அவள்பேச்சு அத்தனையும் தமிழே அன்றோ?
தமிழ்மொழியைத் தான்விரும்பிப் படித்த தாயும்
தமிழ்பற்றித் தமிழர்தம் பழமை பற்றிக்
கமழ்கூந்தல் கன்னியவள் தெரிந்து கொள்ளக்
காட்டியநல் ஆர்வத்தை அவன்சு வைத்தான்

165 அயல்நாட்டு ஆரணங்கு உயிர்நி கர்த்த
அருந்தமிழைப் பேசிமகிழ் வூட்டி நல்ல
பெயல்கண்ட நிலம்போல ஆக்கும் காட்சி
பேசமுடி யாதபெரும் பேறே அன்றோ?
நயமிக்க தமிழ்மொழியை நங்கை யோடு
நான்மகிழ்ந்து உரையாடும் அரிய வாய்ப்பு
வாய்த்ததென்றன் பெரும்பேறு என்றே உள்ளம்
வரையின்றி முகிலனுக்குக் களித்துத் துள்ளும்!

166 இறைவனது எல்லையில்லாப் பெருங்கருணை யாலே
இலண்டன்மா நகரத்தில் மிகுந்தநலத் தோடே
உறைந்துவரும் நிகழ்ச்சியினை ஒன்றுமறைக் காமல்
உள்ளதனை உள்ளபடி எழுதிஅஞ்சல் சேர்த்தான்
நறைநக்கும் குழந்தையென விரைந்துமிக ஓடி
நலஞ்செல்லும் அஞ்சலதை விரித்துவைத்து வார்த்தை
குறைகண்டு கொந்தளித்தாள் செல்விஇன்ப நங்கை
குருத்துமுகம் வாடிடவே நொடித்தனள்தன் செங்கை

167 அஞ்சலிலே முகிலனிவன் குற்றமுற என்ன
அவளுக்கு வரைந்திருந்தான் என்பதனை இங்கே
நெஞ்சுகந்த தமிழினிலே சொன்னபடி காண்போம்
''நேரிழையே! என்னுயிரே! நலங்கூட்டும் தேனே!
வஞ்சமற்ற அன்பாலே எனைக்கவர்ந்த வஞ்சி
வார்த்தையினால் உனக்கெழுதும் அன்புமடல் கண்டு
சஞ்சலமில் லாமல்நான் இருக்கிறேன் என்று
சடுதியிலே எண்ணிக்கொள் அதுநமக்கு நன்று

168 உனைப்போல இங்கொருத்தி என்னிடத்தில் வந்து
ஒப்பற்ற தமிழாலே உரையாடி உன்னை
நினைக்கமுடி யாதபடி செய்துவரு கின்றாள்
நித்திலமே! நினைமறக்க என்னாலே ஆகுமோ?
வினைப்பயனே! விளையாட்டாய்ச் சொன்னதுதான் வேறு
விகற்பமெதும் எண்ணிமனம் சோர்ந்திட வேண்டாம்
முனைப்போடு வந்தபணி செயலாற்றிக் கொண்டுன்
முழுஉருவை நிழற்படத்தில் காணுகின்றேன் கண்ணே!

169 ஒன்றுசொல்ல மறந்திட்டேன்! இங்குள்ள பெண்ணின்
உரையாடல் சுவைபயக்கும்; அவளுடைய கண்கள்
குன்றனைய தோளுடைய எதிரியையும் வெல்லும்
கூர்மையினைக் கொண்டது; செவ் வாய்திறந்து சொல்லும்
வார்த்தையெல்லாம் கற்கண்டு; வடிவதுவும் துள்ளும்
வாகான உடலதுவும் அடடாவோ என்னும்
பார்த்ததிலே அவளொருத்தி பாங்காக மின்னி
பகைவரையும் ஈர்க்கின்ற காட்சியினைப் பின்னும்

170 அன்னவளின் பெற்றோர்கள் மிகவிரும்பி இட்ட
அரும்பெயரோ ஆங்கிலத்தில் அமைந்ததாகும் யானே
கன்னியவள் பெயருக்குப் பொருட் பொருத்தம் உள்ள
கனித்தமிழ்ப்பேர் சூட்டிமன மகிழ்ச்சியொடு நாளும்
'இன்ப'மென அழைக்கின்றேன்; அவள் மறுக்க
வில்லை
இருவருமே தமிழ்மொழியில் பேசுகின்ற போது
கண்பரெல்லாம் அன்புடனே எமைப்பார்த்து மெல்ல
நகைக்கின்ருர்; அதற்கென்ன? நானும்சிரிக்
கின்றேன்!

171 பன்னுட்டு மருத்துவர்கள் மேற்கல்விக் காகப்
பயன்மிகுந்த வகையினிலே வசதிபல செய்து
பன்னுட்டு மேதையர்கள் பயிற்றுவிக்கும் கல்வி
பண்பார்ந்த முறையினிலே ஐயமெலாம் நீக்கும்
இலண்டன்மா நகரத்தின் கலைபயில்நற் கூடம்
என்நெஞ்சைக் கவர்ந்துளது! என்னவெனச்
சொல்வேன்!
உலகத்தின் பிணிநீங்க உழைக்கின்ருர் இங்கு
உலகநலம் விழையுமனப் பெரியார்கள் வாழ்க!

(வேறு)

172 தன்னலத்தைக் கருதாத தங்கச் செல்வி!
தேடுமென்றன் உள்ளமுனை நேரிற் காண!
என்னலத்தை எழுதிவிட்டேன் அங்குள் ளார்கள்
எல்லாரும் நன்னலமாய் இருக்கின் ருரா?
நின்னலத்தை நினைவோடு பேணிக் கொண்டு
நீங்காத மகிழ்ச்சியிலே திளைத்தே உன்றன்
சொன்னலத்தை வடித்தெனக்கு விரைவாய் நல்ல
சுவைநிறைந்த மடலெழுது பிறபின் னுலே!"

173 இந்தமடல் கண்டதுமே எழுந்து சென்று
இன்றமிழில் மடலெழுதத் தாள்எ டுத்து
வந்தவளைத் தங்கப்பன் கண்டார்; செல்வி
வந்ததொரு நல்லஞ்சல் முகிலன் அத்தான்
என்றனுக்கு வரைந்துள்ளார் இங்கி ருப்பார்
யாவரையும் ஆவலுடன் வினவி யுள்ளார்
சந்ததமும் நமைப்பற்றி எண்ணிக் கொண்டு
சங்கடத்தைக் கருதாமல் படிக்கின் ருராம்

174 என்றெதுவோ தந்தையிடம் சொல்லி விட்டு
எட்டிநடை போட்டறையைப் பூட்டிக் கொண்டு
"இன்றுங்கள் அஞ்சலெனச் சேர்ந்த தென்றன்
இனியவரே! உங்களுக்கு ஏழைச் செல்வி
பொன்றாத பைந்தமிழால் எழுதும் சேதி
பாவைஎனைப் பெற்றவரும் சுற்றத் தாரும்
நன்றாக இருக்கின்றார் நம்மைப் போல!
நங்கை 'இன்பம்' நலந்தானே? அறிய ஆவல்!

175 கலைத்தலைவி பட்டத்தைப் பெற்ற போதும்
கல்லூரி ஆசிரியை என்ற போதும்
அலைகிறது என்மனது! என்னை விட்டு
அயலொருத்தி தனைநீங்கள் சிறப்பித் திட்டதால்
சிலையாகத் தடுமாறி நிற்கின் றேன்நான்
செல்வியுமா இப்படியென் றெண்ணி னாலும்
நிலைதன்னை எழுதிடவே விரும்பு கின்றேன்,
நங்கைமனம் அப்படித்தான்; அன்பு கூர்ந்து

176 என்மனத்தைப் புண்படுத்தும் வகையில் நீங்கள்
ஏதேதோ எழுதிஎனை வருத்த வேண்டாம்
பொன்மனத்தை உடையவர்தான் நீங்கள்; என்றும்
பாவைஎனக் குரியவர்தான்; எனினும் கூட
இன்னொருத்தி தனைப்பற்றி எழுதா தீர்கள்
ஏனோஎன் உளத்திற்குப் பொறுமை இல்லை!
அன்போடு பொறுத்திடுக! அங்கே உங்கள்
அருங்கல்வி தனில்நீங்கள் வழக்கம் போல

177 முதன்மையிடம் பெற்றுவர வேண்டும்; உங்கள்
முகத்தினைஎன் மனக்கண்ணில் பார்த்துக் கொண்டே
எதனையும்நான் செய்கின்றேன் விநாடி ஒன்று
யான்கழிக்கப் படும்பாடு பெரும்பா டாகும்
இதயத்தில் எப்போதும் வீற்றி ருக்கும்
என்னவரே! மன்னவரே! சென்ற வேலை
தனைச்சிறப்பாய் முடித்திடுக! நினைவாய் அஞ்சல்
தொடர்ந்திடுக! இனிப்பே! மற் றெல்லாம் பின்பு"

178 அஞ்சலிநு இலண்டனுக்குச் சென்று அங்கே
ஆவலுடன் முகிலனிதைப் படிக்க லானான்
கெஞ்சலுரை கண்டதுமே கண்க லங்கிக்
கன்னியவள் உளம்நோக எழுதிட் டோமே
நெஞ்சுடைந்தி யிருக்கின்றாள்! பெண்கள் என்றால்
நல்லார்க்கும் பொல்லார்க்கும் எல்லா ருக்கும்
கொஞ்சமேனும் பொறுமையது இருக்கும் போலும்!
கருதாமல் போனேனே! எனநி னைத்தான்.

23. தேற்றுதலும் போற்றுதலும்

179 அன்புருவாய் ஆனவளே அருமைச் செல்வி
அனைவருமே நலமெனநீ எழுதி உள்ள
உன்பதிலைப் படித்துமன மகிழ்வு பூத்தேன்
உளந்திறந்து மடலெழுதி யுள்ள தாலே
என்பிழையை நானுணர்ந்தேன் இனிமேல் ஏதும்
இடருனக்குத் தரமாட்டேன் எனைநீ நம்பு!
தென்னாட்டுப் பெண்ணரசே! அன்பின் ஊற்றே!
தெரியாமல் செய்பிழைதான் பொறுத்தல்
வேண்டும்!

180 உள்ளத்தால் உறுபொருளால் மிகவி ரிந்த
உயர்கருத்தால் நனிசெல்வம் கொண்ட வள்நீ!
எள்ளத்தான் எழுதினையோ ஏழை என்று
என்னவளே! நீகொண்ட செல்வத் திற்கு
பள்ளத்தில் கிடக்கின்ற ஏழை யர்கள்
பாங்குடனே எழுந்துதங்கள் கைகள் கட்டி
மெள்ளநடை போடுவரே நின்னைக் கண்டு
மேதினியில் நீயுமொரு ஏழை தானோ?

181 ஏழையராய் இருப்பதுவே நல்ல தென்று
ஏழைஎனச் சொன்னாயோ? இல்லை என்றால்
வாழையடி வாழையெனத் தொடரும் உன்றன்
வளர்பண்பால் நீயுனையே ஏழை என்று
கூறினையோ? கருத்தெதுவும் புலப்ப டாமல்
கலங்குகிறேன் கண்மணியே! கனியின் சாறே!
வேற்றடத்தில் யாரிடத்தும் ஏழை என்று
விளம்பிவிட முனையாதே! அன்பே! என்மேல்

182 எத்தகைய காதலினைக் கொண்டுள் ளாய்நீ!
எனக்குரிய மடமயிலே எழிலே நானோர்
பித்தன்தான்; பிழைசெய்தேன்; இனிமேல் என்றும்
பிழைசெய்யா அறிவதனை கருணை கூர்ந்து
குற்றமில்லா இறையருள வேண்டு கின்றேன்
குறைமறந்து மகிழ்க; இனி விரும்பு மாறு
நற்பெயரை நாட்டிடுவேன் முதன்மை பெற்று
நங்கையுனை வந்தணைப்பேன்; சரியா, செல்வி?

183 என்மாமன் உன்தந்தை யாவ ருக்கும்
இனிமைமிகு நல்வணக்கம் சொல்வ தாக
பொன்மானே! அன்னவர்பால் போய்ச்சொல் பின்னர்
பேசுதற்கும் எழுதுதற்கும் நிரம்பச் செய்தி
உண்டெனினும் உயர்கடமை எனைஅ ழைக்கும்
உரியபடி பிந்தாமல் குறித்த நேரம்
செண்டே! யான் செலவேண்டும் கல்விக் கூடம்
சிரித்தபடி இருந்திடுநீ வருகின் றேன்நான்!

184 இப்படியாய்ப் பற்பலவாய்ச் செய்தி சொல்லும்
இனிமையுறு கதைபலவும் சுமந்து செல்லும்
செப்பமிகு கடிதங்கள் பலவாம்; அந்தச்
சுவைமடல்கள் படிப்பதெனில் நாட்கள் போதா.
நெஞ்சங்கொள் எண்ணத்தை எடுத்து வைக்கும்
நல்லதொரு தூதாக மடல்வி ளங்கும்!
கொஞ்சுதமிழ்க காதலுரை யாவும் பெற்று
கொள்ளைமகிழ் வூட்டிடுமே கடிதம் யாவும்!

24. மாமன் மறைந்தார்

185 எப்போது எதுநடக்கும் என்று யாரும்
எடுத்துரைக்க இயலாது இங்குள் ளோர்கள்
இப்போது இருந்தாரே இதற்குள் ளாக
இவரெங்கே எனத்தேடும் நிலையில் உள்ளார்
தப்பாது சொல்வதெல்லாம் நடக்கும் என்று
தரணியிலே எவர்சொல்ல முடியும்? உண்மை
செப்பாது பொய்சொல்வோர் சொல்லக் கூடும்!
செகத்தினிலே மனிதனுக்கு உரிமை இல்லை!

186 நேற்றிரவு படுக்கைக்குப் போகும் போது
நல்லபடி மகிழ்ச்சியொடு வீட்டின் முன்னே
காற்றினிலே நின்றபடி சற்று நேரம்
கலகலப்பாய்ச் சுவைகூட்டிச் சோர்வில் லாமல்
ஊற்றெழுக்கு நடையினிலே பேசிச் சென்று
உறக்கத்தை அணைத்தவர்தான்; எழவே இல்லை!
கூற்றுவன்தான் கவர்ந்திட்டான்; கொள்ளைக்
காரன்!
காலையிலதான் யாமறிவோம் என்றார் அங்கே

187 விழிமூடித் துயில்புரியும் மனிதர் தம்மை
விடுவரை பலர்பார்த்தார்; துயர்மி குந்து
விழிநீரை வீதியிலே சிந்திச் சில்லோர்
விம்மியொலி கிளப்பிநின்றார்; 'ஐயோ' என்னும்
மொழிபேசிச் சிலர்சென்றார் 'முன்னோர் சென்ற
முறைப்படியே இவர்சென்றார், பாவம்' என்றே
அழியாத தத்துவத்தைப் பேசி விட்ட
அகமகிழ்வு சிலர்கொண்டார்; ஆனால் அந்தோ!

188 செத்துவிட்ட திருச்செல்வம் பேச வில்லை!
சாகுமுன்னர் அவரென்று சொன்ன மக்கள்
மொத்தமுமாய் மதிப்பையெலாம் ஒதுக்கி விட்டு
மெத்தனமாய்ப் பிணமென்பர்; சவமென் பார்கள்!
வித்தகர்கள் அவரவர்தம் வீடு சென்றார்
விளையாட்டு இறைவனுக்கு இவைக ளெல்லாம்
நித்தியமில் லாததிந்த உலகம் என்னும்
நீதியினைப் பலர்புரிந்தார் அன்று மட்டும்!

189 தன்மருகன் முகிலன்பேர் பரவும் வேளை
தரணியிலே பேறனைத்தும் பெற்ற தாக
பொன்மனத்தில் தோன்றியதால் விரைவில் ஆவி
போனதுவோ யாரறிவார்? நொடியில் சாவு
தன்னுடைய உயிரென்று கருதி வந்த
தங்கைமகன் அருகிலில்லாப் போதில் வந்து
மண்மீது சாய்க்குமெனச் சிறிது கூட
மனத்துளவும் திருச்செல்வம் எண்ண வில்லை

190 தங்கப்பன் செல்வியிது தெரிந்த பின்பு
தாளமுடி யாததுயர்க் கண்ணீர் சிந்தி
பங்கமில்லா நல்மனிதர் திருச்செல் வத்தைப்
பாவிஎமன் ஏன்கவர்ந்தான் விரைந்து வந்து?
எங்களுளம் வேகிறதே துன்பங் கொண்டு
இதைமுகிலன் அறிந்துமிக வருந்து வாரே
சங்கடந்தான் செய்தியிது அவர்தெ ரிந்தால்
சலித்திடுவான் துயர்ப்படுவான் எனநி னைத்தார்

191 வருந்திடுவார் என்றெண்ணி செய்தி தன்னைத்
தொலைவிருக்கும் அவருக்குத் தெரிவிக் காமல்
இருந்திடுதல் சரியாமோ? துயர்வந் தாலும்
எப்படியும் தெரிவித்தல் கடமை அன்றோ?
ஆதலினால் தம்துயரை அடக்கிக் கொண்டு
அவலமுறு நிகழ்ச்சியிதைச் சொற்செட் டாக
ஏதமில்லா முகிலனுக்கு எழுதிப் போட்டார்
இழப்பதனை அறிந்துமுகில் துடிது டித்தான்!

25. ஓலமும் கோலமும்

192 என்துயரைத் தன்துயராய் எண்ணி வாழ்ந்த
ஏற்றமுறு என்மாமன் திருச்செல் வத்தை
யானிழந்தேன்; தந்தையாய் தாயாய் நின்று
யான்வருந்தித் துயர்ப்பட்ட வேளை யாவும்
நன்மனத்தால் துயர்நீக்க முழுமு யற்சி
நல்கிப்பின் கல்விக்கண் திறந்து விட்டு
மன்பதையில் என்னையொரு மனித னாக
மண்ணரசி மடியினிலே உலவ விட்ட

193 கருணைக்கோ; கல்விதனை யான்பெற் றிங்குக்
கலைச்சிறப்பும் நிலைச்சிறப்பும் எய்தி வாழ
பொருளைஎன வற்றாமல் ஊக்கம் ஊட்டிப்
பெருந்துன்பம் தான்பட்டுப் பொருளும் தந்து
* குருணையினைத் தானுண்டு நல்ல சோற்றைக்
குறைவின்றி நானுண்டு தொடர்ச்சி யாக
மருளாமல் கற்றுவரத் துணைஇ ருந்த
மனிததெய்வம் மறைந்தனரோ? நம்பக் கூட

* குருணை = நொறுங்கரிசி

194 மனமெனக்குத் துணியவில்லை உடலை நல்ல
மல்வீரர் போல்வைத்துப் பேணி வந்த
இனங்காத்த பெருவீரர்! இவரை ஏன்தான்
எமன்கவர்ந்தான்? இழந்தஉயிர் மீட்ப தற்கு
எனக்கெவரும் உரைத்திருந்தால் அதனைச் செய்து
எப்பாடு பட்டேனும் மீட்டு என்றன்
மனத்துயரும் விட்டிருப்பேன்; ஐயோ என்தாய்
மாமனுயிர் போனதுவே நானில் லாமல்!

195 என்தந்தை தாயிறந்த போதும் கூட
எனக்கழுகை வரவில்லை; ஆயின் இன்று
பொன்மனத்துச் செம்மலென இருந்த மாமன்
'புதுஉலகு' போனதெண்ணி நெஞ்சம் வேகும்!
இன்னலுறு மனத்திறகோர் அமைதி இல்லை!
இழப்புதனை மறக்காத மனத்தால் தொல்லை!
என்னசொல்வேன்! என்னசெய்வேன்! வாழ்வு தந்த
இணையற்ற மாமனையான் இழந்திட் டேனே!

196 தனக்கென்று வாழாமல் என்றன் வாழ்வு
தழைப்பதற்கே எந்நாளும் உழைத்த அண்ணல்
மனக்கவலை அறியாமல் வளர்த்து என்னை
மனிதனென உலவவிட்ட அன்பின் வாரி
கனக்கின்றது என்றனுளம் கவலை கொண்டு
கடலளவு துயர்பெருகி எனைவ ருத்தும்!
எனக்குமுயிர் வாழ்வதிலே விருப்பம் இல்லை
என்றுமனத் துயருற்றான் மிகுதி யாக!

197 என்னுடைய விருப்பறிந்து மன்றல் செய்ய
இசைந்துமன விருப்புடனே விரைவு காட்டித்
தன்னுடைய ஆசையினைத் தெரிவித் திட்ட
தாய்மாமன் புகழ்சொல்ல வார்த்தை உண்டா?
பொன்னுள்ளம் கொண்டபெரும் மனித ராகப்
பூவுலகில் வாழ்ந்தானை ஆளாக் கிட்ட
இன்னுயிரும் போனதுவோ மண்ணை விட்டு
இறந்துபட்ட மாமனுக்கு இணையார் உண்டு?

198 மனமெதிலும் செல்லாமல் சுற்றிச் சுற்றி
மாமனது மறைவினையே எண்ணி ஏங்கும்
தினமுண்ணும் வயிற்றுக்கு ஓய்வு நல்கித்
துயர்நினைவில் கட்டிலிலே புரள லானான்
தனக்குதவி செய்துவரும் பலபேர் தம்மைத்
தெரிந்துகொள முடியாமல் திணற லானான்
நன்மைமிகப் பெருகிவரும் வேளை தன்னில்
நெடும்பயணம் போனவரை நினைந்து மூன்றான்!

26. இன்பத்தின் துன்பம்!

199 தற்செயலாய்ப் பார்த்துவிட்டுப் போவ தற்கு
தளிர்க்கொடியாள் 'இன்ப'மென்னும் இளைய மாது
அற்புதமாய் விளங்கியஅவ் விடுதி யுள்ளே
அலட்சியமாய் நடந்துவிரை வாகச் சென்று
கற்பதிலே நாட்டமுள்ள முகிலன் அங்கே
குடியிருக்கும் அறையினது முகப்பில் நின்று
சொற்குழைத்து அழைப்புமணி அழுத்தி கையைச்
சொகுசாக விடுவித்தாள் விசையை விட்டு

200 இயம்பவொண்ணாத் துயர்க்கடலில் சிக்கிக் கொண்டு
இனியென்ன செய்வதென்ற தெளிவும் இன்றி
நயமிழந்து நலமிழந்து! வாடும் வேளை
நங்கைகுரல் கேட்கிறதே! விசைய முத்தும்
ஒலிவந்து கேட்கிறதே என்ன துன்பம்!
ஒருநாளும் இல்லாத புதுமை யாக
வலிவிழந்து வசமிழந்து இருக்கும் இந்நாள்
வந்தவெவர் என்றெண்ணி எழுந்து வந்து

201 கதவுதனைத் திறந்துவிட்டுப் பார்த்தான் அங்கே
கவர்ச்சிமிகு உடையினிலே கன்னி 'இன்பம்'!
இதமிக்க நறுமணத்தைப் பரவ விட்டு
இளநகையை உதட்டினிலே நெளிய விட்டுப்
பதமாக வாய்திறந்து 'வணக்கம்' என்றாள்
பதிலுக்கு அவனுமொரு வணக்கம் சொன்னான்
மிதமற்றக் முகிலன்போய் கட்டில்க் தன்னில்
மரப்பொம்மை போல்விழுந்தான் மயக்க முற்று!

202 ஏனென்று தெரியாமல் விழித்து நின்ற
எழிற்பாவை அருகிருந்த தண்ணீர் மொண்டு
மானென்று மருண்டாள்;நீர் தெளித்தாள் மெல்ல
மயக்கமது தெளிந்தவனும் விழித்தான், வந்த
தேனென்று அவள்வினவ அதற்குச் சொந்தத்
தாய்மாமன் நனைவளர்த்த பெரியோன் செத்து
வானென்று என்துயரை வளர்த்தான் துன்ப
வாவியிலே நானுள்ளேன் என்றான்; இன்பம்

203 எற்கனவே பெற்றோரை இளமைப் போதில்
இழந்துவிட்ட துயர்நிகழ்ச்சி யாவும் முன்பே
வேற்றுமையைக் கருதாமல் சொன்னீர் அந்த
விவரமெலாம்; மாமனுமா மறைந்தார்? ஐயோ!
ஆற்றவொண்ணாப் பெருந்துயர்தான் ஆனால் எல்லாம்
ஆண்டவனின் திருச்செயலாம்; அதனால் கண்ணீர்
ஊற்றாக வடித்தாலும் செத்தார் வாரார்!
உளத்துயரை நீக்கிடுக பிறந்தார் யாரும்

204 சாகாமல் வாழ்கின்ற வரங்கள் பெற்றுச்
செகத்தினிலே இருப்பதாய்ஓர் செய்தி இல்லை!
நோகாமல் பிள்ளையினைப் பெறுவார் உண்டோ?
நாமெங்கும் கேள்வியுற வில்லை எங்கும்
போகாமல் வருந்தாமல் புகழை யார்தான்
பெற்றார்கள் வையத்தில்? அதனால் மேலும்
வேகாமல் வேகாதீர் வேத னைத்தீ
வேள்வியிலே மூழ்காதீர் என்று தேற்றி

205 இயற்கையினை வெல்வதாகச் சிலர்சொல் வார்கள்
இயம்புகிறேன் அவையெல்லாம் பொய்யே; அன்னார்
செயற்கையிலே சிலவற்றைக் கண்டு விட்டுச்
சாற்றுகிறார் ஏதோ எனினும் மக்கள்
முயற்சியினால் ஓரளவு வெல்ல லாகும்
முழுவதுமே வெல்வதெனில் முடியா தென்பேன்
அயர்ச்சியெல்லாம் விட்டிடுக: என்றும் போல
அருங்கல்வி தனில்கவனம் செலுத்து கென்றாள்

206 நாமுந்தான் ஒருநாளில் சாவோம் பாரில்
நல்லவரோ கெட்டவரோ எவர்தான் சாகார்?
சாமுன்பு போர்செய்ய மனித ருக்குச்
சற்றேனும் தகுதியிலே என்றாள் பின்னர்
போமுன்பு நற்செயல்கள் செய்து நல்ல
புகழ்ஈட்டி இருப்பதுவே சிறப்பாம் உன்றன்
பூமுகமும் பொலிவுமுனைப் பிரிந்து நீங்கிப்
போவதுவோ என்றாள், பின் சென்றாள் வீடு.

207 தத்துவத்தைப் பிழிந்ததனை ஊட்டி விட்டுத்
தளர்ச்சிமிகு நடையோடு வீடு சேர்ந்தாள்
இத்தரணி தனிலுள்ள அநுப வங்கள்
யாவையுமே பெற்றவள்போல் முகில னுக்கு
மெத்தவுமே ஆறுதல்கள் தேறு தல்கள்
முறையோடு நான்சொன்னேன், எனக்கோ இங்கு
அத்தனையில் எள்ளளவும் துணைக்கில் லாமல்
அலைபாயச் செய்கிறதே எனக்கேன் துன்பம்

208 அவர்வருத்தம் கொளல்சரிதான்; நானும் வீணாய்
அவதியுறல் வேண்டாமே; எனினும் உள்ளம்
கவல்கிறதே ஏனிந்த மயக்கம் என்று
காரணத்தை நெடுநேரம் துருவிப் பார்த்து
சுவர்ப்பல்லி வாலிழந்து துடித்தல் போல
சோகத்தில் அவர்துடிக்க நியாயம் உண்டு
அவர்துயரில் பங்குகொள நான்யார்? எண்ணம்
அதையொன்றே அசைபோடல் வியப்பே அன்றோ?

27. வரவும் உறவும்

209 இன்பமெனும் இளையமகள் முகிலனது அழகுடலம்
அன்புமொழி பண்புரையால் கவர்ந்திழுக்கப் பட்டத
னால்
பன்முறைகள் அவளோடு பேசிமகிழ் விருப்போடு
போயிடுவான் பேசிடுவாள் சிரித்திடுவாள் தொடர்
கதையாய்

210 நிதநிதம் அவனுடைய அறையினுக்குச் சென்றுமனம்
பித்தாகும் வகையினிலே பழகி, அவன் தானாகக்
கொத்துமலர் போலிருந்த அவளுருவை யேஎண்ணி
குழம்பிமிகத் தவித்திருக்க வைத்தனளே 'வஞ்சி' இன்பம்

211 நானாகச் செல்லாமல் வலியவந்து மனமினிக்கத்
தேனாகப் பேசுகின்றாள், சின்னேரம் போனதுமே
மானாகத் துள்ளிவிரைந் தோடுகிறாள்; அவள் விழிகள்
மீனாக இருந்தென்னை வருத்துவதேன் இதுஎன்ன?

212 அடிக்கடிக்க அம்மியுமே நகருமென்றால் பெண்ணொருத்தி
துடிக்கின்ற இளமைநலம் பொங்குகின்ற எழிலோடு
நடிக்கம்பால் தாக்குதல்போல் உணர்ச்சிகொண்டு தாக்கிவரின்
வெடிக்காதோ பெருங்காதல்? 'இன்ப' த்தால் இளமுகிலன்

213 காதலெனும் பெருவலையில் அகப்பட்டுத் தத்தளித்தான்
காதலித்து ஏற்கனவே செல்விக்குக் கையடித்துத்
தந்திருந்த முகிலன்தான் செய்தியதை மறந்தவனாய்
நொந்திருந்த நிலைமாறி நொடிப்பொழுதில் தனைமாற்றி

214 முதன்முதலாய் இன்பத்தைக் காதலிப் தைப்போல
விதவிதமாய் உடையுடுத்தி வேண்டுகின்ற கேளிக்கை
சிட்டாட்டம் திரைப்படங்கள் இவைகளிலே மனஞ்செலுத்தி
வாட்டமின்றி வாழ்ந்துவந்தான்; மாறிவிட்டான் பழமுகிலன்

215 இருந்துவந்த துயரெல்லாம் அவனைவிட்டுப் பறந்தேக
விருந்துண்டு இருவருமாய் வேடிக்கைக் கதைபேசி
அருந்தினரே மதுவெல்லாம்; அங்குள்ளார் செயல்போல
வருந்திச்சில பழக்கங்கள் அவன்கற்று அதில்தேர்ந்தான்

216 கற்ருரும் மற்ருரும் களிப்பினிலே மிகத்திளைத்துக்
கலைகளிலே மிகச்சிறந்த தமிழ்நடன நாட்டியத்தை
எந்நாளும் போற்றிடுவர்; உடல்தெரிய ஆடுகின்ற
'கண்ணராவி'க் காட்சிகளை மிகப்பழிப்பர்; அவர் வழியில்

217 முகிலனுந்தான் இதுவரையில் நடந்துவந்தான் அவையெல்லாம்
திகிலுற்ற குழந்தைமனம் கொண்டிருந்த கருத்தென்று
இன்றெண்ணி மேனுட்டு நடனத்தை மேலென்று
இயம்புகிருன் மாற்றமெல்லாம் காலஞ்செய் கோலந்தாம்!

28. உடலும் உயிரும்

218 கடல்கடந்து சென்றிருக்கும் உயிரே என்றன்
கனவினிலும் நினைவினிலும் என்றும் நின்று
மடலெழுதத் தூண்டுகிறீர்; உம்மை எண்ணி
மலர்கூடச் சூடாமல் தனித்திங் குள்ளேன்
அடலேறே! அரும்பொருளே! உங்கள் மாமன்
அழவிட்டு வேறுலகம் சென்ற தெண்ணி
உடலாலும் உளத்தாலும் உங்கட் கென்றே
உயிர்வாழும் எனைக்கூட மறந்தீ ரோநீர்?

219 ஏனஞ்சல் எனக்கெழுத வில்லை. நீங்கள்?
ஏதேனும் பிழையாக எழுதிட் டேனு?
தேனமுதே! தெளிந்தபத நீரே! என்னைத்
தேம்பவிட எண்ணுதீர்; உங்கள் அஞ்சல்
தானெனக்கு ஆறுதலாய் உள்ள திங்குத்
தமிழ்கூடக் கசக்கிறது; இன்னும் சொன்னல்
நானங்கு வரலாமா என்றென் உள்ளம்
நச்சரித்துக் கொண்டுள்ளது; இதைஎன் செய்ய?

220 இருபத்து நான்குமணி நேரத் தில்நீர்
எப்போதும் படித்திட்டால் உடம்பென் னாகும்?
ஒருபத்தி எழுதவுமா நேர மில்லை?
உடல்சோர உழைப்பதனால் உளம் சோர்ந்து
எனைமறந்து எழிற்காதல் தனைம றந்து
இனியநம(து) ஊர்மறந்து உற்றார் தம்மை
நினைப்பதுவும் இல்லாமல் வெறுத்திட் டீரோ?
நிறைமதியீர்! எனக்குடனே உரைக்க வேண்டும்!

221 அஞ்சலது எழுதியபின் சிலநாள் போகும்
ஆனாலும் மறுமொழியோ வரவே இல்லை
நெஞ்சுமிக வேதனையால் வாட லுற்று
நேர்மனத்தாள் இயங்கிவந்தாள் எந்தி ரம்போல்!
அஞ்சவைக்கும் நோயெதுவும் வருத்துங்
கொல்லோ?
அயராத பணிதானா? படிப்புத் தானா?
துஞ்சஉடல் சோர்ந்தாலும் தூக்கம் இன்றி
தொல்லைமிகப் பட்டுழன்றாள் செல்வி நங்கை.

222 முகவரியில் மாற்றமெதும் இருக்கு மோ? என்
மடல்கையில் கிடைக்கலையோ? என்ன, அத்தான்!
சுகமதையே எழுதியொரு மடல்வ ரைந்தால்
சங்கடத்தை மறப்பேனே ஏன்தான் என்றன்
துயர்நினைக்க மாட்டாரோ? என்று நெஞ்சில்
தொடர்ந்துபல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு
உயர்குலத்து மலர்க்கொடியாள் உளைய லுற்றாள்
உண்மைநிலை தெரிதற்கு விருப்ப முற்றாள்.

223 தொலைபேசித் தொடர்புகொண்டு பேசி விட்டால்
தொல்லையுறும் மனஞ்சிறிது அமைதி கொள்ளும்
அலைமனத்துச் செல்வியிவ்வா றெண்ண லுற்ற
அதற்கான முயற்சியினைச் செய்த போது
நில்லாத மழையாலும் காற்றி னாலும்
நெடுந்தொலைவு பேசும்வழி யாவும் கெட்டு
இல்லாமல் அடைபட்டுப் போன தாக
இயம்பியது கேட்டுமன வெறுப்புக் கொண்டாள்

224 பேசிவிட வழியிலையால் தந்தி யொன்றில்
"பதில்கொடுப்பீர்! நலந்தானா?" என்ப தாக
மாசெதுவும் இல்லாத மங்கை செல்வி
மறுமொழியைக் கோரிநின்றாள்; அதன்பின் ஏற்ற
ஆசிரியப் பணியினிலே மனஞ்செ லுத்தி
அதைத்தொடர்ந்து செய்திட்டாள் மலர்ச்சி இன்றி
காசினியில் பெண்களுக்குக் கவலை ஒன்றா?
கடமைசெயும் போதினிலும் நினைவு தோன்றும்.

29. எண்ணமும் எழுத்தும்

225 தந்தியைக் கண்ட பின்னர்
முகிலனின் மனம்வ ருந்தும்
அந்தகன் போன்றே இங்கு
அல்லலில் மாட்டிக் கொண்டேன்
என்றனை என்ன செய்ய
ஏவிநீ எழுது கின்றாய்?
உன்றனை மறந்தேன் இல்லை
உளத்துயர்ச் சுமைக ளோடு

226 எப்படி மீள்வ தென்று
ஏதுமே அறிகி லாது
தப்படி எடுத்து வைத்துத்
தயங்கியான் இருக்கின் றேனே!
இப்படி என்றன் வாழ்வில்
ஏற்படும் என்று சற்றும்
கற்பனை யாகக் கூடக்
கருதவே இல்லை; உண்மை!

227 உன்மனம் வேகும் வண்ணம்
உரைத்திட விரும்ப வில்லை
பொன்மனம் கொண்ட உன்னைப்
பொசுக்கிடக் கருத வில்லை
என்மனம் மாறிப் போக
இங்கொரு 'இன்பம்' வந்தாள்:
நன்மனங் கொண்டு முன்னர்
நீயொரு அஞ்சல் தன்னை

228 கெஞ்சிய வாறு நல்ல
கருத்துடன் விடுத்தி ருந்தாய்
அஞ்சிய படியே இன்று
அறிவினை அடகு வைத்துக்
கொஞ்சிய பெண்ணோ டேநான்
காதலைக் கொண்டு விட்டேன்
மிஞ்சிய செயல்தான்; நானும்
மெத்தவே வருந்து கின்றேன்

229 ஒன்றுதான் இப்போ தென்னால்
ஓதிட இயலும் நானே
இன்றுநன் றுகச் சிந்தித் (து)
இறைவனே கொடியன் என்பேன்
என்றுமே என்னை விட்டே
இம்மியும் பிரிய எண்ணு
இன்பமும் கொடிய வள்தான்
எனையவள் ஈர்க்கின் றுளே !

230 இன்னவா றிறைவ னேடே
இன்பமும் முகில னாலே
எண்ணிலா ஏச்சுப் பெற்றுள் !
இவையெலாம் செல்வி அஞ்சல்
கண்டதும் தனக்குள் சொல்லிக்
கலங்கினன் அதன்பின் 'இன்பம்'
சென்டென வந்தாள்; நல்ல
சிரிப்பினைச் சிந்த விட்டு !

231 'அவளொடு அவனும் சேர்ந்து
ஆங்கில நடனம் ஆடி
அவனியே தமதென் றெண்ணி
அளவிலா மகிழ்ச்சி கொண்டு
கவலையில் லாமல் நேரம்
கடப்பதும் அறியா ராக
உவப்புறு கதைகள் பேசி
உடலெலாம் சோர்ந்த பின்னர்

232 கைகளை அசைத்து விட்டு
விடைதனைப் பெற்றுக் கொண்டு
வைகறை வேளை தன்னில்
விழுந்தனன் படுக்கை மீது
தையலைக் கண்ட போதில்
தான்முனர் தனக்குள் ளாக
வைததை எலாம்ம றந்தான்;
விழித்ததும் செல்விக் கென்று

233 ஒருமடல் தனைஇ ருந்து
வேகமாய் எழுத லானுன்
'அருமனச் செல்வி நீ இங்(கு)
அனுப்பிய தந்தி, அஞ்சல்
எல்லாமும் பெற்றுக் கொண்டேன்
எழுதிடப் பொழுது சற்றும்
இல்லைஎன் பதுவே குற்றம்
இங்குநான் நலந்தான்; இங்கு

234 நலத்துடன் இருக்கின் ருயா?
நலந்தனை ஓம்பிக் கொள்க!
பலப்பல பணிகள் உண்டு;
படிக்கவும் நிரம்ப உண்டு;
இலையொரு செய்தி; இன்னும்
எழுதிடத் தேவை நேர்ந்தால்
பழுதிலாப் பாவை உன்றன்
பார்வைக்கு மடல்வி டுப்பேன்!

30. வஞ்சியின் நெஞ்சம்

235 இப்படிஏன் தொடர்பில்லா மனிதர் போல
ஏதோஓர் முறைக்காக கடமைக் காக
எப்படியோ எழுதியுள்ளார் என்றுள் எண்ணி
இன்னுமிரு திங்களுண்டு அதற்குப் பின்னர்
தேர்வெல்லாம் எழுதிவிட்டு வெற்றி யோடு
தேர்ச்சிமிகப் பெற்றவராய் வருவார் அன்றோ?
சோர்வெல்லாம் நீங்கிமனம் மகிழும் போது
சும்மா(வா) விட்டிடுவேன் இதுகு றித்து?

236 நேரமில்லாப் பெருந்தகையிர்! தங்க ளுக்கு
நோயறிய நோய்நீக்கும் வழிகள் கற்க
நேரமுண்டு; அவ்வேளை எம்மைக் கொஞ்சம்
நினைத்தற்கும் நுமக்கங்கு நேரம் இல்லை
என்றெல்லாம் பலசொல்லி அவரை இன்னும்
எண்ணற்ற கேள்விகளால் துளைத்தெ டுப்பேன்
அன்றவரும் என்னருகில் வந்துட் கார்ந்து
அருள்கூர்ந்து மன்னிக்க என்பார் அன்றோ?

237 இராப்பகலாய் உட்கார்ந்து இடைவி டாமல்
எப்போதும் கற்பதெனில் துன்பந் தானே!
கரவில்லாத் தூய்மையுடன் வாழ்ந்து வெற்றிக்
கனிபறித்து வரவேண்டும்; மீண்டும் வந்து
இரக்கமொடு பணிபுரிந்து இங்குள்ளாரின்
இதயத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுச்
சுரக்கின்ற கருணையினால் இனிதாய்ப் பேசித்
தொல்லைதரும் நோயொழிக்க வேண்டும் அன்பாய்

238 நத்தையென நாள்நகரும் மெல்ல மெல்ல
நகர்ந்துசெலும் நாள்விரைந்து கடந்தால் என்ன
பித்துமனம் இவ்வாறு எண்ண லாகும்
பேசாத பேச்செல்லாம் பேசு தற்கு
மெத்தவிரைந்(து) அத்தானும் வருவார்; வந்து
மேல்நாட்டின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வார்
இத்தகைய கற்பனையில் ஈடு பட்டும்
இளஞ்செல்வி மனம்பிரிவால் வாட லாகும்

239 உள்ளத்தில் எழுகின்ற கேள்வி கட்கு
ஒருவரம்பும் இல்லையன்றோ? அதனால் கேள்வி
வெள்ளத்தில் தன்னைத்தான் மூழ்க டித்து
வேதும்பிடுவாள்; ஆனாலும் அவ்வப் போது
உள்ளத்தில் உறுதிதனை ஏற்றி வைத்து
உயர்குறிக்கோள் தனைஅடைய யார்க்கும் இல்லா
நல்லதொரு வாய்ப்பன்றோ அவர்பெற் றிட்டார்
நங்கையுளம் இப்படியும் எண்ணிக் கொள்ளும்.

31. வேண்டுதலும் தூண்டுதலும்

240 காதலித்தோம் இதுவரையில் அதற்கும் எல்லை
கட்டாயம் உண்டலவோ? ஆத லால்நாம்
காதலுக்கு எல்லையெனச் சொல்லு கின்ற
கடிமணத்தைப் புரிந்திடுவோம் உடனே என்று
பேதலித்த முகிலனிடம் பாவை 'இன்பம்'
பேசலுற்றாள் அதுகேட்ட அவன்தன் உள்ளம்
வேதனையால் வெம்பிற்று துயர்கூட் டிற்று
வடிவழகி இன்பமது கண்டு கொண்டு

241 திருமணத்தின் பேச்செடுத்தால் ஏன்வ ருத்தம்?
தவறேதும் மொழிந்தேனு ? எனைம றந்து ?
இருமனமும் ஏற்றதன்பின் திரும ணத்தை
ஏற்பதுதான் முறைமையென நூல்கள் ஓதும்;
அருமையுறு கருத்திதனை ஏற்று உள்ளம்
அலைபாயா திருப்பதற்கு இருவர் கூடி
பெருமைநலம் நல்குகின்ற மன்றல் செய்து
பிழையற்ற வாழ்வுசெயத் துணைஇ ருந்து

242 ஒருவனுக்கு ஒருத்தியெனும் தத்து வத்தை
உணர்ந்துபல நலன்செய்து உலகம் போற்ற
திருமணத்தை விரைவினிலே செய்து கொள்வோம்
தீங்கற்ற வழியிதனை ஏற்றுக் கொள்வோம்
எருவிட்டு உரமிட்டுப் பயிர்பே ணல்போல்
இளமைக்குத் திருமணத்தைச் செய்கின் றோம்நாம்
மறுமொழியே பகராமல் ஊமை யாகி
மலைத்தபடி நிற்பதென்ன ? சொல்க ! என்றாள்

243 நீ சொன்ன கருத்தைத்தான் என்றன் நெஞ்சும்
நினைக்கிறது வேறென்றும் இல்லை என்று
ஓர்பொய்யைச் சொல்லிவிட்டு முகிலன் ஏதோ
ஓய்வின்றி எண்ணிமனச் சலிப்புக் கொண்டு
பூமுகமே ! மணம்பற்றி இன்னோர் நாளில்
பலப்பலவாய்ப் பேசிடுவோம்; என்றன் உள்ளம்
ஊர்பற்றி எண்ணும்என் உடலும் கூட
உறக்கத்தை அழைக்கிறது ; போய்வா என்றான்.

244 ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் ஊரைப் பற்றி
ஓயாமல் எண்ணிஉடல் வருத்தா தீர்கள்
தாய்பற்றி எண்ணிவிட்டால் தூக்கம் கூடத்
தவறிவிடும்! அதனால்நான் சொன்ன வாறு
சாய்த்திடுக உடலத்தைக் கட்டில் மீது
சலிப்பென்றும் களைப்பென்றும் சொல்வ தெல்லாம்
போய்த்தொலையும் புதுமைதனை மனம்வி ரும்பும்!
போய்வருவேன் எனச்சொல்லிப் பளிங்கு போனாள்.

32. தனிமைத் தவிப்பு

245 இதுவரையும் எப்படியோ ஒருவா றுக
எழிற்காதல் தொடர்ந்தின்பம் கூட்டி விட்டுப்
புதுமையினை இன்றுமனம் நாட லாச்சு!
பூவையவள் திருமணத்தை வற்பு றுத்திப்
பதுமையெனப் போய்விட்டாள்; உள்ளம் இங்கே
பாகாகி வேகுகிறேன்; யார்பால் சொல்ல?
மதுமலரை நாடுமொரு வண்டு போல
மனமயங்கி மனிதநிலை தவறி விட்டேன்

246 கிட்டாத இடத்தினிலே எனக்குக் காதல்
கிட்டியது என்றுமனம் மகிழ்ந்தேன்; ஓர்நாள்
எட்டாத கனியாக இருந்த செல்வி
எனக்கெனவே பிறந்தனள்என் றெண்ணி இன்பச்
சிட்டாக மனமகிழப் புதுமை யான
சீர்த்தியுறும் காதலெனும் ஆற்றில் நீந்திப்
பட்டான கைகோத்துப் பலநாள் நேரம்
போவதுவே தெரியாமல் பேசி வந்தேன்

247 ஊழ்வினையா? சூழ்வினையா? எங்கள் காதல்
உடைவதற்கு வந்தபெரும் பகைவன் தானா?
காழ்ச்சிந்தை பலர்கொள்ள என்னை மட்டும்
கலையறிவு மிகப்பெற்றுத் தொண்டு செய்ய
ஆழ்கடலைத் தாண்டிப்போய் அயலார் நாட்டில்
அறிந்துவரத் தெரிந்தெடுத்தே அன்பு கொண்டு
பாழ்நினைவே இல்லாத பெரியார் நல்ல
பெருஞ்சிந்தை மேலாளர் துணைஇ ருந்தார்.

248 அவையெலாம் என்நெஞ்சில் தோன்றித் தோன்றி
அளவில்லாத் துயர்கூட்டி எணவ ருத்திச்
சுவையின்றிப் பொழுதெல்லாம் கடந்து போக
சுமைகொண்டோன் நடப்பதுபோல் கால்தள் ளாட
எவைசெய்ய என்றறியா நிலையில் சிக்கி
ஏதேதோ எண்ணுகிறேன் பயனில் லாமல்
கவைக்குதவா எண்ணந்தான் முந்தி வந்து
கலக்கிமிகக் களைப்பூட்டும் என்செய் வேன்யான்?

249 செல்வியினைக் காதலித்தேன் இன்னும் கூட
சிறியமனம் அவளுருவை மறக்க வில்லை
கல்விபயில் நினைவுடனே இங்கு வந்தேன்
களங்கமிலாப் பெண்ணொருத்தி பார்வை யாலே
சொல்லுதற்கு முடியாத ஆசை மூளச்
சொக்கிவிட்டேன் அவளிடத்தில் அதுவும் உண்மை
பொல்லாத செயலென்று மனஞ்சொன் னாலும்
போதைமிகக் கொண்டதனால் இன்பத் தின்பால்

250 பொய்யுரைத்தேன் அவட்கென்றே பிறந்தேன் என்றும்
புவியினிலே அவளொருத்தி தன்னைக் கண்டே
மெய்க்காதல் மிகக்கொண்டேன் என்றும் சொல்லி
மறைத்தேனே செல்வியெனும் பெண்ணி டத்தில்
மையலினைக் கொண்டிருந்த கதைக ளெல்லாம்
மனத்தினிலே ஆசையெனும் பயிர்வ ளர்த்து
தைய'லின்பம்' இன்றென்னைக் கொள்க என்றே
தொடங்குகிறாள் பேச்செல்லாம் எதனைச் செய்ய?

33. கருவும் உருவும்

251 இணையற்ற உணர்ச்சியுடன் கூடி நல்ல
இன்பத்தை நுகர்ந்திட்ட முகிலனாலே
அணையாத பேரின்பம் 'இன்பத்' திற்கு
அளித்திடவே ஒருயிரும் அவள்வ யிற்றில்
துணையாகி வளர்ந்துவரும்; தூய காதல்
திருப்பாட்டுப் பாடிவந்த அவளின் தோற்றம்
பணைத்தபடி இருப்பதனை கூர்ந்து நோக்கின்
பார்த்திடலாம்; மகிழ்வுருவாய் அவள்இ ருந்தாள்!

252 கருவுற்ற செய்திதனை முகில னுக்குக்
கழறிவிட எண்ணியநல் 'லின்பம்' நாணம்
அரும்புதலால் சொல்லவொரு வார்த்தை இன்றி.
அப்படியும் இப்படியும் சிறிது நேரம்
பெரும்புதிர்போல் நடந்திட்டாள்; இருந்தாள்;
நின்ருள்
பேசாமல் சிறுபொழுது கடந்த பின்னர்
விரும்பியதைச் சொற்களிலே சுவைத்தேன் கூட்டி
உரைத்ததன்பின் வெட்கத்தால் சிரித்தாள் மெல்ல!

253 அதைக்கேட்ட முகிலனேதும் பேசி டாமல்
அலுங்காமல் குலுங்காமல் நின்றி ருந்தான்
இதைக்கண்டு 'இன்ப'மவள் இனிய செய்தி
இருசெவியும் மகிழ்வுறவே கேட்ட தாலே
எதைப்பற்றி யும்பேச ஏலா ஞகி
இருக்கின்ருன் போலுமென எண்ணிக் கொண்டாள்
உதைபட்ட பந்தைப்போல் அவனி ருக்க
உளமகிழ்ந்த 'இன்ப'மெனில் சிரிக்க லாஞள்!

254 திருமணத்தைச் செய்தற்கு இனியும் வேறு
தடையெதுவும் சொலப்படுமோ? மணிவ யிற்றில்
கருவொன்று உருவாகி வருவ தெல்லாம்
கண்டறிந்த பின்னரும்பொய்ச் சாக்குச் சொல்லி
திருவற்ற தீச்செயலைச் செய்ய லாமோ?
திக்கற்ற வழிப்போக்கன் கலங்கல் போல
பெருந்துயரங் கொண்டவனுய் முகிலன் நின்ருன்
பேதை'இன்பம்' அதையறியாள் இனும்சிரித்தாள்!

255 செல்வியிடம் தீராத ஆசை கொண்டு
சேர்ந்தலைந்து திரிந்துள்ளேன் பலநாள்; ஆனுல்
பொல்லாத இழிசெயலைப் புரிந்தேன் இல்லை
பெண்மயக்கம் கொண்டவளைச் சேர்ந்தே னில்லை
கல்லாத கடைமகனுய் இருந்தே னில்லை
கனித்தமிழர் பண்பாட்டை மறந்தே னில்லை
எல்லாமும் எனைவிட்டு எங்கோ செல்ல
என்மடமை மட்டுமெனைத் தொடர்வ தென்ன?

256 மணமெதுவும் புரியாமல் மையல் கொண்டு
மடமாது இன்பத்தை மருவி சிச்சீ!
குணமற்ற செயல்பலவும் செய்து விட்டேன்
குற்றத்தால் ஒருயிரும் வளர்ந்த தன்றோ?
தணலுக்குள் நிற்றல்போல் மிகவும் பிந்தித்
தவிக்கின்றேன் இனிஎண்ணிப் பயன்தான் என்ன?
நுணலும்தன் வாயாலே கெடுதல் போலே
நெறிபிறழ்ந்தேன்; பொய்சொன்னேன்; வாயால்
கெட்டேன்!

257 என்றுபல எண்ணியநல் முகிலன் பின்னர்
இன்பஉரு வாயிருந்த 'இன்ப'ந் தன்னை
நன்றுநன்று! நீ எனக்குச் சொன்ன சேதி
நாமகிழ்ந்து இன்புறுவோம் என்றே ஓதி
அன்றிரவு முழுவதுமே ஆடிப் பாடி
ஆசைவளர் நாடகத்தை நடத்த லானார்
ஒன்றுபட்ட இருவர்க்கும் உறக்கம் தோன்றும்
ஒளிபாய்ச்சும் கதிரவனும் அதற்குள் வந்தான்!

34. முடிவும் விடிவும்

258 சென்றதனை எண்ணிஎண்ணிக் கலங்கல் விட்டுச்
செய்வதனை இனித்துணிந்து செய்தல் வேண்டும்
என்றபடி தனக்குள்ளோர் முடிவு செய்து
இனியுமென்றன் நெஞ்சத்தில் செல்வி தன்னை
அன்றுடம் எண்ணுவது பிழையே ஆகும்
அவள்நினைவை மறக்கடிக்கப் பழகல் வேண்டும்
என்றைக்கும் என்வாழ்வின் அந்த ரங்கம்
இன்பமறி யாதபடி நடத்தல் வேண்டும்

259 நானுமொரு குழந்தைக்குத் தந்தை என்றே
நாடறியப் போகிறது; அதற்குள் ளாக
நானுமொரு கணவனென நானி லத்தில்
நடமாட வேண்டாவோ? கணவன் என்ற
வானுயர்ந்த நிலையினிலே என்னை ஆக்கி
வளர்மகவின் தாய்'இன்பம்' தன்னை என்றன்
தேன்மனைவி என்றாக்கிக் கொள்ள எங்கள்
திருமணத்தை உடனடியாய்ச் செய்வோம் நாங்கள்

260 எளிமையுடன் திருமணத்தை நடத்திக் கொள்வோம்
எதற்காக வீணுகப் பணத்தைக் கொட்டி
வெளிபுகவும் இடமின்றிக் கூட்டம் கூட்டி
வம்பளந்து நேரத்தைக் கொல்லவேண்டும்?
துளிக்கூட அதில்விருப்பம் எங்க ளுக்குத்
தொடரவில்லை! இதுமிகவும் நல்ல தன்றோ?
இளித்தபடி பலர்நிற்க ஏழை மக்கள்
இல்லாமைப் பல்லவியைப் பாடு வார்கள்

261 ஒருபுறத்தில் ஒலிபெருக்கி கூச்சல் போடும்!
ஓயாமல் மேளங்கள் அதிரும்; இன்னும்
மறுபுறத்தில் பந்திக்கு முந்தும் கூட்டம்
மனம்விரும்பும் பாடலினைக் கேட்ப தற்கே
ஒருகூட்டம் ஒருபக்கம் நின்றி ருக்கும்
ஓயாத பெருந்தொல்லை! காத டைப்பு!
வெறுக்கிறது உள்ளமிக இவற்றை எல்லாம்
ஒதுக்கிவிட்டு விரைவினிலே மணஞ்செய் வோம்யாம்!

262 முன்சொன்ன முடிவுதனை மனத்திற் கொண்டு
முறையாகத் திட்டங்கள் தீட்டி யார்யார்
மன்றலுக்குத் தேவையென கவன மாக
மனத்திருந்த பெயரையொரு காகிதத்தில்
நன்ருக எழுதிவைத்தான்; வேண்டு கின்ற
நலப்பொருட்கள் மணப்பொருட்கள் என்னென் னென்று
தன்போக்கில் சிந்தித்துக் குறிப்பெ டுத்தான்
தவறில்லை என்றுசரி பார்த்துக் கொண்டான்.

35. திடீர்த் திருமணம்

(வேறு)

263 வீணய்ச் சடங்கேதும் செய்யாமல் — பொருள்
விரயம் எதுவுமே இல்லாமல்
காணப் புதுமுகம் யாருமின்றி — நல்ல
காலங்கள் ஒன்றுமே பாராமல்
மாலை இரண்டு தனித்தனியே — இள
மனத்தில் இன்பம் துளிர்த்திடவே
கோலக் கழுத்தினில் சூடினரே — பல
கோடிக் கதைகள் பாடினரே!

264 உற்றார் உறவினர் யாருமின்றி — தம்
ஊரார் எவரும் துணையின்றிப்
பெற்றோர் பெரியவர் இல்லாமல் — மணப்
பெருநாள் நிகழ்ந்தது சொல்லாமல்!
அழைப்பிதழ் பந்தல் இவையின்றி — இரு
அன்புளம் சேர்ந்த(து) உவகையுடன்
பிழைகள் எதுவுமே நேராமல் — மகிழ்வுப்
பெருநாள் நடந்தது சீராக!

265 நெருங்கிப் பழகும் சிலர்மட்டும் — நல்
நேய உறவொடு வந்திருந்தார்!
விருந்தும் சிறிய அளவில்தான்! — எனில்
வியக்கும் வகையில் இருந்ததுவே!
சுருங்கிய கூட்டமே வந்ததனால் — வெகு
சிறப்பாய் மணமும் நடந்ததுவே!
அருங்குண நண்பர் அனைவோரும் — மிக
அன்பொடு வாழ்த்தி மனைசென்றார்!

266 இரவும் இனிதுற வந்ததுவே — எழில்
இளையோர் மனமும் மகிழ்வுறவே!
சுரந்தது மகிழ்ச்சி தடையின்றி! — அடடா!
சுவைமொழி நீண்டு தொடர்ந்ததுவே
வானில் தவழ்ந்தது பால்நிலவு — ஒளி
வந்து நிறைத்தது மாடியிலே
தேனில் கிடந்த விழிநான்கும் — உடல்
தேவை உணர்த்தும் மொழிபேசும்!

36. மடல் தந்த துயர்

(வேறு)

267 அன்புசால் அத்தானுக்கு
அருந்தமிழ்த் தூது விட்டுப்
பண்புடன் செல்வி கோரும்
பொருளினைத் தருதல் வேண்டும்
துன்பமோ துளியும் இல்லை
தூயநின் அஞ்சல் ஒன்றே
அன்ப!நான் கேட்பதாகும்
அதனைநீர் வரைவீராக!

268 இதற்குமுன் இரண்டோர் அஞ்சல்
எழுதிய பின்னும் கூட
எதற்கெனத் தெரிய வில்லை
எனக்கொரு பதிலு மில்லை
அதற்குளம் வருந்த வில்லை
அங்குநீர் படிப்ப தற்கே
பொழுதுபோ தாது; நன்றாய்ப்
புரிந்துளேன் என்ற போதும்

269 நன்னலம் ஏது மில்லாத்
தமிழ்த்திரு மகனே! உங்கள்
நன்னலம் அறிவ தற்கு
நங்கையின் உளம்து டிக்கும்!
இன்னலில் லாமல் நன்றாய்
இருக்கிறீர் என்ற றிந்தால்
மன்னவ என்றன் நெஞ்சம்
மகிழ்ந்திடும் இன்பு கொண்டு

270 இதுவரை இலண்டன் கல்வி
இனிதுற நடந்தே றிற்று
எதுவரை தொடரும் இன்னும்?
இனும்சில நாட்கள் தாமே?
அதுவரை பொறுப்ப தின்றி
அடிமைசெய் வதற்கொன் றில்லை
மதிநிறை செல்வ மே!என்
மனந்துறை இனிய பேறே!

271 தடையென இருக்கும் நாட்கள்
தகர்ந்திடும் காலம் ஆச்சு!
இடைவிடாப் படிப்பும் கூட
இனிதுற முடிந்து போகும்!
விடைமடல் வரைவ தில்லா
வீரரே! நீங்கள் இங்கு
கடைசியில் வரும்நாள் ஆச்சு
கனிமனப் பெரியோய் வாழ்க!

272 பதில்மடல் வரைவீ ரென்று
பாவையான் நம்பு கின்றேன்
பதிலினைப் பார்த்தால் உம்மைப்
பார்த்ததாய் எண்ணும் உள்ளம்
இதிலெனை ஏமாற் ருதீர்
இனிதுற மடல்வி டுப்பீர்!
அதிசய ஆற்றல் கொண்டோய்;
அளவிலா வணக்கம்; நன்றி!

(வேறு)

273 எங்கேயோ போயிருந்தான் முகிலன்; அந்த
எழில்நங்கை 'இன்ப'ந்தான் இருந்தாள் வீட்டில்
அங்கேஅவ் வேளையிலே அஞ்சற் காரர்
அழுத்திமணி அடித்ததுமே 'இன்பம்' சென்று
செங்கையால் அஞ்சலினைப் பெற்றுக் கொண்டு
சிட்டாக உள்நுழைந்தாள் கதவைச் சார்த்தி
மங்கையவள் மனத்தினிலே ஏனோ அன்று
மடலதனைப் படித்திடவே ஆசை தோன்றும்!

274 சரிதானு தவறாஎன் றெண்ணு தற்குள்
சட்டென்று கடிதத்தைக் கைதி றக்க
வரிகளிலே கண்பதித்து மனம்ப திக்க
வருந்தியதோர் பெண்ணின்கை வரைந்த அஞ்சல
பெரியதொரு துயர்கொடுக்க மனம்ப தைத்து
பெரும்பிழையைச் செய்துவிட்ட தாக எண்ணி
எரிவிறகு போலானுள் என்ன செய்வ(து)
என்றறிய முடியாமல் மிகத்து டித்தாள்

275 புகைவண்டிப் பயணத்தில் கதவின் ஓரம்
பார்த்தபடி சென்றிடுவர் சிலபேர்; அங்கு
வகைவகையாய்ப் பூத்திருக்கும் செடிம ரங்கள்
வளஞ்செறிந்த இயற்கைதரு அழகுக் காட்சி
குகைமலைகள் குன்றிவற்றைக் காணும் போது
குன்ருத மனமகிழ்ச்சி தோன்றும் நெஞ்சில்
புகையோடு கரிவந்து அந்த வேளை
பார்க்கின்ற கண்களிலே வந்து வீழும்!

276 அதுபோல 'இன்ப'மவள் வாழ்வை நன்றாய்
அநுபவித்து வருகின்ற இந்த நாளில்
எதுவொன்றும் அறியாத நிலையில் செல்வி
எழுதியுள்ள அஞ்சலதும் வந்த(து) இன்று!
மெதுவாகக் கடிதத்தை முன்போல் மூடி
மீளாத துயரத்தால் அழுதாள் வாடி
புதிர்போல அந்நேரம் முகிலன் வந்தான்
பொலிவிழந்த இன்பத்தைக் கண்டு நொந்தான்

277 ஒன்றுமில்லை உளத்திற்கு உடலுக் குத்தான்
ஓரளவு சோர்வுண்டு! அதுவும் கூட
இன்றுசற்று நேரத்தில் தீர்ந்து போகும்
என்றாள்; நீ மருந்தேதும் பருகி உன்றன்
கன்றுடலைக் காக்காமல் இருக்கின் றாயே
குடிஎன்று மருந்துதனைக் கொடுத்தான், நன்றாய்
ஒன்றிநின்று முகிலனதைக் கொடுத்த போதும்
ஒதுக்கிவிட்டுப் போய்ப்படுத்தாள் புழுங்கிக்
கொண்டு

37. பையன் பிறந்தான்!

278 எதையும் கருத்திற் கொள்ளாமல்
ஏனோ காலம் விரைந்ததுவே
பதைத்த வாறு முகிலனொடு
பாவை 'இன்பம்' தனித்திருந்தாள்
விதைத்த விதைகள் முளைத்துப்பின்
விளைந்த பின்னர் நிலம்நோக்கும்
உதைத்த வாறு ஒருகுழந்தை
உலகைக் காணத் துடித்ததுவே!

279 இயற்கை யான முறையினிலே
எவரின் துணையும் இல்லாமல்
செயற்கை மருந்தெதுவும் சேர்க்காமல்
செக்கச் சிவந்த நல்முத்து
வியக்கும் படிஇவ் விரிவுலகில்
வந்து குதித்த(து) அழுகையொடு
மயக்கும் அந்தப் பேரழகு!
மனத்தைக் கவரும் பேரழகு

280 குழந்தை தன்னைக் கண்டவுடன்
குழந்தை யாகி இளமுகிலன்
மழலை ஏதோ பேசலுற்றான்
மட்டில் லாமல் மகிழ்வுற்றான்
அழகு மிக்க குழந்தையினை
அள்ளி முத்தம் மிகஇட்டுப்
பழகு தமிழில் பலசொல்லிப்
பாவை 'இன்பம்' கொஞ்சிட்டாள்!

281 முகிலன் போன்றே இவனுள்ளான்
முதிர்ந்த அழகன் எனச்சிலரும்
அகிலம் முழுதும் இவனைப்போல்
ஆரும் உண்டோ எனச்சிலரும்
மகிழ்ந்து பலவாய்ப் புகழ்ந்திடுவார்
மெய்தான்; பையன் மிகஅழகு!
மகிழ்ந்து 'இன்பம்' பெருத்திட்டாள்
மாயப் பையன் சிரித்திட்டான்!

38. விக்டரின் வருகை

282 இளமைக் காலம் முதலிருந்தே
இன்பத் தோடு உறவாடி
அளவில் லாத விளையாட்டு
ஆடிப் பாடி மிகமகிழ்ந்து
களவு மணமும் செய்தற்குக்
காளை ஒருவன் துடித்திருந்தான்
உளவு இதனை அறியாமல்
உடன்பி றந்தான் போலென்று

283 எண்ணிப் பழகி இருந்திட்ட
இன்பம் சற்றும் பிழையறியாள்
கண்ணி யத்தை எலாம்விட்டுக்
காட்டான் போல ஓர்நாளில்
வெண்ணி லாவைப் பழிக்கின்ற
வனிதை இன்பம் தனைஇழுத்து
மண்ணில் விழுந்தான்; குடிபோதை!
மெத்தத் துணிந்து அவன்கையைக

284 கடித்தாள் 'இன்பம்' பலங்கூட்டி
கடிவாய் குருதி கக்கியதே!
பிடித்தாள் ஓட்டம் மனைநோக்கி
பாய்ந்த முரடன் கீழ்விழுந்தான்
கடிப்புக் கன்று ஆளான
காளை விக்டர் எனப்படுவான்
துடிப்புக் குறையா அவனின்று
தூயோன் முகிலன் மனைவந்தான்

285 பிள்ளை பிறந்த சேதியினைப்
பேசிச் சிலபேர் சென்றார்கள்
வெள்ளை உள்ளம் கொண்டிங்கு
உடனே பார்க்க நான்வந்தேன்
கொள்ளை அழகாய் இருக்கின்றான்
கோலக் குமரி உன்பிள்ளை
கள்ளம் இல்லா மழலையிது
கன்னி உன்றன் வார்ப்பன்றோ?

286 என்று பலவும் அவன்சொல்ல
'இன்பம்' சிறிதே நகைசெய்தாள்!
நன்று நீங்கள் இன்றுமென்னை
நெஞ்சில் வைத்துப் போற்றுகின்றீர்
என்றும் இல்லாத் திருநாளாய்
எங்கள் இல்லம் வந்துள்ளீர்!
அன்று போன்று பழகிடவே
அன்பாய் நீங்கள் வரவேண்டும்!

287 இன்பத் தின்சொல் கேட்டதுமே
எல்லை யில்லா மகிழ்வாலே
அன்பு தோன்ற அவள்முகத்தை
அங்கும் இங்கும் அசையாமல்
பண்பு குலைக்கும் பார்வையினால்
பார்த்த வாறே நின்றிருந்தான்
கணிசி மிட்டும் நேரந்தான்
கட்டிப் பிடித்துக் கன்னத்தில்

288 கணக்கில் முத்தம் கொடுத்திட்டான்
கூச்சம் என்ப தில்லாமல்
இணக்கத் தோடு இன்பமுந்தான்
இணைந்து முத்தம் கொடுத்திட்டாள்
சுணங்க இனியும் இடமில்லை!
சுருக்கென் றெழுந்தே முகிலன்போய்
குணக்கே டாக நடப்பதற்குக்
கூவிச் சத்தம் மிகப்போட்டான்.

289 விக்டர் வேக மாய்எங்கோ
வெளியே ஓடிப் போய்விட்டான்
சிக்கல் ஒன்றும் இலாததுபோல்
சிரித்த 'இன்பம்' நடந்துமிகப்
பக்கம் வந்து நின்றிட்டாள்
பாய்ந்த முகிலன் வெறியோடு
துக்கம் கொண்டு அழும்வரையில்
தொடர்ந்து அடித்தான்; கூச்சலிட்டான்!

290 எதுவும் நேரா ததுபோல
இன்பம் இருந்தாள்; முகிலனுக்கோ
வதுவை இவளை ஏன்செய்தோம்?
வாழ்வா இதுஎன் றுளம்நையும்!
மதுர மொழிகள் பேசியிளம்
மனங்கள் மகிழ்ந்த தொருகாலம்!
எதுவும் பேசாப் பகைஞர்போல்
இருக்கும் இதுவும் ஒருகாலம்!

39. முற்றிய சோதனை

291 பலப்பலவாய்க் கண்டித்த பின்னும் கூட
பாவையிவள் திருந்தாமல் விக்ட ரோடேதான்
நலப்பாட்டும் பாடுகிருள்; சந்திப் பின்னும்
நரிக்குணத்தான் இல்லத்தில் தொடர்வ தென்றால்
சிலைபோலப் பொறுப்பதற்கு முடியா தென்றால்!
சினத்தீயில் அவள்வெந்து சாம்ப லாகக்
கொலைவெறியைத் தூண்டுகிருள்! என்ற னுக்குக்
கொடியவனும் என்பொருளை என்முன் ணுலே

292 தொடுகின்றான்; அணைக்கின்றான்; தொல்லை யன்றோ
தொடுக்கின்றான்? இவன்போலும் கயவன் தன்னை
விடுவதுவும் பிழையாகும்; ஆனால் என்றன்
உளம்நிறைந்த இன்பமும்ஏன் அவன்பால் சென்றாள்?
எடுபிடியாய் எனைஎண்ணிக் கொண்டாள் போலும்!
எழிற்சோலை தனில்இருப்ப தாக எண்ணி
வடுவில்லாப் பெண்ணொன்று இன்பந் தன்னை
உளக்கோயில் தனில்வைத்து மகிழ்ந்தி ருந்தேன்!

293 ஏற்கனவே பிழைபுரிந்தேன் என்றன் செல்வி
எனையுயிராய் எண்ணிமகிழ் கற்பின் செல்வி!
தூற்றவொரு இடமில்லாத் தூய்மை மிக்க
துடியிடைக்குச் செய்திட்ட வஞ்சம் ஒன்றா!
ஏற்காது! நான்செய்த பிழையை வையம்
என்செய்வேன்; செய்பிழைக்கு இறைவன் இந்தச்
சீற்றத்தைக் கொண்டனனோ என்றன் மீது?
சிறியமனம் கொதிக்கிறதே அமைதி யின்றி!

294 மனப்புயலும் ஓயாமல் குழப்பங் கொண்டு
மங்கை'யின்பம்' தனைஎண்ணிக் குமைந்தாள்; இந்த
வனத்தினிலே வாழ்வதுவோ இனியும் என்று
வருத்தத்தால் பலபடவே எண்ணி நொந்தான்
தனக்குவரும் சோதனைக்கோர் முடிவும் இன்றித்
தவித்திருந்த முகிலனது உளத்து டிப்பைக்
கணக்குரைக்க முடிந்திடுமோ? செல்லாக் காசாய்க்
கருதினளோ எனை'இன்பம்'? துயர்வ ளர்த்தான்!

295 இனியுமிதை வளரவிட்டுத் துயர்பெ ருக்கல்
இயலாது; இதற்குமொரு எல்லை யுண்டு!
தனித்தனியே இருந்தவர்கள் ஆசை கொண்டு
தனிக்குடும்பம் நடத்திவந்தோம்; துய்த்தோம்
வாழ்வை!
முன்நடந்த நிகழ்ச்சிதனை மறந்து விட்டு
முறைகேட்டிற்கு இனிமுற்றுப் புள்ளி வைப்போம்!
தனித்தனியே பிரிந்திடுவோம்; தவறு உண்டு?
தானாத துக்கத்தால் அழுதான்; பாவம்

296 மண்ணுக்கும் நாட்டுக்கும் வெவ்வே ருன
மனத்தெளிவும் பண்பாடும் தோன்றும் அன்ருே!
பெண்ணுக்கும் அதுதானே! அவள்பி றந்த
பெருநிலத்துப் பண்பன்ருே அவளை ஒட்டும்!
விண்ணுக்குப் போனுலும் நற்பெண் என்ருல்
வேற்றவரின் மார்பினிலே தனைச்சாய்ப் பாளோ?
கண்மூடித் தனமாக ஆடு வாளோ?
கட்டிமிக முத்தந்தான் நல்கு வாளோ?

297 இனியிவளை மனைவிஎனச் சொல்வ தற்கும்
எனக்குரிமை எதுவுமில்லை; இன்றி ருந்து
வனிதையவள் உடலுக்கும் உள்ளத் திற்கும்
வேற்றவன்நான்; வேறென்ன? எங்க ளுக்குள்
சனிபுகுந்து ஏதேதோ அட்ட காசம்
செய்கிறது; அதைத்தடுக்க எம்மால் ஆமோ?
கனியவளைப் பிரிகின்ற காலம் என்றன்
கடுந்துன்பம் ஒழிதற்கு வேளை போலும்!

298 தனக்குள்ளே தாளுக எடுத்துக் கொண்ட
தக்கதொரு முடிவென்று தன்னைத் தானே
மனத்திற்குள் புகழ்ந்திட்டான்; வேறென் செய்வான்?
மாற்ருனின் தோள்சாயும் மனைவி தன்னைச்
சினத்தாலே கொலைபுரிந்தால் அதுவும் குற்றம்!
சீக்கிரமே மணவிலக்குப் பெற்றுக் கொண்டு
கனவுலகாம் இந்நாட்டை விட்டு நீங்கிக்
கற்புடைய தமிழ்நாடு செல்ல வேண்டும்.

299 என்றெண்ணிப் படுத்திருந்த அவன்முன் வந்து
ஏதொன்றும் எண்ணுமல் சொல்தல் போல
'இன்பம்'வந் தொருவார்த்தை மெல்லச் சொன்ளுள்
எனைவிடுவி உன்னேடு வாழ்வ தற்கு
என்றனுளம் விரும்பவில்லை; ஏனென் ணுமல்
ஏற்றிடுக என்ருளே மனந்து ணிந்து!
தென்னவனும் முகிலனது மீசை கூட
தெறித்துவிடு வதுபோலத் துடித்த டங்கும்!

இரண்டாம் பகுதி முற்றிற்று.

40. மண விலக்கு

300 தேனென்றேன் மானென்றேன் அதுஓர் காலம்
தீயவளாய் ஆகினளே இன்று இன்பம்
வீண்நினைவு இனிஎதற்கு? இரண்டு பேரும்
விரும்பவில்லை மணவிலக்குச் செய்தால் போதும்!
தான்விரும்பி இருந்தாலும் அவளாய் வந்து
துணிவுடனே என்னிடத்தில் என்றன் முன்பு
ஏன்வந்து கேட்டனளோ? சே!சே! என்று
இளமுகிலன் தனக்குள்ளே முனகிக் கொண்டான்

301 இதற்கென்று வழக்கெதற்கு? இருவர் உள்ளம்
இணைந்திடற்கு விரும்பவில்லை; இதற்குப் போய்ஏன்
உதவாத சட்டத்தைப் புரட்டு கின்ற
ஓர்வழக்கம்! தேவையில்லை; என்று தாங்கள்
முதலினிலே சேர்ந்ததுபோல் முடிவி லேயும்
மனத்தளவில் தமக்குள்ளே ஒப்புக் கொண்டு
இதமுடனே எல்லாமும் முடித்துக் கொண்டார்
இருவரும்வெவ் வேறாகப் பிரிந்து போனார்

302 இல்லையொரு பிள்ளையென ஏங்கி நாளும்
எண்ணற்ற மருந்துகளை உட்கொள் வார்கள்
தொல்லைதனைக் கருதாமல் நோன்பி ருப்பர்!
தொலைதூரம் கோவிலுக்கும் போவர்; மேலும்
எல்லையில்லாக் கொடையளிப்பர்; பிள்ளை வேண்டி
எத்துயரும் பொறுத்திருப்பர்; அவர்போல் இன்றி
இல்லைஇல்லை என்றுமனம் தவிக்கு முன்னர்
எழிற்பையன் எங்களுக்குப் பிறந்து விட்டான்!

303 தொல்லைகளைப் பூப்பந்தாய் எண்ணிக் கொண்டு
தூக்கத்தைத் தானிழந்து மருந்துட் கொண்டு
எல்லையில்லாத் துன்பத்தை ஏற்றுப் பிள்ளை
இவ்வுலகில் பெற்றெடுத்தாள்; உயிரின் மேலாய்
மல்லிகையாய்த் தூக்கிவைத்து முத்தம் தந்து
மடிமீது இருத்திவைத்து நிலவு காட்டிச்
செல்லமொடு வளர்த்துவந்த இன்பம் இன்று
சிறுதொடர்பும் இல்லாதாள் போல்இ ருந்தாள்!

304 பெற்றமனம் பித்தென்பர்; பொய்தான் போலும்!
பெற்றவளோ பிள்ளையினை விட்டு விட்டு
உற்றவனாய் விக்டரையே எண்ணிக் கொண்டு
உலகைமறந் துவகையொடு கைப்பி டித்து
முற்றுமெனை மறந்தவளாய் முன்போ கின்றாள்
முள்கின்ற துயருக்கு அணையா உண்டு?
கற்றவனா? மருத்துவனா? முகிலன் சின்னக்
கைக்குழந்தை போல்அழுதான்; தடுப்பார் இல்லை!

305 நடப்பதெல்லாம் நடக்கட்டும்; நடப்ப தற்கு
நடைவிரிப்போம்; தடைசெய்ய முடியா தன்றோ?
வடக்கயிறும் அறுந்துவிடும்; இன்ப வாழ்வும்
வடக்கயிறாய் அறுவதுண்டு; அதனால் என்ன?
மடமனமே நிலையான துலகில் உண்டா?
மங்கையுனைப் பிரிந்திட்டால் வாழ்வா போகும்?
இடத்தோளில் குழந்தையினைத் தூக்கி வைத்தான்
எண்ணமெனும் சிறையினிலே தனைஅ டைத்தான்

306 விக்டரொடு கைகோத்து அவள்போ கின்றாள்
வெடிக்கின்ற நெஞ்சோடு முகிலன் நின்றான்
சிக்கலிது தெரியாத குழந்தை மெல்லச்
சிரிக்கின்ற அழகதனை என்ன சொல்ல?
மிக்கதுயர் மண்டியுள்ள பொழுதில் கூட
மென்சிரிப்பைக் கண்டுமனம் மகிழ்ந்தான்; நெஞ்சத்
துக்கத்தை உடன்மறந்தான்; பிஞ்சு நெஞ்சைத்
தூக்கிவைத்துக் கொஞ்சலுற்றான் மெய்ம றந்தான்!

41. ஊருக்குப் புறப்படல்

307 சிறகில்லாப் பறவையென மனிதர் தம்மைச்
சிலர்சொல்வார்; அதுமுழுதும் பிழையே ஆகும்
பறவையொடு நாடுவிட்டு மற்றோர் நாடு
பறந்துசெல பலநாட்கள் ஆகக் கூடும்!
மறநெஞ்சம் படைத்திட்ட மனிதர் என்றால்
மண்ணொன்றும் விண்ணொன்றும் கருதா வாறு
திறத்தோடு கருவிகளின் துணையைக் கொண்டு
திறந்தஇமை மூடுமுனர் உலகம் யாவும்

308 சுற்றியின்று வந்திடுவர்; இவைகள் யாவும்
செறிவான அறிவென்னும் கருவி கொண்டு
கற்றபலர் தந்தபெரும் செல்வம் அன்ரோ?
கவலைமன முகிலனொடு மகனும் வானில்
விண்கப்பல் தனிலேறிப் பறந்தார் நல்ல
வான்பரப்பு தனைக்கண்டு கைகள் தட்டிக்
கண்விரித்துச் சிரித்திட்டான் குழந்தை அந்தக்
காட்சியினைக் கண்டபின்னும் துயரம் தோய

309 உட்கார்ந்த படியிருந்த முகிலன் நெஞ்சம்
உலகத்தில் இதுவரையில் தனக்கு நேர்ந்த
பட்டறிவு தனைஎண்ணி வாடும்; இந்தப்
பாரினிலே யாருக்கும் என்னைப் போல
மட்டில்லாத் துயர்வாழ்வு வேண்டாம்; நானோர்
மனிதனென எண்ணுதற்கும் உள்ளம் கூசும்
திட்டமுடன் ஒன்றுரைப்பேன் சூழல் ஒன்ரால்
தூயவனும் தீயவனாய் மாறு கின்ரான்!

310 தன்னைமிகத் தாழ்த்திமனச் சோர்வு கொண்டு
தடுமாற்ற சிந்தையொடு இருந்த போது
சென்னைநகர் இதுவென்று ஒலிபெ ருக்கி
தெளிவான மொழிபரப்ப வானை விட்டு
அன்னைநாட்டின் அருமண்ணில் விமானம் நிற்கும்!
அசைந்தபடி விரைவுடனே பயணி யர்கள்
எண்ணாத்தைச் சுமந்தபடி இறங்க லானர்
எதிர்பார்த்துச் சிலர்சிலரை வரவேற் றிட்டார்!

311 புன்முறுவல் மகிழ்ச்சியொலி இன்பப் பேச்சு
பொருள்பொதிந்த பார்வைகள் இவைக ளூடே
கண்சிமிட்டல் கைகுலுக்கல் எலாம்ந டக்கும்!
கருத்தெதுவும் செலுத்தாமல் பைய னோடு
முன்நடந்தான் சோதனைகள் முடிந்த பின்னர்
முகிலனொரு மகிழ்வுந்து ஓட்டு நர்க்கு
தன்தேவை உணர்த்திக்கை அசைத்தான்; ஏறி
தங்கமனச் செல்வியில்லம் போக லானுள்.

312 கண்டோடி வந்துநின்ற செல்வி பேசும்
காரியமே இல்லாதாள் போல்இ ருந்தாள்
திண்டாடிக் கொண்டிருந்த முகிலன் தானும்
திருவாயைத் திறந்துமொழி பேச வில்லை
வண்டுநிற விழிநான்கும் காணும்; கண்டு
வடிக்கின்ற கண்ணீரும் உதிர லாகும்
நண்டூர்ந்து போவதுபோல் பொழுது போகும்
நடந்தபடி முன்னறையில் போய்அ மர்ந்தான்!

313 பணியாட்கள் காருக்குள் இருந்த வற்றைப்
பத்திரமாய் வீட்டுக்குள் எடுத்து வைத்தார்
பணிவாகக் காரோட்டி கைகு வித்துப்
பணம்பெற்று மகிழ்வோடு விடைபெற் றிட்டான்!
துணிவின்றிப் பேசாமல் அவன்இ ருக்க
தோகையவள் அமைதியொடு இருக்க லானாள்;
மணிஆறு என்பதனை அறிவித் தற்கு
மகிழ்வூட்டும் இசைகூட்டி ஒலிகொ டுக்கும்!

42. அமைதியில் முளைத்த கேள்வி

314 எழில்மிகு சின்னப் பையன்
எவனெனும் ஐயம் தோன்றும்
பழிசொல நெஞ்சம் கூசும்
பையனோ முகிலன் வார்ப்பு!
இளையவள் மனம்து டிக்கும்
ஏனிவர் பேசா துள்ளார்?
உளைந்திடும் தையல் உள்ளம்
ஊமையாய் இருப்ப தெண்ணி

315 எத்தனை நேரம் இன்னும்
எதுவுமே பேசி டாமல்
உத்தம மௌனி யாக
உம்மென இருப்பா ரிங்கு?
எத்தனை நாட்க ளாக
இவரையான் எதிர்பார்த் துள்ளேன்;
பித்தன்போல் இருப்பதென்ன?
பேதையான் அறிகி லேனே!

316 உடல்நலம் இலையா ? ஏதும்
உளத்துயர் தாமா ? இல்லை
மடமகள் என்னி டத்தில்
மனத்தாங்கல் கொண்டுள் ளீரா ?
இடப்புறம் இருக்கும் பையன்
யாரெனச் சொல்ல லாமா ?
விடாப்பிடி யாக நீங்கள்
ஊமையாய் இருத்தல் வேண்டாம் !

317 எனக்கெலாம் தெரிய வேண்டும்
இனியும்நான் பொறுக்க மாட்டேன்
மனத்துள செய்தி எல்லாம்
மடமட எனச்சொல் கென்றாள் !
தனதுகண் ணீர்து டைத்தான்
தையலாள் அறியா வண்ணம்
மனநிலை விவரித் தற்கு
முகிலனுக் கியல வில்லை

318 தேவையைச் சொல்லி விட்டாய்
தெளிவுடன் நிதான மாக
யாவையும் சொல்வேன் கொஞ்சம்
எனக்கெனப் பொறுப்பா யாக
ஆவலாய் இருக்கின் றாய்நீ
அனைத்தையும் அறிந்து கொள்வாய்
ஏவலாள் சுவைசேர் உண்டி
எடுத்துவைத் திட்டுப் போவாள் !

319 முடுமந் திரமாய் உள்ள
பாடுகள் படுத்தி வைக்க
பாவையின் உடலும் ஏனோ
ஆடிடும் ; நடுங்கும் மெல்ல !
ஆசைகொள் மனமோ வாடும் ;
சூடிய பூவும் வாடித்
தரையினில் உதிர்ந்து வீழும் !

320 பின்னலை முறுக்கி விட்டுப்
பின்னுவாள் ; பின்னர் அந்தப்
பின்னலை முன்னும் பின்னும்
பிடித்துவீ சிடுவாள் ; ஓய்வாள் !
இன்னதை அறிந்தி டாமல்
இனியவன் தலைகு னிந்து
என்னவோ எண்ண லுற்றான்
இப்படிப் பொழுது நீளும் !

321 தங்கப்பன் எங்கி ருந்தோ
தணிந்தகல் நடைந டந்து
அங்குவந் திட்டார் ; முன்னால்
அமர்ந்துள முகிலன் கண்டான்
பொங்கிய அழுகை தன்னைப்
பொசுக்கென அடக்கிக் கொண்டு
பங்கமில் வணக்கம் சொன்னான்
பார்த்தவர் அணைத்துக் கொண்டார்!

43. குடும்பமெனும் கோவில்

322 இலண்டனிலே இன்பத்தை மணம்பு ரிந்து
இனியதொரு பையனுக்குத் தந்தை யாகி
கண்டஇளம் மங்கையரை மருவ எண்ணும்
காமுகனும் விக்டரெனும் பாவி யோடு
மண்டுபுகழ் இன்பமவள் கூடிச் சேர்ந்து
மனத்தினிலே சினத்தியை வளர்த்தாள் நெஞ்சில்
விண்டுசொல முடியாத வருத்தம் தோன்ற
வாழ்வுதனில் செய்தபிழை எண்ணி நொந்து

323 முன்வாழ்ந்த வாழ்வெல்லாம் மறந்து விட்டு
முன்பிணைந்த முறைப்படியே இருவர் தாமும்
துன்பத்திற் கொருமுடிவைத் தேர்ந்தெ டுத்து
தெளிவான சிந்தையொடு மணவி லக்கம்
'இன்ப'மொடு செய்துகொண்ட யாவும் சொன்னான்
இடையினிலே குறுக்கிடாமல் கவலை தோய
அன்பரசர் தங்கப்பன் கேட்டி ருந்தார்
அவனின்னும் தொடர்ந்துபல சொல்ல லானான்.

324 முடிவாகத் தான்செய்த தவறு தன்னை
முழுமையுடன் தானுக ஏற்றுக் கொண்டான்
கடிவதற்கும் எனையுமிழ்ந்து தூற்று தற்கும்
கட்டாயம் உங்கட்கு உரிமை உண்டு
மடியுமுன்னர் உங்களைநான் கண்டு பேசி
மன்னிப்புக் கோருதற்கே இங்கு வந்தேன்
வடிகின்ற கண்ணீரும் தரையில் சிந்தும்
விவரமெல்லாம் தெரிந்தபின்பு அருந்தங் கப்பன்

325 வாய்திறந்து பேசலுற்ருர் சுருக்க மாக
வாழ்வுதனில் சூழ்நிலையால் மனிதன் கெட்டு
காய்சுவைப்பான் கனிஎறிவான் இதுஇ யற்கை!
காலத்தில் திருந்திவிடின் குற்றம் இல்லை
தேய்ந்திடினும் சந்தனத்தின் மணங்குன் ருது
தவறுகளை அவரவரே கைவிட் டிட்டால்
ஒய்ந்திடுமே உலகத்தின் துன்ப மெல்லாம்
உணர்ந்துபிழை நீக்கிவிடின் மன்னிப் புண்டு

326 இன்னுமுனை செல்விமனம் விரும்பு மாகுல்
எனக்கொன்றும் தடையில்லை மணஞ்செய்
விப்பேன்
முன்னர்போல் பழகியுங்கள் வாழ்வு தன்னை
முறைப்படுத்திக் கொள்வதெனில் அமைத்துக்
கொள்க
என்கருத்தைச் சொல்லிவிட்டேன் செல்வி
உள்ளம்
எற்குமென நம்புகிறேன்; கேட்டுக் கொள்வோம்
இன்னவற்றை எல்லாமும் கேட்ட வண்ணம்
இதயத்தில் துயர்மண்ட இருந்தாள் செல்வி

327 என்னை இனி செல்வியொரு துளியும் எண்ணுள்
ஏற்பதற்கு மனம்சிறிதும் ஒப்ப மாட்டாள்
தன்னைமுன்பு காதலித்துப் பின்பு வேறு
தொலைநாட்டில் வேருெருத்தி தனைம ணந்து
இன்றெதுவோ காரணத்தால் மணவி லக்கம்
என்றுசொலி மணமுறித்து இங்கு வந்து
முன்பிருந்த காதலியை மணஞ்செய்! என்ருல்
மூளாதா பெருங்கோபம் இயற்கை தானே!

328 தூற்றுதற்கும் நியாயமுண்டு அதனால் என்னைத்
தூற்றிடுவீர்; இன்றும்நான் இங்கி ருத்தல்
ஏற்றதல்ல என்பதனால் எனைவி டுங்கள்
யான்சென்று வருகின்றேன் என்று சொல்லி
போற்றிமிகப் பேசிவிட்டுப் பையன் தன்னைப்
'புறப்படுவோம் வா'என்றான் சிறுவன் வந்தான்
மாற்றமில்லாப் பெரியவரே வணக்கம் நீங்கள்
மனிதரிலே மிகவுயர்ந்த மனிதர் என்றான்

329 இவ்வாறு முகிலன்தங் கப்ப னோடு
எடுத்தோதிக் கொண்டிருந்த வேளை செல்வி
செவ்வாழைக் காலூன்றி நடந்து வந்து
செந்தமிழை நறுந்தேனை வெறுப்பார் உண்டோ?
ஒவ்வாத செய்கைகளில் ஈடு பட்டு
ஒருபையன் தனக்கின்று தந்தை யாகி
எவ்வாறோ எனைத்தேடி வந்தீர்; நும்மை
ஏற்பதற்குத் தடைஎனக்குச் சிறிதும் இல்லை

330 என்றபடி அங்கிருந்த தந்தை யாரை
ஏறிட்டுப் பார்த்தபின் தலைகு னிந்தாள்
முன்றிலிலே குழந்தையினை நிறுத்தி வைத்து
முறுவலொடு கதைஏதுவோ சொன்னாள்; பின்னர்
இன்னுமென்ன துயர்சுமந்து இருக்கின் றீர்கள்?
எல்லாமும் மறந்திடுங்கள்; புதிய வாழ்வை
இன்றுமுதல் தொடங்கிடுங்கள் என்று செல்வி
இனியஉரை முகிலனுக்குச் சொல்ல லானாள்

331 உலகமெலாம் அன்பால்தான் இயங்கும் என்ற
உண்மையினை எனக்கின்று உரைத்திட் டீர்கள்
கலகமெலாம் நீங்குதற்கு அன்பே நல்ல
கருவியென இங்கென்னைப் புரிய வைத்தீர்
நிலவுகின்ற என்துயரைக் கூட்டி அன்பால்
நன்றாகத் தண்டித்தீர்; உம்முன் னாலே
உலவுதற்கும் கால் கூசும் என்று சொல்லி
உயர்குடும்பக் கோயிலதைப் புகழ்ந்து ரைத்தான்

44. மன்றலும் மகிழ்ச்சியும்

332 உள்ளத்தால் எப்போதோ இணைந்து விட்ட
உயர்காளை முகிலனுக்கும் செல்விக் கும்நல்
வெள்ளம்போல் பலர்வந்து வாழ்த்துச் சொல்லி
வதுவையினைச் சிறப்புடனே நடத்தி வைத்தார்
கள்ளமில்லாப் பேச்சாலே வந்தோர் தம்மைக்
கனிவோடு தங்கப்பன் வரவு சொல்லி
விள்ளமுடி யாதமன மகிழ்ச்சி யாலே
வெளியேயும் உள்ளேயும் நடக்க லானார்!

333 எப்போதோ நடந்திருக்க வேண்டும் இந்த
இசைவான திருமணமும் பெரியோர் சொன்ன
அப்போதே நடந்திருந்தால் என்முன் வாழ்வில்
அயல்நாட்டுப் பெண்தொடர்பு நேர்ந்தி ராதே!
ஒப்பாக ஒருத்தியிவட் கில்லை என்னை
ஒன்றுமுறை யாமல்மணம் செய்வ தற்கும்
ஒப்பினளே என்மனத்தில் புகுந்த வண்ணம்
உவகையிலே முகிலனவன் திளைத்தி ருந்தான்.

45. பெறாத பிள்ளை

334 எழிலாக இருந்ததனால் எழிலன் என்றே
எல்லாரும் அழைப்பதற்கு ஏற்ற வாறு
விழியாலே மொழிபேசும் பைய னுக்கு
விருப்பமுடன் பெயரிட்டு மகிழ்ந்தாள் செல்வி
அழகான பேரென்று முகிலன் சொல்ல
ஆமென்று தங்கப்பன் வழிமொ ழிந்தார்!
இளகுமனச் செல்வியவள் தான்பெ றாதே
எழிலனைத்தன் மகவாக எண்ண லுற்றாள்.

335 விளையாட்டுச் சாமான்கள் பரப்பி வைத்து
விசைகொடுத்துத் தொடர்வண்டி ஓட்டி விட்டு
இளையமனம் மகிழ்ந்திடவே ஊதல் ஊதி
எப்போதும் அன்புடனே சிரித்துப் பேசி,
துளைபடைத்து நாதசுவர இசைபெ ருக்கித்
துள்ளிடுவாள் மறைந்திடுவாள் தேட வைப்பாள்!
முளைத்துவளர் இளந்தளிரும் சிரிப்பு திர்க்கும்
முழுநிலவு முகத்தாளும் மகிழ்வு கொள்வாள்.

336 இதுபோன்றே எந்நாளும் இவள்ந டந்தால்
எனக்கெதுவும் கவலையில்லை என்ப தாகப்
புதுவாழ்வு தனில்புகுந்த முகிலன் எண்ண,
பலவிதமாய் விளையாட்டுப் பொருட்கள் தம்மை
வீடனைத்தும் நிறைத்துவிட்டாள் செல்வி; இந்த
விளையாட்டில் மனமகிழ்ந்து அவன்இ ருந்தான்
விடெங்கும் வலம்வந்தான் எழிலன்; இன்ப
வாரிதியில் கைகோத்துக் குளிக்க லானார்!

46. சூழ்நிலை

337 திருமணத்தைக் கண்டபலர் ஏதும் பேசத்
தோன்றாமல் நின்றார்கள்; சிலபேர் மட்டும்
திருடர்போல் தனியாக மறைவில் நின்று
தேவையில்லா மொழிபேசித் திரிந்திட் டார்கள்
ஒருத்திக்கு மாலையிட்டு அவளை நீக்கி
ஒருத்தியென செல்வியையும் மணஞ்செய் கின்றான்
வருத்தந்தான்! செல்விக்கு வாழ்வு நல்க
வேறொருவர் கிடைக்கலையோ? என்ப தாக

338 மறுமணஞ்செய் முகிலனையும் தூற்றிக் கொண்டு
மங்கையிளம் செல்விக்குப் பரிந்து பேசி
முறுமுறுத்தார் தனித்தனியாய்; இருந்தும் செல்வி
முகிலனொடு சேர்ந்தபடி அதைவெ றுத்தான்
சுறுசுறுப்பாய்ச் செயல்முடிக்கும் தங்கப் பன்தன்
செவியினிலும் செய்திபல வந்து கேட்கும்!
வெறுத்தொதுக்கி நடைமுறைக்கு ஏற்ற வண்ணம்
வாழ்வுதனை அமைப்பதற்குத் துணைபு ரிந்தார்!

47. பிணி நீக்கும் பணி

339 தனியாக மருத்துவத்தைச் செய்ய எண்ணித்
தணியாத விருப்போடு தங்கப் பன்பேர்
இனிதாகச் சூட்டியொரு மனைதி றந்து
இயன்றவரை முயன்றுபிணி நீக்கி நாளும்
கனிவோடு தொண்டாற்றி ஏழை யர்க்கும்
காசெதுவும் வாங்காமல் பணிபு ரிந்தான்
நனிமகிழ்வு கொண்டபலர் நன்றி யோடு
நாவார வாழ்த்துரைத்தார் அவன்க ளித்தான்.

340 அன்பரசு செய்திந்த நாட்டில் உள்ள
அனைவருக்கும் நல்வாழ்வு நல்கி விட்டால்
இன்பரசு ஆட்சிசெயும்; வளங்கள் கூடும்!
இருக்கின்ற பசிப்பிணியும் அழிந்து மாயும்
பண்பரசு நிலைத்தோங்கும்; நோய்கள் நீங்கின்
பலநலமும் பெருகிவிடும் உயர்வு தோன்றும்
என்பதனை எல்லாமும் நெஞ்சில் தேக்கி
இரவுபகல் பாராமல் பணிகள் செய்தான்

48. இன்பத்தின் கடிதம்

341 என்னுளங் கவர்ந்த அன்ப
எழிலுறு முகில! என்றன்
பொன்னுடல் அணைத்தின் புற்ற
பொற்றமிழ்த் தனய! தூய!
அண்ணலே அடிக்க ரும்பே
அடக்கமே உருவெ டுத்த
கண்ணதால் கண்ணி யத்தால்
காவியம் பலப டைத்தோய்!

342 உன்னுளம் தனைஅ லைத்து
உளத்துயர் மிகக்கொ டுத்துப்
பெண்ணெனும் பிறப்பெ டுத்த
பேதையான் 'இன்பம்' என்றே
தென்னவர் உம்மால் என்றும்
தேனென அழைக்கப் பட்டேன்
முன்னரும் இன்றுங் கூட
மனத்துயர் பெருக்கி விட்டேன்.

343 இன்றுமக் கிந்த அஞ்சல்
எழுதிடக் கைது டிக்கும்
என்றுமே உன்றன் வாழ்வில்
எண்ணிட முடியாத் துன்பம்
நன்றிலை என்ற போதும்
நல்கினேன் அறிந்தி டாமல்
அன்பொடு பொறுப்பி ராக
அஞ்சலைப் படித்த பின்னர்!

344 இனியரே நலமாய் உள்ளேன்
இதயமே நலமா நீங்கள்?
பனிமலர் சிரிப்பு உதிர்க்கும்
பையனும் நலமா? உங்கள்
கனிமொழி செல்வி என்றன்
களங்கமில் அக்காள் உள்ளம்
இனித்ததா? மகிழ்ச்சி வானில்
இருவரும் பறக்கின் றீரா?

345 செல்வியின் கதைஎவ் வாறு
தெரியுமென் றெண்ணக் கூடும்!
எல்லாமும் அறிந்தே உள்ளேன்
இயம்புவேன் விவர மாக
எல்லையில் ஆசை யோடு
இனியவள் வரைந்த அஞ்சல்
சொல்லிய உண்மை யாவும்
தற்செய லாக ஓர்நாள்

346 வெளியினில் நீங்கள் போன
வேளையில் வந்த தாலே
எளியவள் என்றன் நெஞ்சில்
எடுத்துடன் படித்துப் பார்க்க
முளைத்தது ஆசை அந்த
முடங்கலைப் படித்தேன்; பின்னர்
உளைந்தது உள்ளம் முன்போல்
ஒட்டியே உமக்குத் தந்தேன்

347 பொய்யிலை எல்லாம் உண்மை
பொன்மகள் இல்வாழ் வென்றால்
நைவுற வேண்டாம் என்ற
நல்லுளம் என்னைத் தூண்டும்
வைதிடும் வண்ணம் என்றன்
வாழ்வினை அமைத்தேன் என்னைப்
பையவே மாற்றிக் கொண்டேன்
பண்பிலாள் போல்ந டித்தேன்

(வேறு)

348 எவையுமே தெரியாதாள் போல நானும்
இருந்தபடி கடிதத்தை முன்போல் வைத்தேன்
சுவையான மொழிபேசி என்னை நீங்கள்
சிரிக்கவைக்க முயன்றீர்கள்; தோற்றிட் டீர்கள்!
அஞ்சலதைத் தந்துவிட்டு மனம்வெ தும்பி
அயர்வுற்றுக் கட்டிலிலே போய்ப்ப டுத்தேன்
கெஞ்சியெனை மருந்துண்ணச் சொன்ன போது
கட்டாய மாய்அதனை மறுத்து விட்டேன்.

349 விக்டரோடு வேண்டாத பழக்கங் கொண்டு
வேற்றவள்போல் நடித்திட்டேன்; நம்பிக் கொண்டு
இக்கடிதம் தனிலிதனை எழுதல் எல்லாம்
எனைமன்னித் தேற்றருள வேண்டும் என்று
வேண்டுவதற் கிலையரசே! உண்மை யாவும்
உரைத்திடுவேன் நீரறிய வேண்டும் அன்றோ?
தூண்டுமுளம் அமைதிகொள வேண்டும் என்றே
துடிக்கின்றேன் படித்திடுக அன்பு கொண்டு.

350 எனைவிக்டர் விரும்பியது யாவும் உண்மை
எனில்நானோ எள்ளளவும் அவன்க ருத்துத்
தனைவிரும்ப விலையிதுவும் உண்மை; பின்ஏன்
தரமற்ற முறையினிலே அவனோ டேபோய்
கணவனுமை மதிக்காமல் உம்முன் னாலே
கட்டியுடல் பிடித்துநடம் ஆடி னேன்நான்?
மனையரசி மாற்றானோ டாடல் கண்டும்
மனம்வெறுக்கும் என்பதனை உணர்ந்தே செய்தேன்!

351 இன்னொருத்தி உள்ளத்தை உங்கள் நாட்டில்
ஏற்கனவே கவர்ந்துள்ளீர் என்ற செய்தி
முன்வந்த செல்விமடல் தனிலே கண்டு
மூர்ச்சையுற்றேன்; பின்தெளிந்தேன்; அவளின் வாழ்வு
என்னாலே கெடுவதுவோ? ஆசைக் கோட்டை
எத்தனைதான் கட்டினளோ, ஐயோ, பாவம்!
உன்னால்தான் அவள்கனவு நனவாய் ஆகும்.
ஊசிபல கொண்டென்றன் தலையில் யாரோ

352 குத்தியது போலுணர்ந்தேன் எனினும் செல்வி
குமரிக்கே உடமைநீங்கள் என்றே உள்ளம்
சுத்தியலால் ஓயாமல் அடித்தல் போல
சொல்லிற்று அதனாலே உமைஇ முக்க
அத்துமீறி நடப்பதுபோல் நடித்தேன் நீங்கள்
அத்தனையும் உண்மையென நம்பிக் கொண்டீர்!
சொத்துசுகம் உயிரெல்லாம் உமக்கு முன்னால்
சுள்ளிக்கு நிகராகும்; என்ற போதும்

353 செல்விக்கே உரியஉமை எனக்கென் றாக்கி
செல்வியினை வஞ்சித்தல் பிழையே அன்றோ?
கல்விக்கே கடல்கடந்து இங்கு வந்தீர்
காதலித்துக் கன்னியெனைக் கைப்பி டித்தீர்!
நல்வினையோ, தீவினையோ நமக்கோர் பையன்
நச்சரவு மிகுஉலகில் பிறந்து விட்டான்
எல்லாமும் கனவென்று நினைத்துக் கொள்வோம்
எழிற்செல்வி யோடேநீர் நீடு வாழ்க!

354 இளம்வழுதி நம்நண்பர் முன்போர் நாளில்
இங்குவந்து எனைக்கண்டு பேசிச் சென்றார்
உளங்கொண்ட செல்வியினை நீங்கள் அங்கு
உயிர்த்துணையாய்க் கொண்டதனைப் பேச்சின் ஊடே
விளக்கமுறத் தெரிவித்தார்; மகிழ்வே கொண்டேன்
வருந்துதற்கு சிறிதுமிடம் இல்லை; நீங்கள்
வளவாழ்வு பெற்றிடுக ஒன்றாய் என்றும்
வையத்தில் வாழ்ந்திடுக கவலை யின்றி!

355 இப்பிறவி தனிலெனக்குக் கணவன் என்று
இனியாரும் வரமாட்டார்; வாழ்வெல் லாமும்
எப்போதும் என்நினைவில் இருப்ப துங்கள்
எழில்முகமே! இன்னொருவர் தம்மை எண்ணேன்
தப்பேதும் செய்திருந்தால் மன்னி யுங்கள்
தவறாமல் செல்வியொடு பையன் தன்னை
ஒப்பமொடு சேர்த்துவைத்து அழகு மிக்க
உயிருள்ள ஒளிப்படமொன் றனுப்பி வைப்பீர்!

356 இனியெனக்கு வரைகின்ற அஞ்சல் தன்னில்
எனையழைக்கும் வரிஎதுவும் எழுத வேண்டாம்
இனிதாக இங்குள்ளேன்; என்னைப் பற்றி
எண்ணியெதும் வருந்தாதீர்; துயர்கொள் ளாதீர்
மனிதரிலே மாணிக்கம் நீங்க ளேஎன்
மனக்கோயில் தனிலிருப்பீர்! உயிரே! வேறு
தனிச்செய்தி உமக்கெழுத எதுவும் இல்லை
தனித்தமிழில் தருகின்றேன்; வணக்கம் நன்றி;

357 இதுவரையில் ஒருமுறையும் பார்த்தி ராத
இளநங்கை செல்விக்கு 'இன்பம்' என்னும்
புதுத்தங்கை எழுதுமடல்! என்னைப் பற்றிப்
பொதுவாக எல்லாமும் தெரிந்தி ருப்பாய்
மதுமலரில் ஈவிழுந்து கிடத்தல் போல
மங்கையென்றன் மயக்கத்தில் முகிலன் அத்தான்
முதுஅறிவு பெற்றிருந்தும் வீழ்ந்தா ரென்றால்
முழுக்குற்ற மும்என்றன் பேரி லேதான்!

358 என்னையுன்றன் தங்கையென ஏற்றுக் கொண்டு
யான்புரிந்த பிழைபொறுத்து அவரோ டேநீ
என்றென்றும் இன்புற்று நலன்கள் எய்தி
இனிதாக இணைந்திருத்தல் வேண்டும்- மற்றும்
உன்னையொன்று வேண்டிடுவேன்; அருள்கொண்
டென்றன்
உரைகேட்டல் வேண்டும்நான் பெற்ற பிள்ளை
அன்னையெனைப் பிரிந்தின்று உன்னி டத்தில்
அங்குள்ளான் நீஅவனைப் பெருவிட் டாலும்

359 வேற்றவளின் பிள்ளையென எண்ணி டாமல்
உன்வயிற்றில் பிறந்ததொரு பிள்ளை யாகப்
போற்றிடவே வேண்டுமென உன்னை என்றன்
பூங்கைகள் தனைக்குவித்து வேண்டு கின்றேன்
தூற்றுவதற் கிடமின்றி வளர்ப்பாய் என்ற
திடமான நம்பிக்கை என்னுள் ளத்தில்
ஊற்றெடுக்க வேஇந்த அஞ்சல் தன்னை
உனக்கெழுத முன்வந்தேன் வேறொன் றில்லை!

360 உன்வாழ்வில் என்றேனும் புகுந்து தொல்லை
உருவாகத் துணையிருப்பேன் என்றெண் ணாதே!
பொன்வாழ்வாய் வாழ்ந்திடுக; நாளும் நல்லார்
போற்றுகின்ற நல்வாழ்வு வாழ்க நீடு!
என்வாழ்வு பற்றியெதும் எண்ணல் வேண்டாம்
ஏழையர்க்கு நான்கற்ற கல்வி கொண்டு
துன்புறுத்தும் பிணிநீக்கத் துணை இருப்பேன்
தூயவனே! நல்வணக்கம்; வருவேன், நன்றி!

49. கடிதத்தின் விளைவு

361 இப்படியா சேதிஎன அறிந்து செல்வி
இளமுகிலன் தன்னோடு வியந்து நின்றாள்
"எப்படியோ என்வாழ்வில் பல்வேறான
இன்னலுறு நாடகங்கள் நடந்தேறிற்று
அப்படியா உன்வாழ்வின் நலனுக் கென்று
அவளென்னை இழந்திட்டாள்? அடடா, ஐயோ!
தப்பற்ற அவளைப்போய் ஐயுற் றேனே!"
தடுமாறிப் போயிருந்தான்; வேறென் செய்வான்?

362 எழிலனோடு செல்விமன மகிழ்ச்சி யாக
இளநகையைப் புரிந்தபடி இருக்கும் காட்சி
அழியாத ஓவியமாய் நிழற்பட த்தில்
அமைந்திருக்க அதைக்கண்டு முகிலன் ஏதும்
மொழியமுடி யாதபடி வாய டைத்து
*மூங்கையென நின்றிருந்தான் உணர்ச்சி யாலே
விழியினின்றும் நீர்கசிய பழமை என்னும்
†வாவியிலே வீழ்ந்திட்டான் தடுப்பார் இன்றி!

363 தங்கையிட்ட கட்டளையைத் தலைமேற் கொண்டு
துயரொருபால் மகிழ்வொருபால் உளத்தில் தோன்ற
செங்கையால் உறையினிலே ஒளிப்ப டத்தைச்
சீராக வைத்துவிட்டு உருக்கத் தோடு
மங்கைசெல்வி எழுதிக்கை ஓய்ந்தாள்; சற்று
மனந்தளர்ந்த போதினிலே அங்கே வந்து
'திங்குதிங்கு' எனக்குதித்து எழிலன் ஆடும்
திருநடனம் உளங்கவரச் சிரித்தாள் மெல்ல!

---

*மூங்கை = ஊமை
†வாவி = பொய்கை

367 *ககனத்தை வழியாக்கிச் சீறிக் கொண்டு
காற்றைவிட வெகுவிரைவாய் அஞ்சல் யாவும்
அகத்தினிலே கொண்டபடி விமானம் செல்லும்
அப்படியும் போதாது வேகம் என்று
சுகம்விரும்பும் மனிதமனம் எண்ணும்; இன்னும்
சுணங்காமல் செல்தற்கு வழிகள் உண்டா?
பகலிரவாய் அறிஞர்பலர் ஆராய் கின்றார்!
பலகல்கள் கடந்துமடல் இலண்டன் சேரும்.

50. கொலை! கொலை!!

368 அஞ்சலெனும் குரல்கேட்டுச் சிறுமி போல
அதிவிரைவாய் ஓடிவந்து கையை நீட்டித்
துஞ்சுகின்ற குழந்தையினைக் காண்பார் மெல்ல
தொட்டிலினை நீக்கிப்பின் பார்ப்ப தேபோல்
மஞ்சத்தில் அமர்ந்தபடி உறைகி ழித்து
மடித்திருந்த கடிதத்தைப் படிக்க லானாள்
கொஞ்சுதமிழ் எழிலினிலே ஒன்றிப் போன
கார்குழலி இன்பமெதைத் தேடு கின்றாள்?

369 இத்தோடு புகைப்படமும் இணைத்துள் ளோம்நீ
இட்டிருந்த கட்டளைக்கு அடிப ணிந்தோம்!
முத்தான கையெழுத்து இதனைச் சொல்லும்
முறுவலிக்கும் இன்பத்தின் உளந்து டிக்கும்!
பித்தான தாயுள்ளம் புகைப்ப டத்தைப்
பிடித்தபடி விரித்துவைத்துப் பார்க்கும் போதில்
செத்துப்போ என்றுசின வார்த்தை சொல்லி
செவ்விமிகு இன்பத்தை நோக்கும் ஓர்ஆள்

370 அன்பையெலாம் ஒருசேரத் திரட்டிப் பெற்ற
அருமைமகன் புகைப்படத்தில் முத்த மிட்டு
நின்றிருந்த செல்வியினைப் பார்த்தாள் பின்னர்
நினைவென்னும் ஆழ்கடலில் நீந்த லானாள்
என்னவோஓர் பாசவெறி மூள மேலும்
எத்தனையோ முத்தங்கள் மகனுக்(கு) ஈவாள்
இன்னவற்றைத் தனைமறந்து இன்பம் செய்ய
இதயத்தில் துப்பாக்கிக் குண்டு பாயும்!

---

*ககனம் = வான்வெளி

371 ஆவென்ற அலறலிலே இன்பம் சாய
அணைத்தபடி புகைப்படமும் நெஞ்சில் தோய
ஓவென்ற கூச்சலொடு சுட்டான் தன்னை
ஓடிப்போய் பிடிப்பதற்கு விரையும் கூட்டம்
சீஎன்று சீறிப்பின் வருவார் தம்மைச்
சினந்திட்டுத் துப்பாக்கி விசைஅ முத்தி
மாய்த்திட்டான் தன்னைத்தான் சுட்டுக் கொண்டு
மல்லாந்த நிலையினிலே தரையில் வீழ்ந்தான்.

372 ஏனென்று அறியாத கூட்டம் நிற்கும்
ஏதொன்றும் காரணமில் லாமல் பாரில்
தேனென்றும் துணையென்றும் ஏற்று கின்ற
திருமிக்க பெண்ணைக்கொல் வாரும் உண்டோ?
தானுந்தன் உயிரைஏன் மாய்க்க வேண்டும்?
தடயமெதும் கிடைக்கிறதா? பார்ப்போ மென்று
துணிந்துசிலர் முன்சென்று பார்த்தார் பையில்
துழாவியபின் ஒருதுண்டுக் கடிதம் கண்டார்

373 கடிதத்தைப் பார்த்தவர்கள் கண்ட செய்தி
கனிஇதழாள் இன்பத்தைப் பெரிதும் அன்பாய்
துடிக்கின்ற இளமைமுதல் விருப்ப முற்றும்
தூய்மைநிறை அவன்காதல் தோற்றுப் போச்சாம்!
நடிக்கின்றாள் என்றறியா அவனோ உண்மை
நற்காதல் எண்றெண்ணிச் சிலநாள் முன்னாள்
படித்தானும் காதலினை; ஆனால் அந்தோ
பாவைசெய்த மோசடியால் வாழ்வே போச்சாம்!

374 இன்றென்றும் நாளையென்றும் மறுநாள் என்றும்
இப்படியாய்ப் பலநாட்கள் எய்த்து விட்டு
அன்றுடம் ஏதோபொய்ச் சாக்குச் சொல்லி
அருமைமிகு காதலினை ஏற்றி டாமல்
திண்டாடச் செய்திட்டால் பெண்ணின் பத்தைத்
தெரியாதா எனக்கிங்கு? என்ற போதும்
வண்டுவிழி இன்பத்தைத் துய்ப்ப தற்கு
வெறியேறி நின்றிருந்த என்பால் பொய்யாய்

375 ஆசைவளர் வதுபோல நடித்து வந்தாள்
அதைஎனக்குப் பொறுப்பதற்கு முடிய வில்லை
ஆசைவெறி முட்டிவிட்ட அவளே என்றன்
ஆசைக்குக் கல்லறையைச் சமைத்து நின்றாள்
பேசமுடி யாதபெரும் சினமேற் றிட்டாள்
பலமுறைகள் அவளிடத்தில் வாழ்வின் பெய்த
கூச்சமின்றி போய்க்கேட்டேன்; இரக்கும் உள்ளேன்!
கும்பிட்டாள்; ஏதோஓர் உணர்ச்சி உந்த

376 விரும்பினளாம் எனையேற்க பொய்மை அன்றோ?
விட்டிடுங்கள் எனக்கினிமேல் இல்வாழ் வெல்லாம்
துரும்பளவும் வேண்டாமென் றியம்பு கின்றாள்
நுடிக்கின்ற ஆசைமனம் அறிந்தி டாமல்
கரும்பாகப் பலமொழிகள் சொன்ன போதும்
கண்டிப்பாய் மறுத்திட்டாள்; இனிஏன் இந்தத்
திருமகளும் புவிமீது வாழ்தல் வேண்டும்?
தெளிவாகச் சிந்தித்தே சுட்டு விட்டேன்!

377 தன்னிடத்தில் பொய்க்காதல் செய்த பெண்ணைத்
தண்டிக்க எண்ணியதால் சுட்டா னும்;பின்
தன்னைத்தான் சுட்டதுவும் எதற்கோ என்றால்
தண்டிக்கச் சட்டத்தின் துணையைக் கொண்டு
வருவார்கள்! அதுஎதற்கு? குற்றம் சாட்டி
வேற்றவர்கள் தண்டிக்க இடமே வேண்டாம்
ஒருவாறென் கடமையினை முடித்து விட்டேன்
ஒழித்துவிட்டு ஒழிகின்றேன் என்ப தாகும்.

378 முடிவினிலே கையெழுத்து விக்டர் என்னும்
முனகியவா றிருப்பார்கள் சிலபேர்; சில்லோர்
படித்தவரும் உணர்ச்சிக்குப் பலியா கின்றார்
பார்க்கின்றோம் இன்றிதனை என்பர்; வேறு
விடிவொன்றும் இதற்கில்லை என்பார் மற்றோர்!
வந்தவர்கள் எல்லாரும் எலாம்ம றந்து
கொடிப்பொழுதில் அகன்றிடுவர்; வேறென் செய்வார்?
கடுப்பகலென்(று) அறிவிக்க வெயில்கொ ளுத்தும்!

51. ஈழ நாட்டு இளம்வழுதி

379 இளந்தாடி புன்முறுவல் அமைதித் தோற்றம்
இதமான நல்வார்த்தை யாரி டத்தும்
உளங்கொண்டு பழகுகின்ற இனிய நேர்த்தி
உரைச்சுருக்கம் செயற்பெருக்கம் உலக மக்கள்
வளங்கொண்டு வாழ்தற்கு எண்ணும் நெஞ்சம்
வரலாறு படைக்கின்ற பொறுமை கொண்டு
விளங்குகின்ற விரிமார்பன்; ஈழ நாட்டின்
உயர்குடியின் இளம்வழுதி முகில ேைடு

380 உடன்பயின்ற மாணுக்கன்; உயிரின் நண்பன்
ஓயாமல் உழைக்கின்ற தேனீ; வாழ்வில்
தடம்புரண்டு அலைவோரைத் திருத்தும் ஆசான்
தங்கையராய்த் தமக்கையராய்த் தாயா ராக
மடந்தையரை எண்ணுகின்ற தூய நெஞ்சன்
மற்றவர்க்குத் துணைபுரிய விரைவான்; மாசு
தொடமுடியா ஞாயிறென இலங்கி வந்தான்
தொண்டருக்கும் தொண்டரென உயர்ந்து நின்ருன்

381 இன்பத்தின் துணையோடு இல்ல றத்தை
இன்பமாகச் செய்துவந்த முகில னுக்குத்
துன்பத்தின் பிடிஇறுகித் துரத்த பையன்
துணையோடு தாய்நாடு சேர்ந்தான் என்றும்
இன்பமவள் விக்டரொடு பழகி நின்ற
எல்லாமும் அவனறிவான்; எனினும் ஏதும்
அன்புரைகள் சொல்லியதைச் சீர்செய் தற்கு
அவன்சிறிதும் முயலவில்லை; பிறர் இல் வாழ்வில்

382 தனிவாழ்வில் வீணுகத் தானுய்ச் சென்று
தலையிடுதல் குற்றமென எண்ண முற்று
இனிதான இவர்வாழ்வும் முறிந்து போச்சே
என்றுதனக் குள்ளாக வருத்த முற்ருன்!
மனிதருக்கு இருப்பதுவோ குறைந்த ஆயுள்
மண்ணுலகில் அதற்குள்ளே எல்லை யின்றி
இன்பதுன்பம் எய்துகிருர் அட, சீ! மாந்தன்
எண்ணில்லா இன்னலிலே மாய்கின் ருனே!

383 சுடப்பட்டாள்; உயிரிழந்தாள்; இன்பம் என்னும்
செய்தியினைத் தாள்களெல்லாம் பரப்பும்; வைக்கோல்
படப்பினிலே தீ எரியின் உழவன் நெஞ்சம்
படபடக்கும் அதுபோல வழுதி உள்ளம்
சுடப்பட்ட வஞ்சியினை எண்ணி நோகும்
சுமைமிகுந்த மனத்தோடு முகில னுக்குக்
கடப்பாட்டின் காரணத்தால் விரைவு மிக்க
கம்பிவழிச் செய்தியினைக் கொடுக்க லானான்

384 முறிவுற்று செல்வியினை மணஞ்செய் துள்ள
முகிலனுக்கு இதைச்சொல்லல் தேவை தானா?
அறிவுற்ற வழுதியிதைச் சிந்தித் திட்டான்
அதன்பின்னர் இன்பத்தின் உண்மை வாழ்வை
செறிவான நல்வாழ்வை, தூய கற்பைச்
சீராக அவள்காத்துக் கொண்ட வற்றைக்
குறிப்பிட்டு விரிவாக மடலில் தீட்டி
கொலைநிகழ்ச்சி உடனறிய தந்திச் செய்தி

385 கொடுத்திட்டான் அதன்பின்னர் உலக வாழ்வின்
கோரத்தை நினைத்தபடி கண்து யின்றான்!
முடுக்கிவிட்ட விசையுந்து சீராய் ஓட
முகிலன்முன் எழிலனுமே இனிதாய் ஆட
அடுக்கியுள்ள விளையாட்டுப் பொருளைச் செல்வி
அழகுறவே பரப்பிவைத்துச் சிரித்துப் பேசி
தடுக்கவொண்ணா மகிழ்ச்சியினில் திளைத்த நேரம்
தந்தியினைக் கொண்டுதந்தார் செய்தி யாளர்!

386 அயல்நாட்டுத் தந்தியினில் கண்ட சேதி
அங்கொருத்தி உயிர்நீத்த சாவுச் செய்தி
இயல்பான பழக்கத்தால் இருமிற் காக
இரண்டுதரம் தலைசொரிந்தார் பேனில் லாமல்!
வயல்தீய்ந்த போதினிலா மகிழ்ச்சி பூக்கும்?
வருத்தத்தில் தோய்பவரா இருமிகொ டுப்பார்?
*பெயலில்லா நிலமாக அவர்இ ருந்தார்
பேச்சின்றி ஊழியரும் நீங்கிப் போனார்!

*பெயல் = மழை

52. கண்ணீர்த் துளிகள் !

387 இளம்வழுதி சொல்வதெல்லாம் உண்மை தானு?
இங்கெமக்கு வந்திருக்கும் செய்தி கண்டு
உளம்நம்ப மறுக்கிறதே! உண்மை யில்லா
ஒருசெய்தி என்றிதுவும் ஆகி டாதோ?
வளமிக்க பண்பாலே என்னைக் கூட
விடத்துணிந்த அவளுக்கோ துன்பச் சாவு?
குளம்போலத் தேங்கியுள்ள கண்ணீர் யாவும்
கொட்டுமொரு அருவியெனத் தரையில் வீழும்!

388 அவளிறந்தாள் எனும்செய்தி அறிந்த பின்னும்
அவனிப்பினில் இன்னுமுயிர் தரித்துள் ளேனே!
தவறிழைத்தேன் நானென்று தெரிந்தும் என்னைத்
தவருகப் பேசாத அன்பின் ஊற்று
அவலத்தை எனக்களித்துப் போய்விட் டாளே!
அடடா என் வாழ்க்கையினில் தொடர்ச்சி யாக
கவலையொன்றே பின்தொடரும் இதுஏன் என்று
கைகால்கள் செயலற்றுப் போய்இ ருந்தான்

389 உனைச்சற்றும் விரும்பாத பெண்ணி டத்தில்
உரிமையினைப் பாராட்டி மனைவி யாக்க
நினைத்ததுவும் அல்லாமல் முயற்சி செய்து
நினைப்பினிலே தோல்வியினைப் பெற்ற தாலே
அனைத்தையும் மறந்தவனுய் அற்ப ஞக
அறிவற்ற இழிசெயலைச் செய்த தீயோய்!
எனைத்துன்பக் கடலுக்குள் ஆழ்த்தி விட்ட
இரக்கமில்லாக் கொடும்பாவி! விக்டர், நீ ஏன்

390 இன்பத்தைப் போய்க்கொன்ருய்? அதற்கு முன்னுல்
இங்கிருக்கும் எனையன்ருே கொல்லல் வேண்டும்?
பெண்பித்துப் பிடித்தவனே பிழைசெய் தாயே!
பிறன்மனையை நோக்காத ஆண்மை சற்றும்
உன்னிடத்தில் இல்லாது போன தேன்? நீ
உலுத்தவனுய் உலகத்தில் ஏன்தான் வாழ்ந்தாய்?
கண்மணியைக் கொன்றுவிட்டாய்; போடா!
போ! போ!
காமுகனே! என்நினைவில் நீநில் லாதே!

391 முகிலனுளத் துயர்கொண்டு கண்ணீர் சிந்தி
முக்குவிட்டான்; பேச்சின்றி விம்ம லானன்
திகிலுற்றுத் துயர்வடிவாய்ச் செல்வி நின்ருள்
தங்கியுயிர் போனதுவே கயவ ஞலே
இகழ்ச்சியுரை பலசொல்லி அரற்ற லானுள்
இரக்கமில்லா அரக்கமனம் படைத்த விக்டர்
முகமறியாள் என்ருலும் அளவில் லாத
மூர்க்கமவள் பேச்சினிலே தெறிக்க லாச்சு!

392 நேரினிலே பார்க்காமல் உரிமை யோடு
நான்தங்கை எனத்தன்னைச் சொல்லிக் கொண்டு
கூரியதன் அறிவாலே பண்பா டோங்கிக்
கலக்கமில்லா நெஞ்சுறுதி மிகவும் பெற்று
சீரியதன் காதலினைத் துறந்து விட்டுச்
சிறப்பாக யாம்வாழ விருப்ப முற்ற
காரிகையை இன்பத்தைப் பிரித்து விட்ட
காலனெனும் கொடியோனே நீயும் மாள்க!

393 எவராலும் முடியாத தியாக வாழ்வை
எனக்காக ஏற்றிருந்த இனிய தங்காய்!
விவரிக்க இயலாத துயரம் மண்ட
வெதும்பியுளம் சாம்புகிறேன் உன்ற ஞேடு
உரையாடி மனமகிழ நினைத்தி ருந்தேன்
உலகத்தைப் பிடிக்காமல் போய்விட் டாயே!
தரையினிலே அமர்ந்தபடி அழுதாள் செல்வி
தாய்க்கண்ணீர் துடைப்பதற்கு எழிலன் வந்தான்

294 விழிநீரைக் கொட்டுகின்ற செல்வி முன்னர்
விளையாடிக் கொண்டிருந்த எழிலன் வந்து
மொழியொன்றும் பேசாமல் அழுவ தற்கு
முகிழ்த்திட்ட காரணமும் அறிந்தி டாமல்
அழுதிட்டான் 'ஓ'வென்னும் குரலெ முப்பி
அவனைத்தன் கைகளிலே அணைத்துக் கொண்டு
பழுதில்லாச் செல்விமிகத் துக்கங் கொண்டு
பலசொல்லி அழுதிட்டாள்; களைத்துப் போனுள்!

53. இன்பம்! இன்பம்!! இன்பம்!!!

395 கடுந்துயர் யாவும் மறந்திடவே— காலம்
கடுகி விரைந்து கழிந்திடவே
எடுத்த பணிகளைச் சீராக— மிக
எழிலுறச் செய்தனர் நேராக!
சுடுமணல் தன்னில் செருப்பின்றி— கால்
சுட்டுப் பொசுங்க நடந்தவர்கள்
கொடுமை ஒழித்து மகிழ்வுறுவர்— பூக்
குலுங்கிடும் சோலையைக் காண்கையிலே!

396 தொல்லையில் தோய்ந்த முகிலனுளம்— மனச்
சோர்வுகள் நீங்கிக் களிப்புறவே
எல்லையில் இன்ப உருவெடுத்து— குடும்பம்
யாவும் மகிழ்வுற பெண்பிறக்கும்!
உள்ளம் உவந்திடத் தேனூறு— என
ஒன்று பிறந்துமெய் இன்பூட்டும்
உள்ளம் பொருந்திய காதலர்க்கு— உடல்
உறவில் முகிழ்ந்த இளங்குருத்து!

397 புத்துயிர் ஒன்று பிறந்ததம்மா!— எழிற்
பெண்மக வொன்று பிறந்ததம்மா!
முத்தமிழ் தன்னை முழங்கிடவே— ஒரு
மணமலர் வந்து பிறந்ததம்மா!
பற்றினை விட்டவர் தம்மையுமே— ஓடிப்
பற்றி இழுக்கும் முறையினிலே
நற்றவம் செய்து நிலத்தினிலே— நலன்
நாட்டிட வந்து பிறந்ததம்மா!

(வேறு)

398 இன்பத்தின் நினைவாகத் தன்கு ழந்தை
இளையமகள் இன்பமென யாவ ராலும்
அன்புடனே அழைப்பதற்கு விருப்ப முற்று
அதைமனத்தில் நினைத்தவனாய் முகிலன் நிற்க
பொன்மாது செல்வியிதை அறியாள் நல்ல
பூமுகத்தில் மகிழ்ச்சிமிக அழகு கூட்டும்
தன்விருப்பைச் சொல்லுதற்குத் தயக்க முற்றுத்
தனியாக முகிலன்போய் இருந்து கொண்டான்!

399 தனித்திருந்த முகிலன்பால் தென்றல் போல
தையலிளம் செல்விவந்து நின்றாள்; பின்னர்
இனித்திருந்த இல்லறத்தின் சுவையைக் கூட்ட
இன்பூட்டும் குழந்தைபிறந் திருக்கும் வேளை
மணிக்கணக்கில் சிந்தனையில் மூழ்கல் என்ன?
மறைக்காமல் எனக்கிதனைச் சொல்தல் வேண்டும்
கனிந்தமனப் பெரியவர்கள் பலரும் என்னைக்
கேட்கின்றார் குழந்தைபெயர் என்ன என்று!

400 அவரிடத்தில் என்னசொல்ல என்று கேட்டாள்
அவன்சிறிது முறுவலித்தான் அமைதி பூத்தான்
எவரிடத்தில் கேட்கின்றேன் உம்மை அன்றோ?
ஏன்பேசா திருக்கின்றீர்? மௌனம் நீக்கி
அவளுக்(கு) இடவிரும்பும் பெயரைச் சொல்லின்
அனைவர்க்கும் தெரிவிப்பேன் என்று ரைத்தாள்!
கவலைவிடு! நீவிரும்பும் பெயரைச் சொல்லு!
கட்டாயம் அப்பெயரை வைப்போம் என்றான்.

401 நீங்களேதும் பெயரெண்ணி வைத்தி ருப்பீர்
நினைத்திருந்தேன் அவ்வாறு; நீங்கள் அன்றோ
திங்கரும்பாம் குழந்தைக்குப் பெயரைச் சூட்டித்
தெரிவிக்க வேண்டுமெனச் சொன்னாள்; என்றன்
மாங்கனியே! மதுச்சுவையே! மலரே! நீஉன்
மனமென்னும் பெயர்சூட்டி மகிழ்ந்தால் என்ன?
நீங்காத காதலன்பு மிக்க உன்றன்
நினைப்போன் முடிவாகும்; மாற்றம் இல்லை!

402 பேர்சூட்டத் தனக்குரிமை நல்கி விட்ட
பேராளன் முகிலனைவாய் புகழும்; நல்ல
பேரென்ன சூட்டுவது எனச்சிந் தித்தாள்
பலபெயரை மனத்திற்குள் எண்ணி எண்ணிச்
சோர்ந்தபடி அமர்ந்திருந்த செல்வி உள்ள
சோர்வகற்றித் தெம்போடு எழுந்துட் கார்ந்தாள்
நேர்சொல்ல முடியாத நல்ல தோர்பேர்
நெஞ்சத்தில் நினைவுவர மகிழ்ந்தின் புற்றாள்!

403 என்னையவள் பார்த்ததில்லை; எனினும் தன்னை
என்னுடைய தங்கையென ஏற்கச் சொன்னாள்
அன்னையென ஆனபின்னும் மகனை விட்(டு)
ஆருயிராம் உம்மைப்பிரியத் துணிந்தாள் அந்த
பொன்னிகர்த்த பாவை'இன்பம்' எதற்காய்
வாழ்வைப்
பொருட்டாக எண்ணவில்லை? எனக்காய் அன்றோ?
இன்னமுதாம் அவள்பெயரை குழந்தைக் கிட்டால்
ஈடில்லா மகிழ்வுறுவேன் என்றாள் செட்டாய்!

404 விந்தையிது! தான்நினைத்த பெயரைச் செல்வி
விளம்புகிறாள் விரித்துரைக்க இல்லை வார்த்தை!
சிந்தையெல்லாம் குளிர்ந்தவனாய்ச் சிரிப்பைச் சிந்தி
செல்வியின்பால் பெருமதிப்புக் கொண்டான்;
பின்னர்
மங்கையைப்போல் ஒருகூட்டம்; திருவி ழாதான்!
மகிழ்ச்சிமிகக் கொண்டிருந்த வேளை அங்கு
சந்தையைப்போல் பேச்சரவம்! விருந்து வேட்டு!
சாப்பாட்டுப் பரிமாறல் நடக்கும் பாட்டுக்

405 கச்சேரி ஒருபுறத்தில் நிகழும்; நல்ல
கன்னியரின் தமிழ்நடனம் அதன்பின் தோன்றும்!
துச்சமடா வாழ்வெனக்(கு) என்று வாழ்ந்த
தூயவளாம் இன்பத்தின் நிழற்படத்தில்
உச்சிதொட்(டு) உள்ளங்கால் வரைக்கும் ! மாலை
உயர்ந்தவகை சந்தனத்தின் இனிய நாற்றம்!
இச்சிக்கும் இளமுயிரைப் புதிது டுத்தி
'இன்பம்'காண் இவளென்று இட்டார் நற்பேர்.

(வேறு)

406 வேடிக்கைப் பேச்சாலும் உள்ள மகிழ்வாலே
பாடிக்கை தட்டிச் சிரிப்பூட்டி இன்பம்
நிறைப்பவரும் வெற்றிலையில் சுண்ணும்பை வாகாக
விரலால் தடவிச் சுவைத்துத் திரிபவரும்
பேர்சூட்டும் நல்விழாவின் சீர்கூட்ட வந்தவர்கள்!
சீர்வரிசை அன்புப் பரிசென்(று) எவரும்
எதுவும் தராதீர்கள்! தந்தால் பெறமாட்டோம்!
என்பதாகப் பிள்ளையைப் பெற்றவர்கள்
கண்டிப்பாய்
முன்பே விழாவமைத்துக் கூப்பிடும் நேரத்தில்
சொல்லியதால் யாரும் பரிசு வழங்கவில்லை!
நல்லதுதான்! யார்தடுப்பார், என்பரிசை
என்றுரைத்துச்
சின்னஞ் சிறுமலரைக் கையில் எடுத்துவைத்துக்
கன்னஞ் சிவக்கநல் முத்தம் பொழிந்தபடி
'இன்பமின்பம்' என்ருள்ஓர் பெண்மணி!
உண்மையன்றே?
அன்புப் பரிசதனைக் கண்டுவந்த எல்லாரும்
உள்ளம் மலர வழங்கிய வாழ்த்தின்ப
வெள்ளம் நிலைத்தினிது வாழ்க.

சி. எம். எஸ். அச்சகம், பாளையங்கோட்டை

கதிரவன் பதிப்பக வெளியீடுகள்

1. நாடும் ஏடும் ரூ. 3 - 50
   (ஆய்வுக் கட்டுரைகள்)

2. கட்டுரைக் களஞ்சியம் ரூ. 3 - 50
   (பொதுக் கட்டுரைகள்)

3. இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள் ரூ. 3 - 50
   (B. A. & B. Sc பட்டப்படிப்பு)

4. வளனுர் வழிகாட்டி ரூ. 4 - 50
   P. U. C. 1976
   (செய்யுளும் உரைநடையும்)

5. இலக்கிய நினைவுகள் ரூ. 1 - 50
   (P. U. C துணைப்பாட நூற் சுருக்கம்)

6. இயற்கை விருந்து ரூ. 1 - 50
   (P. U. C. துணைப் பாட நூற் சுருக்கம்)

கதிரவன் பதிப்பகம்

12 அ, கிருட்டினன் கோவில் வடக்குத் தெரு,

பாளையங்கோட்டை,

திருநெல்வேலி 627 002.